18 JUL 1998

# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 2 சனிக்கிழமை [18 07- 1998] SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம் :07

# 'சார்க்' உச்சிமாநாட்டை ஒட்டி
# கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்

## சகல தலைவர்களும் வருவது உறுதி

கொழும்பு, ஜூலை 18

எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற இருக்கும் சார்க் மாநாட்டையொட்டி அடுத்த வாரம் முதல் தலைநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதி தீவிரப்படுத்தப்படவிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாநாட்டில் பங்கு பற்றுவதை ஏழு சார்க் நாடுகளின் தலைவர்களும் உறுதிப்படுத்தியிருப்பதாக சார்க் அமைப்பின் செயலாளர் நாயகம் நயூப் யூ ஹுசெயின் தெரிவித்தார்.

சார்க் நடைபெறும் காலத்தில் கொழும்பில் மட்டுமல்லாது தென் இலங்கை முழுவதிலும் பெரிய அசம்பாவிதங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறு பொலீஸார் மற்றும் முப்படையினர் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவந்தது.

பாகிஸ்தான் பிரதமர் நவாப்ஷரீப், இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ஆகியோர் இங்கு தங்கியிருக்கும்போது அவர்களுக்கு உச்சப் பாதுகாப்பை வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(உ-3-7)

## தமிழ்ப் பத்திரிகையாளர் தடுப்புக் காவலில்!

கொழும்பு, ஜூலை 18

நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட "வீரகேசரி பத்திரிகையின் கொழும்பு அலுவலகச்செய்தியாளர் எஸ். ஸ்ரீகஜன் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை என்றும் —

அவர் கைது செய்யப்பட்டதற்கும் பத்திரிகைக்கும் தொடர்பு இருக்காது என்று தாம் கருதுவதாகவும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கப்பல் சேவை 30 ஆம் திகதி அளவில்!

திருகோணமலை, ஜூலை18

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல்சேவை எதிர்வரும் 30ஆம் திகதி அளவிலேயே ஆரம்பமாகும் என வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சேவையை ஆரம்பிக்கக் கொரியநாட்டுக் கப்பல் ஒன்று ஏற்கனவே வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது.

அந்தக் கப்பல் நிறுவன அதிகாரிகள் தாம் கொரிய நாட்டுக் கொடியுடனேயே சேவையை நடத்த முடியும்; இலங்கைக் கொடியுடன் சேவையை நடத்தமுடியாது என்று தெரிவித்து சேவையை நடத்த மறுத்து விட்டனர் எனக் கூறப்பட்டது. இதனாலேயே சேவையை ஆரம்பிக்க முடியாமல் போனது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் அந்தக் கப்பலை

( 8ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

வவுனியா, ஜூலை 18

வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்துக்கு நேற்றுக்காலை 7 மணியளவில் சென்ற பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இனந் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த என். சிவானந்தராசா (45 வயது) என்ற அந்த பொலீஸ் கான்ஸ்டபிள் புலனாய்வுப் பிரிவில் பணிபுரிபவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-21-164)

## புளொட் எம். பியின் இறுதிக் கிரியை இன்று

வவுனியா, ஜூலை 18

படுகொலை செய்யப்பட்ட வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதன், அவரது புதல்வர் வத்சலன், மைத்துனர் தஸ்ரனிஸ்லோஸ் ஆகியோரின் இறுதிச் சடங்குகள் இன்று இறம்பைக்குளம் சேமக்காலையில் நடைபெறும்.

தற்போது அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள பூதவுடல்கள் இன்று காலை 9.00 மணிக்கு நகரசபை உறுப்பினர்களால் பொறுப்பேற்கப்படும்.

பிற்பகல் 2.30 மணி வரை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## எம். பி. கொல்லப்பட்ட இடத்தில் 'ரி56' ரைபிள்

கொழும்பு, ஜூலை 18

கிளைமோர் குண்டுத் தாக்குதல் மூலம் வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதன் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் இருந்து பாதுகாப்புப் படையினரால் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரி.56 ரக துப்பாக்கிகள் மற்றும் அவற்றுக்கான ரவைகள் படையினரால் கண்டெடுக்கப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

(உ-7)

## அக்கராயனில் பேரணி

வவுனியா, ஜூலை 18

நிவாரண வெட்டைக் கண்டித்து அக்கராயனில் நேற்றுப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

கிளிநொச்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப்பேரணி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகி கிளிநொச்சி அரச செயலகத்தைச் சென்றடைந்தது.

பேரணி முடிவில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பொன். விநாயகமூர்த்தி தலைமையில் கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

அங்கு வைத்து ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலை ஒத்திவைத்தால் பெரும் மக்கள் போராட்டம்!

## ஐ.தே.க., ம.ஐ.மு., ஜே.வி.பி. எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 18

அடுத்த மாதத்தில் நடைபெற விருக்கும் தென்னிலங்கையின் ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தாமல் ஒத்திவைப்பதற்கு அரசு முயற்சிக்குமானால், தெற்கில் பெரும் மக்கள் போராட்டம் வெடிக்கும்.

பிரதான எதிர்க்கட்சியான ஐ தே. க, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே. வி. பி. ஆகியன இவ்வாறு அரசை எச்சரித்துள்ளன.

மாகாணசபைத் தேர்தல்களை ஒத்திவைக்கும் எந்த முயற்சியையும் ஒன்று கூடி எதிர்ப்பதென இந்த மூன்று கட்சிகளும் முடிவு செய்துள்ளமை தெரிந்ததே.

தற்போதைய பாதுகாப்பு நிலைமைகளிலும் பார்க்க மோசமாகஇருந்த 1989-1994 காலப்பகுதியில் கூட தேர்தல்கள் ஒத்திவைக்கப்படாமல் நடத்தப்பட்டன.

எனவே பாதுகாப்பு நிலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் சத்திரசிகிச்சைப் பிரிவு வாகனத்தைக் காணோம்?

வெளிநாட்டிலிருந்து இலங்கை இராணுவத்திற்கு வழங்கப்பட்ட மூன்று நடமாடும் சத்திரசிகிச்சைப் பிரிவு வாகனங்களில் ஒன்று காணாமல் போயுள்ளதாக செய்தி நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சு ஊடாக இராணுவத்திற்கு இது வழங்கப்பட்டிருந்தது.

வவுனியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட மேற்படி வாகனம் பற்றி தற்போது தகவல் ஏதும் இல்லை எனக் கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளால் இது எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் நிலவுவதாகவும் அச் செய்தி மேலும் தெரிவித்தது.

(உ-21)

## மின் விநியோகம் துண்டிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 18

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான மின் விநியோகம் நேற்று முன்தினமிரவு முதல் நேற்று மாலை வரை துண்டிக்கப்பட்டிருந்தது.

இங்கினியாகல ஊடான பிரதான மின் விநியோகம் தான் வீரக்கொட என்னுமிடத்தில் துண்டிக்கப்பட்டது.

33 ஆயிரம் கே. வி. மின் கேபிள்கள் ஒன்றோடு ஒன்று மோதியதால் தீப்பற்றி எரிந்ததாலேயே மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது என்று இலங்கை மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

(உ-21)

## டக்ளஸுக்கு இப்போது சத்திரசிகிச்சை இல்லை

கொழும்பு, ஜூலை 18

வெளிநாட்டில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ள யாழ். மாவட்ட எம். பி. டக்ளஸ் தேவானந்தாவுக்கு இப்போதைக்கு சத்திர சிகிச்சை எதுவும் செய்யப்படமாட்டாது. அவரது உடல்நிலை தேறிய பின்னரே அது பற்றித் தீர்மானிக்கப்படும்.

கொழும்பு செய்தி வட்டாரங்கள் இவ்வாறு தகவல் வெளியிட்டன.

அவரது ஒரு கண்ணின் பார்வை நரம்பு பாதிக்கப்பட்டுள்ளது. அந்த நரம்பைச் சீர் செய்வதற்காக ஒரு சத்திர சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது. அவர் பேசும் திறனும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதற்காகவும் மற்றும் பிற காரணங்களுக்காகவும் அவரது மூளையில் சத்திர சிகிச்சை செய்யப்படவேண்டி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கடும் மழை

கொழும்பு நகரில் நேற்று முன்தினம் இரவு ஆரம்பித்த மழை நேற்று இரவு வரை தொடர்ந்து பெய்தவண்ணம் இருந்தது.

கொழும்பு மாநகரப்பகுதியிலும் அதன் சுற்றுப்புறப் பகுதியிலும் வெள்ள நிலை ஏற்பட்டுள்ளது. மரங்கள் முறிந்து வீழ்ந்து கிடந்தன. பாரிய விளம்பரப்பலகைகள் சரிந்து கிடந்தன.

இதனால் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. பாடசாலைகள் அரச அலுவலகங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டிருந்தன

(உ-3-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழி விவகாரம் குறித்து
# ஆணைக்குழு அமைத்து விசாரிக்குக!

## நிந்தாவூர் பிரதேச சபையில் தீர்மானம்

அம்பாறை, ஜூலை 18

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் 400 சடலங்கள் வரை புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படும் விவகாரம் குறித்து அரசாங்கம் ஆணைக்குழு ஒன்றை நியமித்து நீதியான விசாரணை நடத்தவேண்டும்.

கிழக்கிலங்கையைச் சேர்ந்த நிந்தாவூர் பிரதேச சபையின் மாதாந்த செயலமர்வில் மேற்கண்டவாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தலைவர் எம்.ஐ. அகமட் தலைமையில் நடைபெற்ற இந்த மாதாந்த செயலமர்வில் குறித்த தீர்மானம் தொடர்பான பிரேரணையை சுயேச்சை உறுப்பினர் பி.ரீ. தர்மலிங்கம் முன்மொழிந்தார்.

அவர் இந்தப் பிரேரணை குறித்து உரையாற்றுகையில்—

'சூரியகந்த' புதைகுழி விவகாரத்தில் மிகவும் அக்கறை கொண்ட இந்த அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக அதனைப் பிரசாரம் செய்து வந்தது. கிருஷாந்தி கொலை வழக்கின் முதலாவது குற்றவாளி செம்மணியில் 400 சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாகக் கொடுத்த வாக்கு மூலத்தின் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமித்து இந்த அரசாங்கம் நீதி விசாரணை நடத்தவேண்டும்.

எமது பிரதேசங்களைப் பொறுத்தவரை சிறுபான்மையான தமிழ், முஸ்லிம் மக்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. கல்முனைக்கும் கொழும்புக்கும் இடையில் போக்குவரத்து பஸ் ஒன்று தனமல் விலவுக்கு அண்மையில் வழி மறிக்கப்பட்டு ஆயுதந் தாங்கியவர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளது. அதில் பயணஞ் செய்த தமிழ் முஸ்லிம் பெண்களின் மர்ம உறுப்புக்கள் கூட சோதிக்கப்பட்டு நகைகளும், பெருந்தொகைப் பணமும் அபகரிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று அண்மைக் காலமாக ஆயுதந் தாங்கியவர்கள் இரவு வேளைகளில் சோதனை என்ற போர்வையில் பெரும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் —. என்றார்.

(ஐ-8-14)

## குருநாகலில் கூட்டுறவுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18

கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை குருநாகலில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இலங்கை முழுவதிலுமுள்ள கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் யாழ். மாவட்டத்திலிருந்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (உ-5)

## மூவர் விடுவிப்பு

தென்மராட்சி, ஜூலை 18

ஆனையிறவு குஞ்சுப்பரந்தன் பகுதியில் வீடு பார்க்கச் சென்றபோது படையினரால் பிடிக்கப்பட்ட மூன்று பேர் நேற்று இராணுவப் பொலீஸாரால் பளை பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் யாழ். அரச அதிபர் ஊடாக அவர்களின் தற்போதைய இடங்களுக்கு அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் தர்மலிங்கம் (வயது49), பரந்தன் குஞ்சுப்பரந்தனைச் சேர்ந்த பொன்னையா இராமச்சந்திரன் (வயது 30), பொன்னையா பவளசிங்கம் (வயது 28) ஆகியோரே ஒப்படைக்கப்பட்டவர்களாவர்.

---

உ

ஆனைக்கோட்டை

வண். வடமேற்கில் எழுந்தருளியிருக்கும்

### ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள்
### மஹோற்சவப் பெருவிழா

18-7-98 சனி பகல் 11 மணிக்கு கொடியேற்றம்.
25-7-98 சனி பிற்பகல் 5 மணிக்கு சப்பறத்திருவிழா.
26-7-98 ஞாயிறு பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழா.
27-7-98 திங்கள் பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழா.
28-7-98 செவ்வாய் மாலை 3 மணிக்கு பூங்காவனத் திருவிழா

மேற்படி விழா ஆதின பிரதம குரு தலைமையில் நிகழ்வுறும்.

தெய்வீக சொற்பொழிவு:
விடயம்: "பெரிய புராணம்"

செஞ்சொற்செல்வன் ஆறு. திருமுருகன்
(ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

ஒவ்வொரு நாளும் பிற்பகல் 4-00 மணி-5-00 மணிக்கிடையில் சொற்பொழிவு நடைபெறும்.

தர்மகர்த்தா சபை,
இந்து இளைஞர் மன்றம்,
உபயகாரர்,

அன்பளிப்பு:-

**எரிக் கணேஸ்**
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4315)

---

### கேள்வி அறிவித்தல்

**கல்வித் திணைக்களம்**
**வலயம் 1, யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தின்
கீழ் வரும் பாடசாலைகளுக்கு
டி. எஸ். டி. திட்டத்தின் கீழ்

**பாடசாலைத் தளபாட விநியோகம்**
**1998**

மேற்படி விடயம் சம்பந்தமாக 06-07-1998 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளிவந்த கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 05-08-1998 ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கும் கடைசித் திகதி 30—07—1998 ஆகும்.

நா. சுந்தரலிங்கம்
கல்விப் பணிப்பாளர்,
வலயம் 01, யாழ்ப்பாணம்.

(சி/4314)

---

### நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்.

அகல வெண் திரையில்

ஒன்பது வருட இடைவெளியின் பின் மீண்டும் திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

**18—07—98 சனி**

சுப்பஸ்டார் ரஜனி
மீனா - செந்தில்,
வடிவேல் நடித்த

**முத்து**
(சினிமாஸ்கோப்)

காட்சிகள்:-
காலை — 10-30 மணி
பிற்பகல் — 2-30 மணி

(57670)

---

### லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

சனி, ஞாயிறு
விஜயகாந்த் - ப்ரிதா
ஆகியோர் நடித்த
**தர்மா**

திங்கள், செவ்வாய்
பிரபுதேவா, சரத்குமார்
ரோஜா, மனோரமா
நடித்த
**இந்து**

நேரம்:-10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No: 070 - 212223

(57502)

---

### ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

மம்முட்டி - அஞ்சு
கோசி, மஞ்சுளா
விஷ்ணுவரதன் நடித்த

**சத்திரிய வம்சம்**

அடுத்த வெளியீடு!
இந்தியன்

தினசரி
(புதிய நேரம்)

(சி/4222)

---

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
### பழையமாணவர் சங்கம்
### நிர்வாகசபைக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் நாளை (19-07-1998) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

நிர்வாக சபை உறுப்பினர்கள் தவறாது சமுகம் அளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

ஐ. தங்கேஸ்வரன்
செயலாளர்

(சி/4317)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சாந்தகுமாரி ஜெகநாதன்

சங்குவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சாந்தகுமாரி ஜெகநாதன் (A.G. A. Office) நானாட்டான்) காலமாகி விட்டார். இவர் ஜெகநாதனின் அன்பு மனைவியும், சங்குவேலி செல்லையா அன்னபூரணத்தின் அருமை மகளும் அளவெட்டி தம்பிராசா சிவபாக்கியம் ஆகியோரின் மருமகளும் நேமிகா, இந்துஷன், பிரசன்னா ஆகியோரின் தாயாரும், தவராசா (சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்), திருமதி கமலாம்பிகை சுகரட்ணம் (கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), திருச்செல்வம் (லங்கா சிமெந்து லிமிட்டெட், K.K.S) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-07-98 மாலை 3 மணிக்கு நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
தவராசா
(சகோதரன்)

"கமலகிரி"
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(57666)

### சின்னத்தம்பி மதியாபரணம்

(ஓவசியர்)

கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மதியாபரணம் (ஓவசியர்) கொழும்பில் காலாமாகிவிட்டார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18-7-98 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகிறேன்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி. இரத்தினசபாபதி (சகோதரர்)
(சிவானந்தன்)

ஆனைப்பந்தி.

(57667)

### வெற்றிவேலு ஜெகதீசன்

(உயர் அதிகாரி இலங்கை வங்கி, கொழும்பு)

மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற வெற்றிவேலு—நாகம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வன் ஜெகதீசன் காலமானார்.

இவர் வண்ணார்பண்ணை காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பதிகளின் மருமகனும், இரங்கநாயகியின் அன்புக் கணவரும், சுகன்யா, லாவண்யா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சத்தியசீலன், சரோஜினிதேவி, காலஞ்சென்ற மனோகரன், சிறிபதி, இந்திராணி, ஸ்ரீனிவாசன் (கொமர்ஷல் வங்கி), சந்திரகாந்தன் (டுபாய்) ஆகியோரின் அருமைச் சகோதரரும், விநாயகமூர்த்தி, பாலசுந்தரமூர்த்தி, சாந்தநாயகி (விரிவுரையாளர், யாழ். இராமநாதன் நுண்கலைக்கழகம்), சௌந்தரநாயகி, கமலநாயகி (ஆசிரியை, யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-07-98) சனிக்கிழமை பொறளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
இரங்கநாயகி
(மனைவி)

B/2. 2/4. SOYSAPURA FLATS,
MORATUWA.
T. P. No. 610639.

(சி/4320)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாவகச்சேரியிலும், யாழ்ப்பாணத்திலும்

# காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகள் அடுத்த வாரம் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 18

காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்து வரும் காங்கேசன்துறையிலுள்ள மனித உரிமைகள் பிரிவினர் எதிர்வரும் 20 ஆம், 21 ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்.மேரிஸ் பாடசாலையிலும் மு. ப. 10. 30 மணியளவில் முறைப்பாடுகளை நேரடியாக பதிவு செய்யவுள்ளனர்.

முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

20 ஆம் திகதி சாவகச்சேரி உதவி அரச அதிபர் பணிமனைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் விவரம்:-

★ சிவராசா ராசநாயகி (மடத்தடி, சாவகச்சேரி.)

★ பரமானந்தன் நகுலாம்பிகை (கச்சாய் வீதி கொடிகாமம்.)

★ ஆறுமுகம் தவமணி (மீசாலை கிழக்கு.)

★ விவேகானந்தா பிறேமலதா (மட்டுவில் கிழக்கு.)

★ சங்கரன் சின்னட்டி (கைதடி தெற்கு.)

★ கந்தையா காசித்தம்பி (மீசாலை கிழக்கு,)

★ கோவிந்தன் கந்தன் (வரணி இயற்றாலை,)

★ அந்தோனிமுத்து இராசம்மா (மீசாலை கிழக்கு)

21ஆம் திகதி அழைக்கப்பட்டுள்ளவர்கள் விவரம்:-

★ சின்னத்துரை தங்கமுத்து (வரணி இயற்றாலை)

★ கதிரவேலு அருந்தவநாயகி (சரசாலை தெற்கு)

★ பொன்னம்பலம் தங்கமணி (நாவற்குழி, தச்சன் தோப்பு)

★ பூபாலசிங்கம் சரஸ்வதி (மறவன்புலோ)

★ இளையதம்பி ஆசையம்மா (மந்துவில் மேற்கு)

★ கந்தசாமி சின்னப்பிள்ளை (விடத்தற்பளை மிருசுவில்)

★ சந்திரசேகரன் சின்னப்பிள்ளை (மீசாலை கிழக்கு)

★ நடராசா விஜயரத்தினம் (வேம்பொடுகேணி பளை)

23ஆம் திகதி சாவகச்சேரி உதவி அரச அதிபர் பணிமனைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் விவரம்:-

★ வல்லிபுரநாதன் நீலாம்பிகை (கச்சாய் வீதி, கொடிகாமம்)

★ சிவநாதன் யோகாம்பிகை (மீசாலை கிழக்கு)

★ சிதம்பரப்பிள்ளை சபாபதி (கைதடி தெற்கு)

★ கதிரவன் செல்லாச்சி (மந்துவில் மேற்கு)

★ ராஜன் ரஜனி (நுணாவில் தெற்கு).

★ இரத்தினசிங்கம் ராஜ்குமார் (கைதடி கிழக்கு).

24 ஆம் திகதி சாவகச்சேரி உதவி அரச அதிபர் பணிமனைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் விவரம்:-

★ பொன்னையா நகுலேஸ்வரம்பிள்ளை (மட்டுவில் தெற்கு).

★ கெங்காதரன் திருமகள் (சரசாலை தெற்கு).

★ ஆறுமுகம் சீதேவிப்பிள்ளை (கச்சாய் வீதி, கொடிகாமம்).

★ சுவாமிநாதன் சிவயோகநாதன் (நுணாவில் மேற்கு).

★ கந்தையா பொன்னம்மா (மட்டுவில், மிருசுவில்).

★ வேலுப்பிள்ளை உதயகுமாரன் (வேரவில் கொடிகாமம் தெற்கு).

★ தாமோதரம்பிள்ளை சிவசாமி (மீசாலை தெற்கு), இரத்தினம் இராசமலர் (தச்சன்தோப்பு)

இவர்கள் அனைவரினதும் முறைப்பாடுகள் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து இராணுவ பொலிஸாரினால் பதிவு செய்யப்படும்.

22 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு யாழ்ப்பாணம் சென். மேரிஸ் பாடசாலைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் விவரம்:-

★ கந்தவனம் பரமேஸ்வரி (கோப்பாய் மத்தி)

★ நவரத்தினம் ராசேஸ்வரி (கோப்பாய் தெற்கு)

★ வல்லி நவரத்தினம் (அச்சுவேலி தெற்கு)

★ குலேந்திரராஜா விஜயா (வீரபத்தினி கோயிலடி பொலிகண்டி தெற்கு).

(ஐ-5)

# சுன்னாகம் தெற்கில் மிதிவெடி அபாயம்

சுன்னாகம், ஜூலை 18

சுன்னாகம் தெற்குப் பகுதியில் மிதிவெடி அபாயம் பெருமளவில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைவிடப்பட்ட இராணுவத் தடையரண்கள் மற்றும் மண் அணைகள் இப்பகுதியில் காணப்படுகின்றன. இப்பகுதியில் மிதிவெடிகளில் சிக்கிப் பல கால்நடைகள் உயிரிழந்தும், காலிழந்தும் உள்ளன.

கடந்த திங்களன்று இடம்பெற்ற மிதிவெடி வெடிப்பொன்றில் ஒரு மாடு உயிரிழந்துள்ளது.

இதே வேளை —

விறகு பொறுக்கிய இருவரும், மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரும் அண்மைக் காலத்தில் இப்பகுதியில் மிதிவெடியில் சிக்கித் தமது கால்களை இழந்தும், காயமடைந்துமுள்ளனர்.

(ஐ-27)

# பல்கலைக் கழகத்தில் கணனி சேவை நிலையம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

உலக பல்கலைக் கழக அமையத்தின் ஒத்துழைப்புடன் யாழ்.பல்கலைக் கழகத்தில் கணனிச் சேவை நிலையம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் பீடாதிபதிகள், பாடத்துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக மாணவர்களும், விரிவுரையாளர்களும் தமக்குத் தேவையான கல்வி நடவடிக்கைகளுக்கு இந்த சேவை நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

# புளொட் எம். பி. மரணம் குறித்து ஈ. பி. ஆர். எல். எவ். கண்டனம்

புளொட் அமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் த. சுபத்திரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைமை உறுப்பினருமான எஸ். சண்முகநாதன் அவர்களின் படுகொலையையிட்டு ஈ. பி. ஆர். எல். எவ். தனது ஆழ்ந்த மனவேதனையைத் தெரிவித்துக் கொள்கிறது.

மனைவி, 3வயதுக்குழந்தை மற்றும் தனது பாதுகாவலர்களுடன் சென்ற சமயம் கொலைசெய்யப்பட்ட நடவடிக்கையானது கோழைத்தனமானது.

1983 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், தான் சார்ந்த சமூகத்தின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காகவும் தன்னால் ஆன பணிகளை அவர் ஆற்றியுள்ளார்.

எமது சமூகத்தில் — குறிப்பாக அரசியல் சமூகத்தனங்களில் — நிலவும் ஜனநாயக விரோதப் போக்குகளுக்கு எதிராக நாம் ஓரணியில் செயற்படவேண்டும்.

கொல்லப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், அவரின் குழந்தை, உறவினர், மெய்ப்பாதுகாவலர்கள் ஆகியோரின் மறைவுக்கு ஈ. பி. ஆர். எல். எவ். ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## நயந்து நல்லருள் செய்வாயே!

"வண்ணையிலே வந்துதித்து வையகத்தோர் மிகவாழ
எண்ணரிய ஆடல்செயும் அருள்தையல் நாயகியே
மண்ணினையும், மக்களையும் மகிதலத்தில் காத்திட்டு
மாண்புடனேவாழ வழி செய்வாய் அன்னையே
தண்ணளிய திருமறையும் திருமுறையும் போற்றும்
உன்தன்
தாளினிலே சிரந்தாழ்ந்து வணங்குகின்றோம்
கண்களினால் நல்விழாப் பொலிவுகாண
நாட்டமுடன் வருகின்றோம் நயந்து நல்லருள்
செய்வாயே!

சோ. கி. பிரணதார்த்திஹரக் குருக்கள்

(வண்ணை சிவன்கோயில் தேவி மகோற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகிறது.)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 18

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயதரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு படசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற வடக்கு—கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி [illegible] பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-8)

## அதிரடி அரங்கு

யாழ். நகரில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. வாகன நெரிசலையும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் காரணங் காட்டி நகருக்குள் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் உட்பட அனைத்து வாகனங்களையும் நிறுத்துவது தொடர்பாக கெடுபிடி ஏற்பாடுகளைக் கொண்ட சட்ட திட்டங்கள் ஓரிரு நாள்களில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதன்படி நகரின் மையப்பகுதியில் இனிமேல் தாம் விரும்பிய இடத்தில் வாகன ஓட்டிகள் வாகனங்களை நிறுத்தமுடியாது.

சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களுக்குத் தனியாகவும், வாடகைக்கார்கள், மினி பஸ்கள், ஓட்டோக்கள், பஸ்கள், லொறிகள் போன்ற வாகனங்களுக்குத் தனித்தனியே வெவ்வேறாகவும் தரிப்பிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும். அந்த இடங்களில் மட்டுமே வாகனங்களை நிறுத்த முடியும்; நிறுத்த வேண்டும்.

அவ்வாறு நிறுத்திவிட்டு நகருக்குள் தமக்குத் தேவையான இடத்துக்கு நடந்து செல்ல வேண்டும்.

இந்த விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை படை வட்டாரங்கள் யாழ். மாநகர ஆணையாளருடன் தொடர்பு கொண்டு செய்து வருவதாகத் தெரிகின்றது.

இனிமேல் யாழ். நகரில் கடை வாசலில் சைக்கிளை நிறுத்திவிட்டு பொருள்கள் வாங்கச் செல்ல முடியாது. இரு நூறோ, முந்நூறோ யார் தூரத்தில் உள்ள தரிப்பிடத்தில் சைக்கிளை நிறுத்தி விட்டு நடந்து வந்துதான் பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டியிருக்கும். சைக்கிள், மோட்டார் சைக்கிள்காரர்களுக்குத்தான் சற்றுச்சிரமம்.

★ ★ ★ ★ ★

யாழ். நகரில் உள்ள பிரபல மகளிர் கல்லூரி ஒன்றுடன் தொடர்புடைய தகவல் இது:-

கல்லூரியின் அபிவிருத்தியில், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அதிக ஈடுபாடு காட்டி வருகின்றது. அங்கு மேற்கொள்ள வேண்டிய சில அபிவிருத்திப் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட சங்கம் கொழும்பில் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டது.

''அபிவிருத்திப் பணிக்காக நிதி வழங்க நாம் தயார். மேற்கொள்ளவுள்ள வேலைகளுக்கான மதிப்பீடுகளை யாழ். கல்வித்திணைக்களத்தின் ஊடாகப் பெற்று வாருங்கள்'' என்று அந்த அதிகாரிகள் தெரிவித்தனராம்.

மதிப்பீடு அனுப்புதற்கான கடிதங்களையும் அந்த அதிகாரிகள் அபிவிருத்திச் சங்கத்திடம் வழங்கியிருந்தனர்.

அந்தக் கடிதங்களை யாழ். கல்வித் திணைக்களத்திடம் கொடுத்து மாதக்கணக்காகிவிட்டதாம்.

ஆனால் இன்னும் அந்த மதிப்பீட்டு அறிக்கை உரியவர்களின் கைக்கு கிடைக்கவில்லை.

இதனால் கவலை கொண்டுள்ள அந்த கல்லூரி அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் இது தொடர்பாக கல்வித்திணைக்களத்துக்கு ஊர்வலம் போனால் என்ன என்று யோசிக்கின்றார்கள்.

இப்போது ஊர்வலம், உண்ணாவிரதம், பகிஷ்கரிப்பு, வழிமறிப்பு என்ற பணிகளைக் கைக்கொண்டால்தானே அதிகாரிகள் கண்விழிக்கின்றார்கள் என்கின்றார் ஒருவர்.

சம்பந்தப்பட்ட உயரதிகாரி ஒருவரின் மனைவிக்கு அந்தப் பாடசாலையில் இடமளிக்க பாடசாலைச் சமூகம் முன்னர் மறுத்திருந்ததுதான், மதிப்பீட்டு அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு அனுப்பப்படாமல், சம்பந்தப்பட்ட கடிதங்கள் கோவைகளுக்குள் தூசுபிடித்துத் தூங்குவதற்குக் காரணம் என்று சில விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இப்போது பதவியேற்றிருக்கும் வலயம் இன் புதிய கல்விப் பணிப்பாளர், இத்தகைய குளறுபடிப்போக்குகளை கல்வித்திணைக்களத்தில் தொடர அனுமதிக்க மாட்டார் என்ற நம்பிக்கை பரவலாக இருந்து வந்தது. அதை உறுதிப்படுத்துவது தற்போது அவரது பொறுப்பாகும்.

★ ★ ★ ★ ★

''யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் திரும்புவதானால் இராணுவம் முகாம்களுக்குத் திரும்ப வேண்டும்'' — என்ற சாரப்பட யாழ். மாநகர புதிய மேயர் சட்டத்தரணி சிவபாலன் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டி, வடக்கு இராணுவ வட்டாரங்கள் மத்தியில் அதிருப்தி அலைகளை பரவலாகத் தோற்றுவித்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

''யாழ்ப்பாணத்தில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இராணுவத்தின் பாதுகாப்பை கோரிப் பெற்றுக் கொண்டு, இராணுவத்தின் முதுகிலேயே அவர் இப்படிக் குத்தலாமா?'' — என்று கேட்கின்றார் ஓர் இராணுவ அதிகாரி.

★ ★ ★ ★ ★

யாழ். பல்கலைக் கழக ஊழியர்கள் இடர்க் காலக் கொடுப்பனவு கோரிப் போராட்டம் நடத்திய பின்னர் அவர்களுக்கு 96 ஆம் ஆண்டு ஜூலை முதல் டிசம்பர் வரையான காலப் பகுதிக்குக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அக் காலப் பகுதியில் விடுமுறையில் நின்றவர்களுக்கும், வன்னியில் இருந்து விட்டுத் திரும்பியவர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வெட்டு இன்றி முழுமையாகக் கிடைக்கவிருக்கிறது.

ஆனால், நெருக்கடியான அக் காலகட்டத்தில் பல்கலைக் கழகத்தை முழுமையாகச் செயற்பட வைக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்துக்காக பல்கலைக் கழகத்துக்குத் தேவையான அவசர, அவசிய பொருள்களைக் கொள்வனவு செய்யக் கொழும்பு சென்றவர்களுக்கு, கொழும்பில் தங்கிய காலத்துக்குக் கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது என நிர்வாகம் தெரிவித்து விட்டதாம்.

''பல்கலைக்கழக பணிக்காகச் சென்ற எமக்கா இந்த நிலை? நாமும் லீவில் நின்றிருந்தால் முழுமையாகக் கொடுப்பனவு கிடைத்திருக்குமே !?'' — என அங்கலாய்க்கிறார்கள் அவர்கள் !

—மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

1½ வயது நிரம்பிய கறுப்பு, மண்ணிறமுடைய அலிசேசன் ஆண் நாய் ( German Seped ) விற்பனைக்குண்டு. இல. 48, மானிப்பாய் வீதி, ( ஈழநாடு முன்பாக ) யாழ்ப்பாணம். (57662)

### தவறிவிட்டது

வங்கி ஆவணங்களும், ஊழியர் சேமலாப ஆவணங்களும் உடைய கைப்பை ஒன்று சுன்னாகத்திற்கும், இணுவில் சுதுமலை வீதிக்கிடையில் பிரயாணத்தின் போது தவறிவிட்டது. இக் கைப்பையைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க.புஸ்பநாதன், மதவடி ஒழுங்கை, சுதுமலைதெற்கு, மானிப்பாய். [57651]

### தேவை

பாவித்த நல்ல நிலையில் உள்ள கடை றாக்கைகள், கண்ணாடி அலுமாரிகள் மற்றும் கடைக்கான தளபாடங்கள் உடனடியாகத் தேவை. விற்பனை செய்ய விரும்புவோர் தாமதியாது கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 759, மே/பா உதயன். (57581)

மிருதங்கத் தொழில் செய்வதற்கு இளைஞர் ஒருவர் தேவை. மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கோ. விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலடி). [57599]

### கோழி மருந்து

19-07-98 ஞாயிறு காலை 10 மணிக்கு கோழிகளுக்கான கம்புறோ, றனிக்கெற் மருந்துகள் வழங்கப்படும். தேவையானவர்கள் வந்து பெற்றுக் கொள்ளவும். 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [57635]

### இறைச்சிக்கோழி

புறொயிலர், கல்பேட் நியாயவிலையில் விற்பனைக்குண்டு. அரைக்கோழியும் பெறலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். 54/2, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். [57658]

இறைச்சிக் கோழி புறொயிலர் (Broiters) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சின்னக்கடைக்கு அருகில்) [57600]

### வீடு விற்பனைக்கு

கில்னா ஒழுங்கை, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் கிணற்றுநீர் வசதியுடன் கூடிய 1½ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு. 199/1, கில்னர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [57595]

யாழ். இந்துமகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள பிறவுண் வீதியில் சகல வசதிகளுடைய மாடி வீடு விற்பனைக்குண்டு. நேரடித் தொடர்பு கொள்ளவும். விலாசம்: 182/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [57631]

### O/L MATHS

Distinction, Credit பெறுபேறுடைய (ஆண்டு 9, 10 உட்பட) ஆரம்பத்தில் இருந்து Paper Class வரை கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்குவீதி, திருநெல்வேலி. (57571)

### கலர் மீன்கள்

கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட புதிய இன கலர் மீன்கள் விற்பனைக்குண்டு. A. அருளானந்தம், இல. 588/8, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம், (ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை) நண்பகல் 12 மணியிலிருந்து பார்வையிடலாம். [57637]

### O/L MATHS 98

அண்டசராசர முறையில் ஆரம்ப அறிவு 2 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். தொடர்ந்து அம் முறையினைப் பயன்படுத்தி 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக்கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுகுளி. [57584]

### கண்டெடுக்கப்பட்டது

பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் (திருநெல்வேலியில்) கண்டுஎடுக்கப்பட்ட ஒரு கல்குலேட்டர் (Calculter) J. பிரசன்னா, இராட்சிய மண்டபம் தம்பசிட்டி வீதி. பருத்தித்துறை ஆகிய என்னிடம் உள்ளது. தகுந்த ஆதாரங் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். [57661]

## பாலர் ஆசிரியராக பயிற்சி

க. பொ. த. சாதாரண தரம் அல்லது மேல் தகைமை - தபாலில் ஆறு மாதங்களில் பயிலலாம்.

**பாலர் ஆசிரியர் சங்கம்**

20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(57649)

## ஆச்சிரம வாழ்வில் 50 ஆண்டுகள் நிறைவையொட்டி நன்றி செலுத்தும் ஆராதனை

நாளை 19-07-98 ஞாயிறு மாலை 3. 30 (S. L. T.) மணிக்கு 50 ஆண்டுகள் ஆச்சிரம வாழ்வின் ஊழியத்தைப் பூர்த்தி செய்த

அருள்திரு. சேவக்சாம் T. அல்பிரட்
( சாம் அண்ணன் )

அவர்களின் ஊழியத்துக்கும், வாழ்க்கைக்கும் நன்றி செலுத்தும் ஆராதனை யாழ்ப்பாணம், 4 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள 'சிற்றி மிஷன்' C. S. I. தேவாலயத்தில் யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தினால் நடத்தப்படும். அன்பர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்,
( J. C. U. )

(சி/4306)

## வாழ்த்துகின்றோம்



கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய

திருவாளர்
**கந்தையா சிவலிங்கம்**

கொக்குவில் இந்துக்கல்லூரி பழையமாணவரும், பழைய மாணவர் சங்க உபதலைவரும், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை, உள்ளகக் கணக்காய்வாளரும், சுன்னாகம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்க கிளை 25 தலைவரும், இயக்குநரும், அருள் மிகு ஏழாலை மேற்கு சிவ பூதவராயர் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவரும், உதயசூரியன் அறிவகமும் சன சமூக நிலையத் தலைவரும், பிரபல உதைபந்தாட்டம், கிரிக்கட் வீரரும், மத்தியஸ்தரும் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம், விவசாயச்சங்கம் ஆகியவற்றின் பொருளாளரும் எமது அன்பிற்குரிய நண்பருமான கந்தையா சிவலிங்கம் அண்மையில் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு வாழ்த்துகின்றோம்.

சிறந்த சமூக சேவையாளரான கந்தையா சிவலிங்கம் அவர்களின் தன்னலமற்ற சேவைக்கு கிடைத்த சிறப்புக்கு எங்கள் உள்ளங் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். அவரின் சமூகப் பணிகள் மேன்மேலும் சிறந்து வளர மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் [illegible]

(57621)

## எமது வாழ்த்துக்கள்



கைதடி ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் ஆச்சிரமத் தலைவரும் ஸ்ரீ சச்சிதானந்த என்ர பிறைசஸ் உரிமையாளருமான ஆன்மீகச் செம்மல்

### திரு. இராமலிங்கம் குழந்தை வடிவேலு J.P

யாழ். மாவட்டத்தின் சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் எடுத்ததை அறிந்து கைதடி வாழ் மக்களோடு சேர்ந்து எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். அவரது சமய, சமூகப்பணி தொடர குருவின் பாதார விந்தங்களை தொழுகின்றோம். அத்துடன் அவரது அருளாசிகளையும் வேண்டி அமைகின்றோம்.

கு. கங்கைவேணியன்
வேணி களஞ்சியம்
165, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021- 2661
021- 2046
(57640)

## எமது நன்றி நவிலல்



யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை கைதடி கயிற்றசிட்டி கந்தசாமி கோவில், கைதடி வாலாம்பிகை அம்மன் கோவில், கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோவில், நுணாவில் கண்ணகை அம்மன் கோவில் ஆகியவற்றின் பொதுச்சபை உறுப்பினரும், கைதடி இணுங்கித்தோட்டம் கந்தசாமி கோவில், கைதடி கிழக்கு சனசமூக நிலையம், கைதடி கிழக்கு சிக்கனக்கூட்டுறவுச்சங்கம் ஆகியவற்றின் நிர்வாக சபை உறுப்பினரும், கைதடி சைவஐக்கிய சங்கத்தின் உபதலைவரும், ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரமத்தின் தலைவருமாகிய

### இராமலிங்கம் குழந்தைவடிவேலு

அவர்களை

சமாதான நீதிவானாக நியமிப்பதற்குச் சிபார்சுக் கடிதம் அனுப்பிய கைதடி சமய, சமூக நிறுவனங்களான செல்வா சனசமூக நலநோன்பு மூலவளநிலையம், கைதடி தெற்கு மின்னொளி சிக்கனக்கடனுதவிக் கூட்டுறவுச்சங்கம், கைதடி தெற்கு சனசமூக நிலையம், கைதடி கயிற்றசிட்டி அருள்மிகு கந்தசாமி தேவஸ்தானம், கைதடி வடக்கு வாலாம்பிகை அம்பாள் கோவில், விநாயகர் சனசமூக நூல் நிலையம், கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையம், கைதடி முன்பள்ளி மழலைகள் பாலர் பாடசாலை, கைதடி வடக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம், கைதடி நவபுரம் நவசன சமூக நிலையம் ஆகியவற்றுக்கும், தென்மராட்சிப் பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்களுக்கும். அஷ்டலட்சுமி அதிபர் திரு. ஆ. கந்தையா J. P அவர்களுக்கும், முன்னாள் கல்வி அமைச்சுச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் அவர்களுக்கும், ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரம நிர்வாகசபையும், சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையாரும் சேர்ந்து நன்றிகளைத் தெரிவிப்பதில் ஆனந்தம் அடைகின்றோம்.

சு. செல்வராசா G. S.
பொதுச் செயலாளர்
ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம்
கைதடி.

(57641)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் சுகாதார அதிகாரி பிரிவில் 17 மாணவருக்கு காசநோய் அறிகுறி

நல்லூர், ஜூலை 18

நல்லூர் பொதுச் சுகாதார அதிகாரி பிரிவில் 17 பாடசாலை மாணவர்கள் காசநோய்த் தடுப்பு மருந்து வழங்க இனங்காணப்பட்டு அவர்களுக்குத் தடுப்புமருந்து ஏற்றப்பட்டது.

நல்லூர் பொதுச் சுகாதார அதிகாரி பிரிவில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் இவ் வருடம் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் பாடசாலை மாணவர்களை வைத்திய பரிசோதனைக்குட்படுத்திய போது மேற்படி 17 பேரும் இனங்காணப்பட்டனர்.

முதலாம், நான்காம், 7ஆம் ஆண்டு மாணவர்கள் இந்த வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கு. சிவபாலராஜா, கொக்குவில் உதவி வைத்திய அதிகாரி, திருநெல்வேலி குடும்பநல உத்தியோகத்தர் ஆகியோர் இப்பரிசோதனைகளை நடத்தினர்.

225 முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு புழு வியாதிக்கு சிகிச்சை அழிக்கப்பட்டது. பல் வியாதிகள் காணப்பட்ட 113 மாணவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

தொண்டைக் கரப்பான், ஏற்பு போன்றவற்றுக்காக 121 பேருக்கு எதிர்ப்புச் சக்தி அளிக்கப்பட்டது. போலியோத் தடுப்புச் சொட்டு மருந்தும் இவர்களுக்கு வழங்கப்பட்டது. 62 மாணவர்களின் நிறை குறைவாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டது. 22 மாணவர்கள் கண், காது, தோல் தொடர்பான வியாதிகளால் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது.

(ஐ-103)

## ஐ. தே. கவுக்கு எதிராக விஜயபாலமெண்டிஸ் மனு

கொழும்பு, ஜூலை 18

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து தாம் இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிராக உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கும்படி கோரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜேயபால மெண்டிஸ் தாக்கல் செய்த மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று விஜயபால மெண்டிஸை ஊழல் நடவடிக்கை தொடர்பாக குற்றவாளி எனத் தீர்மானித்ததை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சிச் செயற்குழு அவரைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தியிருந்தது.

முன்னாள் அமைச்சரான விஜயபால மெண்டிஸின் குடியுரிமை நீக்கப்பட வேண்டும் என அந்த ஆணைக்குழு சிபாரிசு செய்திருந்தது.

விஜயபால மெண்டிஸ் தமது மனுவில் தாம் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டமை சட்டவிரோதமானது என்றும்—

ஐ.தே.கட்சியில் தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் நீதிமன்றம் உத்தரவிடல் வேண்டும் என்றும்—தனது மனுவில் கோரியிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே. கட்சி தவிசாளர் கரு ஜெயசூரிய, பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள உட்பட 70 பேர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

தடை உத்தரவை வழங்கிய நீதிபதி இம் மாதம் 30 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

(இ-7)

## அலங்கார வளைவு தீக்கிரை!

'புளொட்' அமைப்பின் வீரமக்கள் தின நிகழ்வுகளை ஒட்டி பலாலி வீதியில் ஆலடிச் சந்தியில் கட்டப்பட்டிருந்த அலங்கார வளைவு ஒன்று நேற்று முன்தினம் இரவு மர்மமான முறையில் தீக்கிரையாக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-86)

## 47 நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

நல்லூர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இவ்வாண்டு முதல் காலாண்டுப் பகுதியில் 47 கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன. நல்லூர் பொது சுகாதாரப் பரிசோதகர் கு. சிவபாலராஜா மற்றும் நல்லூர்ப்பிரதேசசபைஅலுவலர்கள் இணைந்து இப்பணியை மேற்கொண்டனர்.

கொல்லப்பட்ட நாய்கள் உரிய இடங்களில் புதைக்கப்பட்டன.

(ஐ-103)

## வெளிவாரிப் பரீட்சைப் பெறுபேறு

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினரால் இந்த மாத முற்பகுதியில் வெளியிடப்பட்ட 2 ஆம் வருட கலைத் தேர்வு மற்றும் வணிகத் தேர்வுகளில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கலைத்தேர்வில் 115 மாணவர்களும், வணிகத் தேர்வில் 41 மாணவர்களும் சித்தி அடைந்துள்ளதாகவும். சிறப்புக் கலைத் தேர்வில் கிறிஸ்தவநாகரிக பாடத்தில் தோற்றிய ஒருவர் சித்தியடைந்துள்ளதாகவும் வெளிவாரிப் பரீட்சை பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-7)

## போதைவஸ்து கடத்தற்காரர் கைது

மோதரையில் பிரபல போதைவஸ்துக் கடத்தற்காரர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து 1 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதிவாய்ந்த ஹெரோய்ன் போதைவஸ்து கைப்பற்றப்பட்டது.

பாதாள உலகக் கோஷ்டி தலைவர் ஒருவரின் சகோதரர் எனக் கருதப்படும் சுரேஷ் என்பவரே கைதாகி உள்ளார்.

இந்த சந்தேக நபர் நாட்டின் [illegible] போதைப் பொருள் [illegible] ஈடுபட்டுவந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

(இ-7)

## குருநகர் இறங்குதுறை

யாழ்ப்பாணம் ஜூலை 18

குருநகர் இறங்குதுறை புனரமைப்பு வேலைகள் யாவும் பூர்த்தியாகியுள்ளதுடன்விரைவில்இறங்குதுறை திறப்பு விழா நடைபெறவுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா தூராகத்தின் உதவியுடன் 25 லட்சம் ரூபா செலவில் இந்த இந்த இறங்கு துறை புனரமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(இ-5)

---

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 24 — 02 — 1957

உதிர்வு 18 — 07 — 1996

அமரர்

**பொன்னையா விக்கினேஸ்வரன்**

(முன்னாள் கிராம உத்தியோகத்தர், வேம்பொடுகேணி, பளை)

எமது அன்புத் தெய்வமே!
ஆண்டு இரண்டு போனாலும்,
ஆறுமோ எம் துயர்?
கடமையிலே கண்ணாய்
அன்பினிலே உறைவிடமாய்
பாசமுடன் வாழ்ந்தாய்
எமதருமை விக்கியே!
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டாயோ?

உன்பிரிவால் வாடும்:

அப்பா,
அண்ணன்மார் குடும்பம்.
தங்கை குடும்பம், உறவினர்,
நண்பர்கள்.

பெரியபளை,
பளை.

(C/4298)

---

## 21 ஆவது பிறந்த நாள் ஞாபகார்த்த விழா



18 — 07 — 1977

24 — 02 — 1987

**செல்வி ஆரணி ஜெயதாசன்**

இடம்: செண்டாவளவு, இருபாலை கிழக்கு, கோப்பாய்.

நாள்: 18 - 07 - 1998 சனிக்கிழமை

நேரம்: மாலை 3.00 மணி (பழைய நேரம்)

தலைவர்: திரு. இரா. சண்முகரத்தினம் (இளைப்பாறிய கல்லூரி அதிபர்)

நிகழ்ச்சி நிரல்

★ மங்கள விளக்கேற்றுதல்
★ 21 அகல் விளக்கேற்றுதல்
★ மாலையிடல் (படத்துக்கு)
★ தேவாரம்
★ ஞாபகார்த்த கீதம்
★ வரவேற்புரை
★ தலைமையுரை
★ ஆசியுரை
★ ஞாபகார்த்தப் பேருரை
★ சிறுவர் நிகழ்ச்சிகள்
  பேச்சு (ஆங்கிலம்)
  கவிதை (ஆங்கிலம்)
★ சிறப்புரை
  "என் கதை" - ஆரணிமலர் வெளியீடு
★ வெளியீட்டுரை
★ கவிதை ஆரணிக்கு
★ நன்றியுரை

ஜெயதாசன் சுலோஜனா
தம்பதிகள்

"புது வீடு",
கருகம்பனை.

(57646)

---

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**முத்தையா நடராஜா**

மலர்வு 11 — 02 — 1968

உதிர்வு 18 — 07 — 1996

திதி: வளர்பிறைத்திருதியை 26 — 07 — 1998

ஆண்டுகள் இரண்டு சென்றதே—ஆனால்
ஆறிவிடுமோ உங்கள் நினைவுகள்!
பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமான—
நின்மீது
பாசக் கயிற்றினை வீசினானோ காலன்!
நாம் துயருற்றிருக்கும் பொழுது—எம்
துயர் துடைத்த நீங்கள்—இன்று
மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டீர்களே!
இனி எம் துயர் தீர்ப்பவர் யாரோ?
ஆண்டுகள் பல சென்றாலும்—இங்கு
ஆறாது எம் நெஞ்சங்கள்—என்றும்
தேயாது உங்கள் நினைவுகள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சகோதரி
திருமதி புவனேந்திரன் குணசுந்தரியும்,
மருமக்களும்.

88/33, கேசாவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(57648)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை தெரேஸாவின்

# அன்புப் பணியாளர் சபையின் சேவை

# விரைவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
அன்னை தெரேஸாவின் அன்புப் பணியாளர் சபை யாழ்ப்பாணத்திலும் தனது சேவையை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் அழைப்பையேற்று எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை அன்புப் பணியாளர் சபையின் அங்கத்தவர்கள் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

அன்னை தெரேஸாவின் அன்புப்பணியாளர் சபையின் பணிமனைகள் இலங்கையில் மன்னார், மட்டுநகர், வவுனியா உட்பட ஆறு இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இப் பணிமனையை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு முன்னாள் ஆயர்தியோகுப்பிள்ளைஆண்டகை முயற்சி எடுத்தபோதிலும் அன்று அன்புச்சபை அருட்சகோதரிகள் போதியளவு அங்கத்துவம் பெறாததால் சபையின் சேவையை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

அன்புப்பணியாளர் சபையினர் யாழ்ப்பாணம் வருகை தந்து 21 ஆம் 22 ஆம் திகதிகளில் யாழ். ஆயர் இல்லத்தில் தங்கியிருப்பர். இச் சபைப் பணிமனை நிறுவுவதற்கு காணியுதவி புரிய விரும்புவோர் இத்தினங்களில் யாழ். ஆயர் இல்லத்தில் இவர்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஆதரவற்று துயருறும் மக்களுக்கு மறுவாழ்வு ஊட்டும் இடமாக ''அன்புப்பணியாளர் சபை' விளங்கும் என ஆயர் இல்ல வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன. (8)

## நிவாரண வெட்டு:

# ஆலோசனைக் கூட்டம் செயலகத்தில் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ். மாவட்டத்தில் நிவாரண வெட்டினை அமுல் செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று யாழ். செயலகத்தில் நடத்தப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இக்கூட்டம்யாழ். அரசாங்க அதிபரினால்கூட்டப்பட்டது.

கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அரசின் பணிப்பின் பேரில் நிவாரண வெட்டினை அமுல்படுத்துவது எப்படி என்று ஆலோசிக்கப்பட்ட போது கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் நிவாரண வெட்டுக்கு மாறான தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இது போன்றதொரு கூட்டம் கடந்த வாரமும் நடத்தப்பட்டு முடிவின்றி ஒத்தி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பிரதேச செயலர்களின் கருத்தையடுத்து இக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில்இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறும் 84 ஆயிரம் குடும்பங்களில் 34 ஆயிரம் குடும்பங்களுக்கு இம்மாதம் முதலாம் திகதியுடன் நிவாரணம் நிறுத்தப்படும் என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஜி.சீ.ஈ. உயர்தரம், ஆண்டு-5

# பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தல்கள்

அடுத்த மாதம் நடைபெற உள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் ஆண்டு ஐந்துக்கான புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்கு இடம் பெயர்ந்து பிற மாவட்டங்களில் வசித்த போது விண்ணப்பித்து தற்போது சொந்த மாவட்டத்தில் மீளக் குடியேறியுள்ள மாணவர்களுக்கு வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் சில அறிவுறித்தல்களை வழங்கியுள்ளார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு வெளிமாவட்டங்களில் இருந்து விண்ணப்பித்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களின் பிரதிகளை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் கல்வித்திணைக்களம், வலயம் ஒன்றின் பணிமனையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பம் அனுப்பியமைக்கு அத்தாட்சியாக பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதியையும், விண்ணப்பம் அனுப்பிய பதிவு அஞ்சல் பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

பாடசாலை ஊடாக விண்ணப்பித்த மாணவர்களும் உரிய விவரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களும் தற்பொழுது கல்வி கற்கும் பாடசாலை அதிபர்களால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 23 ஆம் திகதிக்கு முன்னர் வலயம் ஒன்றின் பணிமனையில் சமர்ப்பிக்க வே டும்.

23 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விவரங்கள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வாறு கல்விப்பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (ஐ-9)

# யாழ். பிரதேச செயலகங்களுக்கு பிரமாண அடிப்படையிலான நிதி

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றுக்கும் பிரமாண அடிப்படையிலான நிதி வடக்கு — கிழக்கு மாகாண சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச செயலக மட்டத்திலான அபிவிருத்தி வேலைகளுக்காக இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமது பிரதேச அபிவிருத்தி தொடர்பாகவும் தேவையான நிதி குறித்தும் பிரதேச செயலகங்கள் கடந்த ஆறு மாதத்திற்கு முன்னர் மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றைத்தயாரித்துமாகாண சபையிடம் சமர்ப்பித்திருந்தன.

இந்த ஒதுக்கீட்டில் பிரதேச செயலகங்கள் கோரிய நிதியை விட குறைவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் சில வேலைத் திட்டங்களையும்மாற்றியமைக்குமாறு கோரப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த ஒதுக்கீட்டில் யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு 7 லட்சத்து 80 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

உ

வண். கிழக்கு அருள்மிகு

ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்

ஸ்ரீ அஷ்ட ஹஸ்த வீரமாகாளி அம்பாள்

ஆடிப்பூர

அலங்கார உசற்வ விஞ்ஞாபனம்

ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் வீற்றிருக்கும் அஷ்டஹஸ்த வீரமாகாளி அம்பாளுக்கு நிகழும் வெகுதானிய வருஷம் ஆடி மாதம் 2ஆம் நாள் (18 - 07 - 1998) சனிக்கிழமை காலை அலங்கார உற்சவம் ஆரம்பமாகி ஆடி மாதம் 11 ஆம் நாள் (27 - 07 - 1998) திங்கட்கிழமை வரை பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

விசேட உற்சவங்கள்

18 - 07 - 1998 சனிக்கிழமை உற்சவம் ஆரம்பம்
22 - 07 - 1998 புதன்கிழமை வசந்தோற்சவம்
25 - 07 - 1998 சனிக்கிழமை சப்பற உற்சவம்
26 - 07 - 1998 ஞாயிற்றுக்கிழமை காலை ரதோற்சவம்
27 - 07 - 1998 திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் தொடர்ந்து

ருதுசோபன விழா வைபவமும் நடைபெறும்.

- தேவஸ்தானம்

(சி-4309)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

திருநெல்வேலி

எமது சிறுவர் நிறைவாழ்வு இல்ல நிதிக்காக அன்பளிப்புச் சீட்டுக்களை வாங்கி எமக்கு ஆதரவு நல்கிய அனைத்துக் கொடை உள்ளங்களுக்கும் எமது மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது இல்லம் உங்கள் காலம் உணர்ந்த கொடையால் நிறைவு பெறும். இறைவன் கருணை உங்கள்பால் என்றும் நிலைத்திருக்கும். எமது நன்றி என்றென்றும் உரித்தாகும்.

வீ. சகாதேவசங்கரி
பொருளாளர்

பேராசிரியர்
அ. சண்முகதாஸ்
தலைவர்

(சி-4313)

## அனுமதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 18
வெலிசறை விலங்கு வேளாண்மை கல்லூரிக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான அனுமதிப்பரீட்சை இன்று சனிக்கிழமை திருநெல்வேலி விவசாய பயிற்சிப் பாடசாலையில் நடைபெற உள்ளது.

இப் பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனவும் — நேர்முகப் பரீட்சையின் போது சான்றிதழ்களின் மூலப்பிரதிகளும் பரிசீலனை செய்யப்படும் எனவும் யாழ். கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-79)

## லயன்ஸ் கழக உறுப்பினர் பதவியேற்பு

சண்டிலிப்பாய் ஜூலை 18
மானிப்பாய் கோயில் பற்று லயன்ஸ் சழகத்தின் 1998–99 வருட காலப்பகுதிக்கான புதிய நிர்வாக சபை பதவி ஏற்பு வைபவம் இன்று சனிக்கிழமை முற்பகல் மனிப்பாய் மகளிர் கல்லூரியில் கழகத் தலைவர் லயன் செ. ஞானராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக முன்னாள் பிராந்தியத் தலைவர் லயன் எஸ். பத்மநாதன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் கலந்து கொள்வார். கண் பார்வை குறைந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்குதல், மாணவர்களுக்கான இலவச கல்வி உபகரணங்கள் வழங்குதல் ஆகிய சமூக சேவை நிகழ்ச்சிகளும் இவ்வைபவத்தில் இடம் பெற்றுள்ளன. (ஐ-135)

# ஆசிரியர்களுக்கு மிதிவெடி விழிப்புக் கருத்தரங்கு

நல்லூர், ஜூலை 18
பாடசாலை ஆசிரியர்களுக்கு மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டுவருகின்றது.

யாழ். பல்கலைக் கழக சமூக மருத்துவத் துறையினரால் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் தமது பகுதிகளில் இந்த விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளனர்.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய ஆசிரியர்கள் 23 பேருக்கு அண்மையில் நல்லூர் பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர் கு. சிவபாலராஜா மிதிவெடி விழிப்புணர்வுக் கலந்துரையாடலை நடத்தினர்.

இக்கலந்துரையாடலில் பங்குபற்றியஆசிரியர்கள் பின்னர் மாணவர்களுக்கு இது தொடர்பான விளக்கங்களை அளிக்கவுள்ளனர். (ஐ-103)

## கோப்பாய்-கைதடி வீதி

# பாலம் திருத்தப்பட்டது; வாகனங்கள் பயணம்!

சுன்னாகம், ஜூலை 18
கோப்பாய்-கைதடிப் பாலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளதை அடுத்து இப்பகுதி வழியாக வாகனங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்த இப்பாதை சிறிது காலத்திற்கு முன்னர் சைக்கிள் பயணத்திற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்தது. தகர்க்கப்பட்ட பாலப் பகுதியில் சைக்கிளை உருட்டிச் செல்ல வேண்டியிருந்தது.

தற்போது பாலம் திருத்தப்பட்டுள்ளதை அடுத்து வாகனங்கள் இப்பகுதி வழியாகச் செல்ல ஆரம்பித்துள்ளன.

இப்பாதை திறக்கப்பட்டமையால் யாழ். நகரைச் சுற்றிச் செம்மணி வழியாக தென்மராட்சிக்குச் செல்லும் சிரமம் குறையுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-27)

# ஐ. தே. கட்சி எம்.பியின் மெய்ப் பாதுகாவலர் கைது

## புத்தர் சிலை திருடினராம்

கொழும்பு, ஜூலை 18
புத்தளம் எகலபுளியங்குளம் பௌத்த விகாரையில் புத்தர் சிலை திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் பியசிலி இரத்நாயகாவின் மெய்ப் பாதுகாவலர்கள் இருவர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த புதனன்று ரி-56 துப்பாக்கி சகிதம் பொலீஸ் அடையாள அட்டையை காட்டி விகாரை சோதனை செய்யப்பட்டது.

அந்த நேரம் புத்தர்சிலை திருடப்பட்டிருந்தது.

இவர்கள் பயணம் செய்த வாகனம் குருநாகல்—எல்ல வீதியில் வைத்து பிடிக்கப் பட்டது. (இ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கில் புனர்வாழ்வுப் பணி

# மாகாணசபையுடன் இணைந்து அரசாங்க அதிபர்கள் செயற்படுவர்

திருகோணமலை, ஜூலை 18

வடக்குப் புனர்வாழ்வு, மீள் குடியமர்வுப் பணிகளை வடக்கில் அரச அதிபர்கள் மாகாண சபை நிர்வாகத்துடன் இணைந்து மேற்கொள்வதென நேற்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாகாண சபை அலுவலகத்தில் நடந்த வடக்கு அரச அதிபர்களுக்கான மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

திருகோணமலைக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் என். கே. ஒபடகே தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் வடக்கு அரச அதிபர்கள் பங்குபற்றினர். மாகாண சபை அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

வடக்கு அரச அதிபர்களுக்கும், மாகாண சபை அதிகாரிகளுக்கும் இடையில் நிலவும் கருத்து வேறுபாடுகள் குறித்து மாநாட்டில் ஆராய்ந்து மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கும், இராணுவக் கட்டுப்பாட்டு வன்னிப் பகுதிக்கும் ஆஸ்திரேலிய அரசாங்கம் வழங்கவுள்ள 2 கோடி ரூபாவை எவ்வாறு செலவிடுவது என்பது குறித்து இந்த மாநாட்டில்ஆராயப்பட்டது

(உ-3)

## வவுனியா எம். பி. கொலை

## ரெலோ கண்டனம்

கொழும்பு, ஜூலை 18

வவுனியாவில் நடந்த கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட வன்னி மாவட்ட எம். பியான எஸ். சண்முகநாதன், அவரது மகன் ஆகியோரின் மறைவுக்கு ரெலோ ஆழ்ந்த கவலை தெரிவித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

ரெலோ அமைப்பின் முதல்வர் எம். ஜே. சிவாஜிலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொது எதிரியானசிங்களப் பேரினவாதத்துக்கு எதிராகப் போராடாமல் தமிழர்கள் தங்களுக்குள் மோதிக் கொள்வதையிட்டு நாம் மிகவும் வேதனையடைகிறோம்.

யுத்தம் தொடரும் வரை இப்படியான நிகழ்வுகள் தொடரவே செய்யும். எனவே யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதன் மூலமே இவ்வாறான சம்பவங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

அமரர் சண்முகநாதன் வன்னி மண்ணில் மைந்தனாக மக்களுக்குச் சேவையாற்றியவர் சுடுகாடாக இருந்த வவுனியாவை புனரமைப்புச்செய்தவர். வவுனியா ஒரு சிறந்த தலைவனை இழந்து விட்டது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.எம்.பியும் கண்டனம்

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஒரு ஜனநாயக விரோதச் செயல் என்று யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு நாடாளுமன்ற உறுப்பினரான இ. இராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இப்படியான கொலைகளை மனித நேயத்தை நேசிப்பவர்கள் எவரும் ஒத்துக் கொள்ளமாட்டார்கள். இத்தாக்குதல் அரசியல் ரீதியான பழிவாங்கல் என்பது ஒரு புறம் இருக்க முழு குடும்பமே தாக்கப்பட்டுள்ளது. அவரின் பச்சிளம் குழந்தை இத் தாக்குதலில் கொல்லப்பட்டதை நியாயமானதாக ஏற்கமுடியாது.

மனம் திறந்து கலந்துரையாடும் நண்பனை நாம் இன்று இழந்துள்ளோம். வளர்ந்து வரும் ஓர் அரசியல் சுடர் அணைந்துவிட்டது என்றே கூறவேண்டும்— என்று உள்ளது. (உ)


### யாழ். மத்திய கல்லூரி

பழையமாணவர்சங்கத்தின் அனுசரணையுடன்

### சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

நடத்தும்

### யாழ். மத்தியகல்லூரியின் நிறுவுனர் தின

### சுழல் கேடயம்

ஆறு பேர் கொண்ட ஆறு (6) ஓவர் தோல் பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி 1998

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் போட்டிக் குழு செயலாளரிடம் தொடர்பு கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 22 - 7 - 98**

**அணி ஒழுங்கு தேர்வு திகதி: 24 - 7 - 98**

(போட்டிகள் யாவும் ஜூலை 27, 28, 29, 30, 31 ஒகஸ்ட் 1 ஆகிய திகதிகளில் பிற்பகல் 2. 30 மணியில் இருந்து 6 மணிவரை நடைபெறும்)

விண்ணப்ப நுழைவுக் கட்டணம் 100/=

R. ராஜாராம்
தலைவர்
பழைய மாணவர் சங்கம்,
யாழ். மத்திய கல்லூரி.

S. பிறேம்குமார்
போட்டிக் குழு செயலாளர்,
சென்றலைட்
விளையாட்டுக் கழகம்.

(சி/4318)


## கருத்துரை

யாழ்ப்பாணம், ஜூலை 18

சுகாதார ஆலோசனைச் சபையினால் 'சமுதாயவடு' என்னும்தலைப்பிலான கருத்துரையும், கலந்துரையாடலும் இன்று சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு சாந்திகத்தில் நடைபெறும்.

கருத்துரையினை பேராசிரியர் தயா சோமசுந்தரம் நிகழ்த்துவார். (ரீ)

## புலோலியில் வேள்வி

யாழ்ப்பாணம். ஜூலை 18

புலோலி மேற்கு அவ்வொல்லைப் பிள்ளையார் கோயிலில் அமைந்திருக்கும் காத்தவராயன் ஆலய வருடாந்த வேள்வி இன்று நடைபெறும். (15)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 18

'உதயன்' நிறுவனம் மற்றும் யாழ். றோட்டரிக் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக் கழக விளையாட்டு அவை நடத்தும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை பல்கலைக்கழக கூடைப்பந்தாட்டத்திடலில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ மாலை 3 மணி— பமிலியன் வி. க. எதிர் அரியாலை வி. க. (பெண்கள் பிரிவு)

★ மாலை 4 மணி—பற்றீசியன் வி. க. எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி (ஆண்கள் பிரிவு)

★ மாலை 5 மணி—சென்றலைட்ஸ் வி. க. எதிர் பல்கலைக்கழக புளூஸ் அணி (ஆண்கள்) (உ-ரீ)

### காத்மண்டு செல்வதற்கு

## கல்விச் செயலருக்கு அனுமதி இல்லை

திருகோணமலை, ஜூலை 18

நாளைமறுதினம் நேபாளம் தலைநகர் காத்மண்டுவில் ஆரம்பமாகவிருக்கும் கல்வி மாநாட்டில் பங்குபற்றச் செல்வதற்கு வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளர் சு. டிவகலாலாவுக்கு ஜனாதிபதி செயலகம் அனுமதி வழங்கவில்லை.

இது தொடர்பான அறிவுறுத்தலை ஜனாதிபதி செயலகம் நேற்று மாகாண சபை பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளது.

''போர்முனைப் பிரதேசங்களில் கல்வி அபிவிருத்தி நிலை'' என்ற தலைப்பில் நேபாளம் தலைநகர் காத்மண்டுவில் பிராந்திய கல்வி மாநாடு நாளை மறுதினம் ஆரம்பமாகி 22 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

இம்மாநாட்டில் இலங்கையில் இருந்து ஐவர் கொண்ட குழு பங்குபற்றவிருந்தது.

இக்குழுவில் வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலா, வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி, யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வணபிதா ஏ. ஜே. பேர்னாட், வடமத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். எம். கல்கொட, தேசிய கல்வி நிறுவனத்தின் தொலைக் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் (திருமதி) ஹேமமாலி பலிக்கார ஆகியோர் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மாநாட்டில் பங்குபற்ற டிவகலாலாவுக்கு அனுமதி கிடைக்காததால் ஏனையோர் நேற்று காத்மண்டுவுக்குப் பயணமானார்கள். (உ-3)

## குழந்தைகள் விவரம் பதிவு

நவாலி, ஜூலை 18

சங்கானை மேற்குப் பிரதேசத்தில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்குவதற்கு முன்னோடியாக, குழந்தைகளின் விவரங்கள் இன்று காலை 8.30 மணி முதல் வடலியடைப்பு சனசமூக நிலையத்தில் வைத்துப் பதிவு செய்யப்படவிருக்கின்றன. (உ-100)

## பரிசளிப்பு விழா

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வித்தியாலய அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையாவும், கௌரவ விருந்தினராக கோப்பாய்க் கோட்டக்கல்வி அதிகாரி ஆ. இராசேந்திரமும் கலந்து கொள்வர். (ஐ-154)

## விசேட அ. அட்டை இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

குருநகர் கிழக்கு (ஜே,70) கிராமசேவையாளர் பிரிவிற்கான விசேட அடையாள அட்டைகள் இன்று காலை 10-00 மணிக்கு சின்னக்கடை இராணுவ முகாமில் வைத்து வழங்கப்படும் என்று அப்பகுதி கிராமசேவையாளர் க. நித்தியானந்தன் அறிவித்துள்ளார். (3)

## திருமலையில் இடர்கால கொடுப்பனவு

திருகோணமலை, ஜூலை 18

இடர்காலக் கொடுப்பனவு கோரி திருமலை நகரசபைத் தொழிலாளர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தம் காரணமாக நேற்று அவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இடர்காலக் கொடுப்பனவு கோரி கடந்த இரு நாள்கள் அவர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டதையடுத்து நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி இக் கொடுப்பனவுக்காக ஏழு லட்சம் ரூபாவை அனுமதித்தார். (உ-3)

## செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலர்கள், கணக்காளர்கள், நிதி உதவியாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-100)

## சமய சந்நிதியில்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில்மஹோற்சவ தினங்களுக்குப் பதிலாக நடத்தப்படும் காம்யோற்சவங்களில் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆடிக் கார்த்திகை தினத்தன்று விசேட பூசைகள், சண்முகார்ச்சனை, மாவிளக்கேற்றி ஆராதிக்கும் வழிபாடு என்பன நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழா தினத்தன்று விசேட பூசை வழிபாடுகளும், மறுநாள் ஆடிஅமாவாசை தீர்த்தத் திருநாளன்று வேற்பெருமான் கீரிமலை கண்டகி சமுத்திர தீர்த்தத்துக்கு எழுந்தருளலும் இடம்பெறவுள்ளது. (ஐ-8-30)

★ ★ ★

ஈழத்துச் சிதம்பர மண்டலாபிஷேகதின 43 ஆம் நாளாகிய நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், நண்பகல் 12 மணிக்கு விசேட பூசைகளும் மேளக்கச்சேரியும் நடைபெறவுள்ளன.

பிற்பகல் 1.30 மணிக்கு மணிவாசகர்மடத்தில் மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (ஐ-8-30)


இன்று - 18 07 98 - நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்

### யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய

தேவி மஹோற்சவத்தை முன்னிட்டு இப்பதிகம் பிரசுரிக்கப்படுகின்றது.

''மணியே மணியி னொளியே யொளிரு மணி புனைந்த
அணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்த பின்னே''

539, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(57671)

கனகசபை தர்மகுலசிங்கம்
பழமுதிர்சோலை, காரைநகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணியில் புதைக்கப்பட்டோரின் பெயர்கள் ராணுவத்திடம் உள்ளதாம்

## 'யுக்திய' சிங்கள வார இதழ் தகவல்

கொழும்பு ஜூலை 18
இராணுவத்தினரால்கொல்லப்பட்டு யாழ்ப்பாணம் செம்மணி புதைகுழிகளில் புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் யாழ். பொதுமக்களின் பெயர்ப் பட்டியல் இராணுவத்திடம் உள்ளதாக இராணுவ உள்ளகத் தகவல்கள் தெரிவிப்பதாக 'யுக்திய' சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட பொதுமக்களின் பெயர் பட்டியல்கள் 1996 மார்ச் மாதத்தில் அவர்கள் உயிரோடு பலாலி, காங்கேசன்துறை மற்றும் யாழ்ப்பாண இராணுவமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது பெறப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவை தொடர்பான தகவல்களை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தளுவத்த, அப்போதைய வடபகுதிக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரியா, பிரதேசப் பொறுப்பதிகாரிகளான மேஜர் ஜெனரல்கள் ஜானக பெரேரா, ஜீ. ஏ. கருணதிலகா ஆகியோரும் அறிந்திருந்தனர் என்று இராணுவ உள்ளகச் செய்திகள் தெரிவிப்பதாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் முல்லைத்தீவு முகாம் தாக்கி அழிக்கப்பட்ட பின்னர் அந்த அழிவைச் சமப்படுத்தும் விதத்தில் கைது செய்யப்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் எனவும்—

அவ்வாறு கொல்லப்பட்ட அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காணாமல் போனவர்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவிடமும் மனித உரிமை ஆணைக்குழுவிடமும் காணாமல் போனோரின் பெயர்ப் பட்டியல்கள் உள்ளன — இவ்வாறு அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

### அக்கராயனில்..

(முதலாம் பக்கத் தொடர்)
கப்பட்டது.

அதன் பின்னர் வாகன அணியாக மல்லாவிக்குச் சென்ற பேரணியினர் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கான மகஜரை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்திலும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்திலும் சமர்ப்பித்தனர். (உ-3)

### வடக்கு..

(முதலாம் பக்கத் தொடர்)
இலங்கைக் கப்பல் முகவர் ஒருவர் கொள்வனவு செய்ததையடுத்து, எதிர் வரும் 30 ஆம் திகதி சேவையை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கப்பல் தினமும் காலை திருமலையில் இருந்து புறப்பட்டு நண்பகல் காங்கேசன் துறையை அடையும் என்றும்—

அங்கிருந்து உடன் புறப்பட்டு மாலை திருமலையைச் சென்றடையும் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


எமது புதிய
வெளியீடு!
முரளி, தேவயாணி
நடித்த
பூந்தோட்டம்
புதிய போஸ்டர்களும்
விற்பனைக்கு உண்டு.
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/4303)


### தமிழ்ப்..

(முதலாம் பக்கத் தொடர்)
வீரகேசரி பத்திரிகையின் ஆசிரியர், தனியார் தொலைக்காட்சிச் சேவை ஒன்றுக்குத் தெரிவித்தார்.

பயங்கரவாதக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள இவருக்கு எதிராக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் —

இவருடன் சேர்த்து கைது செய்யப்பட்டுள்ள — அவரின் உறவினர்களான —ஆசிரியை மற்றும் அரச சேவையில் உள்ள இரு பெண்மணிகளும் பயங்கரவாதப் புலனாய்வுப் பகுதியினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும்—

பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது. (உ-3)

## ஆக ஒன்பது கிராம்

# ஹெரோயின் வைத்திருந்த நபருக்கு மரணதண்டனை!

ஒன்பது கிராம் ஹெரோயின் போதைவஸ்தை வைத்திருந்த ஒருவருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்தது.

கிருலப்பனையைச் சேர்ந்த நபரொருவருக்கே இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

போதைவஸ்து தடுப்புப் பணியகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மேற்படி நபரைக் கைது செய்து மேல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

நீதிபதி மஹாநம திலகரட்ண இத்தீர்ப்பை நேற்று வழங்கினார். (உ-7)

# வன்னி மாவட்ட எம். பிக்கு அமைச்சர் இறுதி அஞ்சலி

வவுனியா, ஜூலை 18
கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதனின் குடும்பத்துக்கு நஷ்டஈடு வழங்கப்படும்.

நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே இத் தகவலைத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் அன்னாரின் பூதவுடலுக்கு அமைச்சர் இறுதி அஞ்சலி செலுத்தினார். அமைச்சரின் வவுனியா விஜயம் இரகசியமாகவே இருந்தது.

பொலிஸ், இராணுவம், புலனாய்வுப் பிரிவு உட்பட எவருக்கும் அறிவிக்காமல் தனது மெய்க்காப்பாளர்கள் சகிதம் அமைச்சர் வவுனியா வந்து சென்றதாகக் கூறப்பட்டது. (உ-21)

# அரசாங்கம் - புலிகள் பேச்சுக்கு தமிழர் தூதுக்குழு வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 18
'இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் மூன்றாம் தரப்பின் உதவியுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு பிரிட்டன் உதவ வேண்டும்' — என்று கொழும்பில் உள்ள தமிழ் அமைப்புக்களின் தூதுக்குழு ஒன்று கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுநல அமைப்பு நாடுகளின் தெற்கு, தென்னாசியப் பிரிவுப் பணிப்பாளர் கிளமேறிஸ் சுளோட்ச், பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் ஹத்தம் ஆகியோரை நேற்று முன்தினம் இந்தக்குழு சந்தித்த போது இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

தமிழ் ஒன்றியத் தலைவர் எஸ். சிவராசா, தென் இந்திய திருச்சபையைச் சேர்ந்த வண. டானியல் தியாகராசா, இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றனர்.

ஒரு மணி நேரம் இடம் பெற்ற இந்தச் சந்திப்பின் போது தமிழர் எதிர்நோக்கும் பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகளை தமிழ்க்குழு எடுத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

உடனடி யுத்த நிறுத்தத்தின் அவசியம், வன்னி மக்களின் கஷ்டநிலை, செம்மணி புதைகுழி விவகாரம், கொழும்பு கைதுகள் உட்பட பல விடயங்களை குழு எடுத்துக் கூறியது.

இந்த விடயங்கள் தொடர்பாக தாங்கள் கவனம் எடுப்பதாக தமக்கு உறுதி அளிக்கப்பட்டது என்று தூதுக் குழுவினர் பின்னர் தெரிவித்தனர். (உ-1-3)

### புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்)
நகர மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக பூதவுடல்கள் வைக்கப்படும்.

பின்னர் 'புளொட் உறுப்பினர்களால் பூதவுடல்கள் பொறுப்பேற்கப்பட்டு சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

கிறிஸ்தவ ஆராதனையின் பின்பு நல்லடக்கம் இடம் பெறும். (உ-21)

## தேவி மகோற்சவம்

யாழ். வண்ணை ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலய தேவி மஹோற்சவம் இன்றுகாலை 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித்தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது

எதிர்வரும் 26 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 27 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (உ-7)

### தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்)
மையைக் காரணம் காட்டி இத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு இடமளிக்கக்கூடாது என்று இந்த மூன்று கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

தேர்தலை ஒத்திவைத்தால் அரசுக்குத் தலையிடி கொடுக்கும் வகையில் மக்கள் போராட்டத்தை வெடிக்கச் செய்வதென அந்தக் கட்சிகள் முடிவு செய்துள்ளன. (உ-3)

### டக்ளஸுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)
யுள்ளது.

ஆனால் அவரது தற்போதைய உடல்நிலை இத்தகைய சத்திரசிகிச்சையை தாங்கக் கூடியதாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது.

எனவே சற்றுக் காலம் பொறுத்திருக்க வைத்தியர்கள் முடிவு செய்ததாக கூறப்பட்டது. (உ-2-3)


ஜூலை 1998
இன்னிசை நற்செய்திப்
பெருவிழா
மீண்டும் உங்களுடன்
தந்தை பேர்க்மான்ஸ்
இயேசுகிறிஸ்துவினால் உங்களுக்கு
சமாதானமும் விடுதலையும் கொண்டுவரும்
"ஆறுதலின் தொனி"
ஆறுதலளிக்கும் தேவ கானங்கள்; விசேட ஜெபங்கள்
இடம் காலம் நேரம்
★ துரையப்பா விளையாட்டரங்கு யாழ்ப்பாணம் 15 - 19 பி. ப. 3. 30
குறிப்பு: சனி (18 – 7 – 98), ஞாயிறு (19 - 7 - 98) ஆகிய நாள்களில் கீழ்க்காணும் இடங்களிலிருந்து யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு கட்டணம் அற்ற பஸ் சேவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இந்த பஸ்களில் ''ஆறுதலின் தொனி'' என்ற பெயர்ப்பலகை இடப்பட்டிருக்கும்.
★ அச்சுவேலி, கோப்பாய், கல்வியங்காடு, திருநெல்வேலி, ஓட்டுமடம், கச்சேரி
பஸ் புறப்படும் நேரம்: மாலை 2-30 மணி
உங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்!
பிரவேசம் இலவசம்



யாழ். பல்கலைக்கழக
கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்
யாழ். திருமறைக் கலாமன்றத்தின்
ஆதரவில் வழங்கும்
"ஜீவ பிரயத்தனம்"
(நாடகம்)
இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு
காலம்: 19-07-1998 ஞாயிற்றுக்கிழமை
காட்சிகள் முற்பகல் 10-00 மணி
பிற்பகல் 02-30 மணி (புதிய நேரம்)
நுழைவுச்சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.
நன்றி
கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்
(57672)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
சஞ்சிகை

Sporting Goods
For
Genuine & Quality
Goods
Try us First
We Give
The Lowest Price
Tel: 021-2030



**Aruns Sports Spot**
347, Kasthuriyar Road, Jaffna.
(C/4289)

18 – 07 – 1998 சஞ்சீவி

கருத்துக் கலசம் — மயூரா

## உழைப்பு - முயற்சி

மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் மக்களின் உழைப்பும் முயற்சியும் இன்றியமையாதவை. உழைப்புக்கு முயற்சி தேவை. முயற்சி செய்வதிலும் ஒருவகை உழைப்புக் கலந்திருக்கிறது, இரண்டும் ஒன்றுக்கு மற்றது தொடர்புடையது.

''ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்க முடையா னுழை'' — என்பது வள்ளுவம். தளராத ஊக்கம் உள்ளவனிடம் ஆக்கம் தானாகவே வந்து சேரும். முயற்சி திருவினையாக்கும் என்பதும் அதன் ஒரு வாசக வடிவமே.

ஒருவன் மேற்கொள்ளும் முயற்சிகள் பல தடவைகள் பயன்தாராது போகலாம்; தோல்வி அடையலாம். ஆனால் அதனைக் கண்டு மனம் துவண்டு விடலாகாது; உடல் சோர்ந்து விடலாகாது.

உடனடியாகவே, எடுத்த எடுப்பிலேயே முயற்சி வெற்றி அடைந்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. முதல் தடவையிலேயே முயற்சி பயனளிக்கவில்லை என்றதும் அதிர்ஷடம் இல்லையே என்று நினைத்து அதனைக் கைவிட்டு விடலாமா? தோல்வியே வெற்றியின் அடித்தளம். அது முற்றிலும் உண்மை.

முதலாவது முயற்சி வெற்றி அளித்தால் அது வெற்றியல்ல; அதிர்ஷ்டமே. அந்த அதிர்ஷ்டம் பின்னர் பல தோல்விகளைக் கொண்டு வந்து சேர்த்து விடும். இது மிகப் பலருக்குக் கிடைத்த, கிடைக்கக் கூடிய அனுபவம்.

ஆனால் பல தடவைகள் தோல்விகளைத் தழுவிய பின்னர் கிடைக்கும் வெற்றி அல்லது ஆக்கம் நிரந்தரமானது. அதில் ஒருவகை ஆனந்தமும் உண்டு. ஆகையால் முயற்சி செய்வதனை எந்தச்சந்தர்ப்பத்திலும் கைவிட்டுவிடக்கூடாது. ஒரு துறையில் முயற்சி வெற்றி அளித்து விட்டால் அத்தோடு நிறுத்திவிடாமல் ஏனைய துறைகளில் முயற்சி செய்பவன் வாழ்க்கையில் முன்னேறி வெற்றிக் கனி பெறுகிறான்.

ஒன்றைத் தேடி முயற்சி செய்வதற்கு உள, உடல் உழைப்புத் தேவைப்படுகிறது. எந்தளவு பொருள் உள்ளவனும் உழைக்காமல் இருந்தால், நாளடைவில் ஏழையாக மாறுவான். ஏழை ஒருவன் தனது உடல், உள உழைப்பால் உயர்ந்து விடுகின்றான்.

உழைக்கத் தயங்குபவன் சோம்பேறி. சோம்பேறியின் வாழ்க்கையில் முன்னேற்றம் இருக்காது. உழைப்பது மனித வாழ்க்கையின் கடமை. கடமையைச் செய்யத் தயங்குவது வாழக்கையில் பின்னுக்குத் தள்ளும்.

உழைப்புக்குத் தேவைப்படுவது மனித வலு. இந்த மனித வலு மதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் மக்களிடம் வளர்ச்சியினைக் காணலாம். ஒருவனது மனித வலுவுக்கு உரிய மதிப்பும், கணிப்பும் அளிக்காவிடில் சமூகத்தில் வேண்டிய அளவுக்கு உழைப்பு சுவற வாய்ப்பிருக்காது.

# காதலும் காதலியும்!

காதல்...

உயிர்களை ஒருங்கிணைக்கும் ஓர் உன்னதமான பசை. இரண்டு ஜீவன்களால் இதயம் நெகிழ்ந்து மீட்டப்படும் அமரத்துவம் வாய்ந்த இனிய இசை. இந்த மூன்றெழுத்து மோகனச் சொல்லில் ஓர் இனம் புரியாத தேவ மயக்கம் தென்படுகிறது. இந்த இதமான மயக்கத்தில் மூழ்காத மனிதர்களே இல்லை.

அதற்கு மேல் இதற்கு எதுவுமே தேவையில்லை. காதல் அப்படியன்று ஸ்தூலமாய் நிற்கும் உடம்பின் சதை எலும்புகளை ஊடுருவிச் சென்று சூட்சுமமான உள்ளத்தின் உணர்வுகளையே அது அலங்கரிக்கும்.

காமம் உடம்பிலே தொடங்கி உடம்பிலேயே முடிந்து விடுகிறது. காதல் உள்ளத்தில் நுழைந்து உதிரத்தின் அணுக்களில் கலந்து விடுகிறது. காதலின் கரங்கள் உடலை ஸ்பரிசித்தாலும் அதன் கண்கள் ஆன்ம தரிசனத்தில் மட்டுமே ஆழ்ந்திருக்கும்.

இணைவின் இன்பத்திலும் பிரிவின் துன்பத்திலும் காதலை அற்புதமாக எடைபோடுகின்றார் தமிழருவி மணியம். தமிழக அரசியல் பிரமுகரான அவர் சிறந்தபேச்சாளரும் வழக்கறிஞருமாவார். அவரின் அனுபவத்தில் அருவியாய்ப் பாயும் தமிழ் வெள்ளத்தின் நுரை கூட கனமாகத்தான் இருக்கின்றது— ஏனென்றால் அதன் பெயர்தான் காதல்.

காதல் செய்யாமல் எந்த மனிதனும் கண் மூடுவதில்லை. பெண்ணைக் காதலிக்காதவன் கடவுளைக் காதலிக்கிறான். இருவரையுமே காதலிக்காதவன் ஓர் இயக்கத்தின் தலைவனையாவது காதலிக்கிறான். இறைவனிடம் இதயம் வைப்பதும், தலைவனிடம் அன்பு செய்வதும் கூட ஒரு வகையில் காதலே.


எல்லையில்லாத அன்பு, எதனிடம் பெருக்கெடுத்தாலும் அதற்குப் பெயர் காதல்தான். கடவுளுக்காக பக்தன் உருகுகிறான்; கடவுள், பக்தனுக்காக கண்ணீர் சிந்துவதில்லை. தலைவனுக்காக தொண்டன் சாகிறான். ஒரு தொண்டனுக்காக தலைவன் தீக்குளித்ததாய் தகவல் இல்லை.

ஆனால் ஒரு பெண்ணும், ஓர் ஆணும் கலந்து நிற்கும் காதலில் அன்பு ஒரு போதும் ஒருவழிப் பாதையாய் அமைவதில்லை.

ஒரு பெண்ணுக்காக ஓர் ஆணும், ஓர் ஆணுக்காக ஒரு பெண்ணும் கசிந்துருகிக் கரைந்து போவதில்தான் காதல் முழுமை பெறுகிறது.

இன்று உள்ளக் கலவியை விட உடற் கலவிக்காகவே பலர் காதலைக் கௌரவிக்கின்றனர். ஒரு பெண்ணின் அழகான உடம்பை அனுபவிக்கவே ஓர் ஆணும், ஓர் ஆணின் வளமான இளமையைச் சுவைபார்க்கவே ஒரு பெண்ணும் இங்கே காதலாகிக் கசிந்து உருகுகின்றனர்.

காமத்திற்கு உடம்பிலுள்ள மேடு பள்ளந்தான் குறி.



காதல் சுகத்தையும், சோகத்தையும், சேர்த்துத் தரும் ஒரு ரசவாதம். இன்னொரு ஜீவனால் நினைக்கப்படுகிறோம் என்ற பெருமிதத்தில் எழும் சுகமும், அந்த ஜீவனை அடையத் துடிக்கும் வேதனையில் விளையும் சோகமும் காதலின் இரண்டு எல்லைக் கற்கள்.

என் வாழ்காலச் சமூகத்தை நான் விழி திறந்து பார்க்கிறேன். பார்க்கும் இடமனைத்தும் உடற்பசியில் உருக்குலையும் காமுகர்கள். எங்கோ அரிதாய்... அபூர்வமாய் சில காதலர்கள்.

'உன் கண்ணில் நீர்வழிந்தால் என்நெஞ்சில் உதிரம் கொட்டுதடி' என்று உருகித் தவிப்பவனே என்னளவில் உத்தமமான காதலன். உண்மையான காதலுக்கு அதுவே உத்தரவாதம். அப்படித்தான் நான் அவளைக் காதலித்தேன்.



என் காதலி...

தெய்வத்தின் சிருஷ்டியில் அவள் ஒரு தேவதையின் வார்ப்பு. அவள் பூக்களின் அனிச்சம்; புள்ளினங்களின் அன்னம். அவளுக்கு மலர்க்கணைவிடவும் மென்மையான மேனி; பளிங்கை விடவும் பரிசுத்தமான உள்ளம். ஒரு யாகசாலையின் புனிதமும், ஒரு பர்ணசாலையின் எளிமையும் அவள் வடிவத்தில் வாழ்ந்திருக்கும்.

என்னுடைய வாழ்க்கை வீணையின் வசந்த ராகங்கள், அவளும் நானும் சந்தித்துக்கொண்ட சுகமான நேரங்களே சொர்க்கம் எப்படியிருக்கும் என்பதை இறந்த பின்பு நான் அறிய வேண்டியதில்லை. அவளுடன் நான் பகிர்ந்துகொண்ட ஒவ்வொரு தேவநொடியிலும் அந்தச் சொர்க்கம் என்னைத்தேடி வந்திருக்கிறது.

காலகதியில் கோடையென்றும், வசந்தமென்றும், பருவங்கள் மாறின. மாறி, மாறி வந்த பருவங்களுக்கிடையில் எங்கள் காதல் மட்டும் மாறாமல் வளர்ந்தது.

முதற்பார்வையிலேயே என்னை முழுமையாகக் கவர்ந்துகொண்ட அந்தக் களங்கமற்ற கண்கள்—நிர்மலமான ஆகாயத்தைப் போல் பளிச்சென்று நெஞ்சிலே வந்து பதிந்துகொண்ட அந்தப் பவித்திரமான முகம்—இதழ்க் கோடியில் எப்போதும் இனிமை சேர்க்கும் ஒரு தேவகன்னியிடம் தேடிப் பெற்ற தெய்வீகப் புன்னகை—விட்டுவிட்டு அளவாய் ஒலிக்கும் வீணையின் நாதம் போல் செவிகளுக்குள் நுழையும்போது சிந்தையில் சுகம் வளர்க்கும் அந்தச் சங்கீதக் குரல்...இப்போது நினைத்தாலும் இதயம் சிலிர்க்கிறது.

அவள் என்னை நேசிப்பது தெரிந்தபின்பே வாழ்க்

**தமிழருவி மணியன்**

கையை நான் நேசிக்கத் தொடங்கினேன். அதுவரை சுமையாகக் கனத்த வாழ்க்கை அன்றுதான் சுகமாகத் தெரிந்தது. மலருக்கு வாசம்போல் என் மனதுக்கு அவள் நேசம், மகுடம் சூட்டியது. நான் அன்றாடம், கனவுகளின் கைக்குழந்தையானேன் என் கற்பனைக்கு எங்கிருந்தோ சிறகு முளைத்தது. அவளைப் பற்றிய ஒவ்வொரு நினைவிலும் தேன் துளிர்த்தது.

எப்போதாவது அவளைச் சந்திப்பதும், எப்போதுமே அவளைச் சிந்திப்பதும் என் வாழ்க்கைத் தாகத்தை வளர்த்தன. என் ஒவ்வொரு நாளும் அவள் நினைவுகளோடு விடிந்தது. என் ஒவ்வொரு இரவும் அவள் கனவுகளோடு முடிந்தது.

என் காதலி...இப்பொழுது எங்கிருக்கிறாள்?

ஆன்மாவைக் காயப்படுத்திவிட்டு அவசரமாகப் பிரிந்து சென்றவள், இப்போது யாருடைய தோள்களில் மாலையாகத் தவழ்ந்து கொண்டிருக்கிறாள்? காலம் முழுவதும் என் கைகளைப் பற்றிக் கொண்டு வாழ்க்கைப் பயணத்தில் சேர்ந்து நடப்பதாய் வார்த்தை வரம் வழங்கியவள், இப்போது யாருடைய கைகளைப் பற்றிக்கொண்டு நாணம் சிவக்க நடை பழகுகிறாள்? காதல் அவளுக்கு ஒரு கதையாகிப் போனது. அதுவே எனக்குச் சிதையாக ஆனது.

காதல் ஒரு சுகமான

(XI ஆம் பக்கம் பார்க்க)

''எப்போதாவது அவளைச் சந்திப்பதும் எப்போதுமே அவளைச் சிந்திப்பதும் எனது வழக்கமாயின.

''என் ஒவ்வொரு நாளும் அவள் நினைவுகளோடு விடிந்தது. என் ஒவ்வொரு இரவும் அவள் கனவுகளோடு முடிந்தது.''

காமத்திற்கு உடம்பிலுள்ள மேடு பள்ளந்தான் குறி. அதற்கு மேல் இதற்கு எதுவுமே தேவையில்லை. ஆனால் காதல் அப்படியன்று. ஸ்தூலமாய் நிற்கும் உடம்பின் சதை, எலும்புகளை ஊடுருவிச் சென்று சூட்சுமமான உள்ளத்து உணர்வுகளையே அது அலங்கரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் மௌனம் கலைவது எப்போது?

# தமிழ்க் கட்சிகளின் வேகம் போதாது!

யாழ்ப்பாணத்தில் இரண்டொரு வாரங்கள் சற்றுத் தணிந்திருந்த வெயில் மீண்டும் கொளுந்தத் தொடங்கியுள்ளது. பகலில் கடும் வெயிலும் இரவில் குளிரும் என்று புதிய காலநிலை அறிமுகமாகி வருகிறது.

காலநிலை இவ்வாறு அடிக்கடி மாறித் தொல்லை கொடுத்தாலும், யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை நிலையில் மாற்றம் எதுவும் பெரிதாக நிகழ்வதாக இல்லை. இயல்பு வாழ்க்கை — நிம்மதியான வாழ்க்கை — கௌரவமான வாழ்க்கை எப்போது வரும் என்ற ஏக்கம் மக்கள் முகங்களில் தெரிகிறது.

யாழ்ப்பாணத்துக்கு இப்போது துறைசார் நிபுணர்கள், ஆலோசகர்கள், பத்திரிகையாளர்கள் என்று அடிக்கடி வெளிநாட்டவர்கள் வந்து போகிறார்கள். கடந்தவாரமும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆலோசகரான ஜிம் அன்டர்சன் வந்திருந்தார். இலங்கையில் இளைஞர் விவகாரங்கள் குறித்து ஆய்வுகளை நடத்திவரும் இவர், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஆலோசகராகப் பணிபுரிகிறார். இவர் உலகின் பல நாடுகளுக்கும் சென்று இளைஞர்களின் வாழ்க்கை நிலை, தொழில் நிலைமை மற்றும் அவர்களின் பிரச்சினைகள், கஷ்டங்களை ஆராய்ந்து வருகிறார். தென்னிலங்கையில் உள்ள பல பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள இளைஞர்களின் நிலையையும் ஆராய்ந்துள்ளார்.

அன்டர்சன் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் நேரில் சென்று இளைஞர்களுடன் கலந்துரையாடினார். அவர்களின் பிரச்சினைகளையும், கஷ்டங்களையும் கேட்டறிந்தார். வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளுக்குச் சென்றார். அனேகமாக எல்லா பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் சென்று இளைஞர்களுடன் கலந்துரையாடினார்.

இவருடன் இளைஞர் சேவை மன்றத்தின் நிர்வாக இயக்குநர் இ.எம்.எஸ்.பி. எக்கநாயக்கவும் கூட வந்திருந்தார்.

இளைஞர் பலர் தெரிவித்த தகவல்கள், கருத்துக்கள் யாழ்ப்பாணத்தின் உண்மை நிலையை அவருக்கு உணர்த்தியிருக்கும்.

தெல்லிப்பழையைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் தமது பகுதி குறித்து அன்டர்சனிடம் பின்வருமாறு கூறினார்;—

''விவசாய வளம், கடல் வளம், பனைவளம் ஆகிய மூன்று வளங்களும் நிறைந்தது எமது பிரதேசம். இங்கு மிகக்குறைந்த எண்ணிக்கையான மக்களே மீளக் குடியேறியுள்ளனர். அதனால் வழமையான தொழில்களையோ, புதிய தொழில்களையோ, சுயதொழில்களையே இப்பகுதியில் மேற்கொள்ள வாய்ப்பில்லை. இராணுவ உயர்பாதுகாப்புப் பிரதேசம் என்று கூறி மக்களைத் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறத்தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பகுதி மக்கள் எல்லோரும் தமதுசொந்தஇடங்களில் குடியமர வகை செய்யப்பட வேண்டும்''—என்றார்.

அடிக்கடி சுற்றிவளைப்புகள் நடத்தி இளைஞர்கள் விசாரிக்கப்படுகிறார்கள். வேலைக்குப் போகாத, பாடசாலை செல்லாத இளைஞர்கள் தீவிரவிசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். அதனால் பாதுகாப்பு அச்சம் அவர்களிடையே மேலோங்கி உள்ளது. அதனைப் போக்க, நீக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது—சங்கானை இளைஞர் ஒருவரின் கருத்தாக இருந்தது.

— நாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் வசதிகள் எதுவுமே யாழ். இளைஞருக்கு இல்லை.

— போரினால் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கால், கைகளை இழந்து அங்கவீனர்களாகி உள்ளனர். அவர்களுக்குப் புதுவாழ்வு, மறுவாழ்வு, அளிப்பதற்கு அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

— ஜி. சி. ஈ. சாதாரண, உயர்தரப் பரீட்சைகளிலும், தொழில்நுட்பப் பயிற்சிகளிலும் தேறிய பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் யுவதிகள் உள்ளனர். ஆனால் அவர்களுக்கு எவ்வித வேலை வாய்ப்பு வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை.

— உலகம் முழுவதும் கணனி யுகம் பிறந்து விட்டது. ஆனால் யாழ்ப்பாணத்தில் கணனியைப் பார்த்தவர்களே குறைவு. இவ்வாறு பலவழிகளிலும் யாழ். இளைஞர்கள் பின்தள்ளப்பட்டுள்ளார்கள்; பின் தங்கியுள்ளார்கள்.

இவ்வாறாக இளைஞர்கள் இங்குள்ள நிலையையும், தாம் வாழும் சூழ்நிலையையும், தமக்குள்ள கஷ்டங்களையும் ஆய்வாளர் அன்டர்சனிடம் எடுத்துக் கொண்டார்கள்.

துள்ள கேள்வி.

★ ★ ★

அரசாங்கத்துக்குப் பெயர் வாங்கித் தந்த — மிகக் குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு சர்வதேச ரீதியில் ''பிளஸ் பொயிண்ட்'' தேடித் தந்த — கிருஷாந்தி வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டு இரண்டுவாரங்களாகின்றன. ஆனால் அந்த வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்ட அதே நீதிமன்றத்தில் குற்றவாளி ஒருவர் பிரஸ்தாபித்த செம்மணிப் புதைகுழிகள் குறித்து ஆக்க பூர்வமாக எதுவும் நடந்ததாக இல்லை. அரச தரப்பில் பெரும் மௌனம் நிலவுகிறது.

தல் ஒன்றைச் சந்திக்க அரசு தயாரில்லை. எப்படியாவது பதவிக் காலம் முடியும் வரை காலத்தை ஓட்டுவதற்கு வடக்கு — கிழக்குப் போரையே அரசு நம்பியிருப்பதாக எண்ணத் தோன்றுகிறது.

வடக்கு—கிழக்குப் போரை வெல்வதற்கு (அல்லது 2000 ஆம் ஆண்டு வரை தொடர்வதற்கு) இராணுவ அதிகாரிகளின் ஒத்துழைப்பும், படையினரின் (இழப்புகளுக்கும் மத்தியிலான) உழைப்பும் தேவை. எனவே செம்மணி விவகாரத்தை தொட்டால் இராணுவத்தினரின் எதிர்ப்பைத் தேடிக்கொள்ள நேரி

# உள்ளும் புறமும்

குறுமுனி

கிருஷாந்தி, அவரின் தயார், சகோதரர், அயலவர் ஆகியோரின் கொலை விவகாரத்தை இராணுவ அதிகாரிகள் உள்ளமுக்கி விட முயன்ற போது, அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்று மழுப்பிவிட முயன்ற போது, தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி சந்தேக நபர்களைக் கண்டு பிடிக்கவும், வழக்குத் தாக்கல் செய்யவும் சூத்திரதாரியாக, அது விடயத்தில் மிகுந்த அக்கறை காட்டிய

டுமோ என்ற அச்சம் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் வந்திருக்குமோ என்னவோ?

கிருஷாந்தி கொலை வழக்கை முன்னெடுத்ததனால் இராணுவத்தின் ஒரு சில தரப்பினரின் அதிருப்தியை ஜனாதிபதியும், அரசாங்கமும் தேடிக்கொள்ள நேரிட்டது. அதற்கும் மேலதிகமாக செம்மணி விவகாரத்தைத் தொட்டு இராணுவத்தினரின் அதிருப்திப் பரப்பை அதிகரித்துக் கொள்ள அரசாங்கம் விரும்

கள் ஞாபகப்படுத்தப்படும் என்ற அச்சம் எதிர்க்கட்சிக்கு உண்டே?

தமிழர் விவகாரம் எதுவாக இருந்தாலும், அது எவ்வளவு மனிதாபிமானப் பிரச்சினையாக இருந்தாலும், அது எத்தகைய அத்துமீறலாக இருந்தாலும் அவசரப்படுவதற்கில்லை என்ற ஒரு நிரந்தரமான வாய்ப்பாட்டைத் தென்னிலங்கை அரசியல்வாதிகள் இயற்றி வைத்திருப்பது இந்த மௌனத்திலிருந்து தெளிவாக புலனாகிறது.

செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் மட்டுமன்றி ஏனைய மனித உரிமை மீறல் விவகாரங்களிலும் சம்பந்தப்பட்ட நாட்டு அரசாங்கம் தக்க நடவடிக்கை அல்லது நிவாரணம் எடுக்கத் தவறுமாயின் அவனைச் சர்வதேச விசாரணை மன்றங்கள் அமைத்து விசாரிப்பதற்கான வாய்ப்பும் வசதியும் செய்யப்பட வேண்டும் என்ற யோசனை அனைத்துலக மட்டத்தில் மிகச் சாதகமாக ஆராயப்பட்டு வருவதை இலங்கை அரசு கண்டு கொள்ளாதிருக்குமா?

மேலும், இப்பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் போது செம்மணிப் புதைகுழி விவகாரம் குறித்து விசாரணை ஒன்றைத் தொடங்குவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு முடிவு செய்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

பிரஸ்தாப ஆணைக்குழுவின் தலைவர், ஒய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். எம். செனிவரட்ண ஆவார். கலாநிதி ஏ. ரீ ஆரியரட்ன, பேராசிரியர் அர்ஜுனா அலுவிகார, ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதியரசர் ரி. சுந்தரலிங்கம், ஜாவிட் யூசுப் ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள். செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் நடவடிக்கை எடுப்பது குறித்து ஆணைக்குழுவின் கூட்டத்தில் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு கிளை அலுவலகம் மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள ஆளணியினருடனேயே இயங்கிவருகிறது. ஆகையால் செம்மணிப் புதைகுழிகள் குறித்து விசாரணைகள் நடத்துவதாயின் கொழும்பிலிருந்தே அதிகாரிகள் வர நேரிடும். செம்மணியில் புதைகுழிகளைத் தோண்டுவது ஒரு பெரிய நடவடிக்கையாக அமையும். இந்த வேலையில் சுயேச்சையான, பக்கச்சார்பற்ற, மனித உரிமைகளைப் பேணுவதில் அக்கறையுள்ள அலுவலர்கள் அமர்த்தப் படுவதும் அவசியமாக அமையும்.

புதைகுழிகள் தோண்டப் படுமா? இல்லையா? என்பது பற்றிய முடிவு அதற்கான பணிகள் குறித்த திட்டவட்டமான தீர்மானம் எதுவும் கிடைக்காத நிலையில் குடாநாட்டில் கடந்த இரண்டு வாரகாலமாக நிலவிவரும் சோக உணர்வுகளும், அச்சமும் மேலும், அதிகரித்து வருகிறது. காய்ச்சலும், தலைவலியும் தனக்குத்தனக்கு வந்தால்தான் தெரியும் என்பது போல, காணாமற்போன தமது பிள்ளைகளின் நிலை என்னவாகியதோ என்ற பெற்றோர்களின் ஏக்கம் தென்னிலங்கையில், அரசவட்டாரங்களில் ஒலிக்க வாய்ப்பு உண்டா?

செம்மணிப் புதைகுழிகள் குறித்து கிருஷாந்தி வழக்குக்

(XI ஆம் பக்கம் பார்க்க)

# செம்மணிப் புதைகுழி விவகாரம்; மெல்ல அசைந்தால் இருளடையலாம்

யாழ்ப்பாணத்தில், யாழ்ப்பாண இளைஞர்களின் கஷ்டங்களையும் பிரச்சினைகளையும் வசதி — வாய்ப்பு இன்மையையும் நன்றாக அறிந்து கொண்ட, புரிந்து கொண்ட ஆய்வாளர், இது குறித்து இளைஞர் விவகார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வருவதாகக் கூறிச் சென்றிருக்கிறார்.

இங்கு வந்து செல்லும் ஏனைய வெளிநாட்டார் மற்றும் கொழும்பு அதிகாரிகள் போல, அன்டர்சனும், வந்தார்; பார்த்தார்; போனார். அவ்வளவு தான்; என்ற நிலை இல்லாமல் இளைஞர் நலனுக்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

யாழ்ப்பாண மக்கள் அபிவிருத்தியில் பின்தங்கி பின் நிற்பதையும், சமூக, கலாசார வளர்ச்சிகளை இங்கு காணமுடியவில்லை என்பதையும் அவர் ஒப்புக் கொண்டிருக்கிறார். பொருளாதார அபிவிருத்தி அறவே இல்லை என்பதனையும் அவர் வெளிப்படையாகச் சொல்லியுள்ளார். இளைஞர்களுக்குப் பாதுகாப்பின்மை, தொழில் இன்மை, சுயதொழில் வாய்ப்பின்மை ஆகிய பிரச்சினைகள் உண்டு என்பதனையும் அவர் வெளிப்படுத்தி இருக்கிறார்.

அவர் இவற்றை அறிந்து கொண்டதால், உண்மையை வெளிப்படையாகச் சொன்னதால் இருளில் வாழும் யாழ்ப்பாண இளைஞர்களுக்கு ஒளி கிடைக்குமா?—இதுவே அவர்கள் மத்தியில் எழுந்

வர்—கண்ணியமாக நடந்து கொண்டவர்—ஜனாதிபதியே என்று இப்போது தகவல்கள் வெளியாகியுள்ளன; நல்லது.

அத்தகைய ஜனாதிபதி, செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் இன்னும் அசையத் தொடங்காமல் இருப்பது ஏனோ? தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிக் காலத்தில் பலவகைப் படுகொலைகள் நடந்ததாக புதைகுழிகள் மூடப்பட்டதாகக் கூறி, அவற்றை வெளிப்படுத்தி, பிரசாரப்படுத்தி, மக்கள் வாக்குகளைப் பெற்றுப் பதவிக்கு வந்தவர் ஜனாதிபதி சந்திரிகா.

400 தமிழ் இளைஞர், யுவதிகள் செம்மணிப் புதைகுழிகளுக்குள் புதைக்கப்பட்டார்கள் என்ற தகவல் வெளியான பின்னரும் மௌனமாக இருப்பது ஏன்?

ஐக்கிய தேசியக் கட்சியின் பலவீனங்களைத் தொட்டுக் காட்டி, மக்களுக்கு உண்டான பாதிப்புகளை பிய்த்துக் காட்டிப் பதவிக்கு வந்தவர் ஜனாதிபதி சந்திரிகா. கேட்பதற்கு இனிக்கும் வாக்குறுதிகளை தேர்தல் வேளையில் அவர் அளவுகணக்கின்றி அக்கியிருந்தார். ஆனால் அவற்றில் எதனையுமே — இனப்பிரச்சினைக்குத் தீர்வு, நிறைவேற்று ஜனாதிபதி முறையை 1995 ஜூலை 15க்கு முன்னர் ஒழித்து விடுவது ஆகிய பிரதான வாக்குறுதிகள் உட்பட — எதுவுமே நிறைவேற்றப்படவில்லை.

அதனால் அரசுக்குத் தென் [illegible] ஆதரவு குறைந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் தேர்

பாமல் இருக்கலாம். அதுவும் வடக்கு— கிழக்குபோரை நடத்துவதன் மூலமே தனது பதவிக்காலத்தை உறுதிப் படுத்திக்கொள்ள விரும்பும் அரசாங்கம் இந்தவேளை தனது தலையை மூட்டிக் கொள்ள விரும்பும் என்று எதிர்பார்க்க முடியாது தான்.

ஆனால் தமிழர்கள் படுகொலை செய்யப்படும் விவகாரத்தில் அரசு அக்கறை செலுத்தாது இருந்தால் அது மிகவும் பாரதூரமானதாகும். தமிழர்கள் அடக்குமுறைக்கும் அழிவுக்கும் ஆட்படுத்தப்படுகிறார்கள் என்பது தானாகவே ஊர்ஜிதமாகும். இந்த இரண்டில் அரசு எந்தப் பக்கத்தில் நிற்கப் போகிறது அல்லது எதனைத் தெரிவு செய்யப் போகிறது என்பது அதனைப் பொறுத்ததே. எவரும் சொல்லி நடக்கும்விடயமல்ல இது.

அரசாங்கம் மாத்திரமன்றி எதிர்கட்சியான ஐ. தே. கவும் செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் வாயை மூடிக் கொண்டிருக்கிறது. தென்னிலங்கையில்—சிங்களப் பிரதேசத்தில்—இப்படிஒரு சம்பவம் நடந்திருப்பதாக துப்புக் கிடைத்த உடனேயே எதிர்க் கட்சிக்காரர்கள் தூக்கிப் பிடித்துக்கொண்டு நிற்க மாட்டார்களா? அரசியல் லாபம் பெறுவதற்கு அருமந்த சந்தர்ப்பம் என்று நினைத்து அதைப் பயன் படுத்த துள்ளிக்கொண்டு வரமாட்டார்களா?

இந்த விடயத்தில் வாயைக் கொடுத்தால் தமது பதவிக் காலத்தில் நடந்த கொடுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைவானில் பீதி!

கடந்த மார்ச் மாதம் அடுத்தடுத்து ஏழு குழந்தைகள் உயிரிழந்த போதுதான் இது தெரிய வந்தது.

ஹொங்கொங்கில் கோழிகளில் இருந்து தொற்றியதாகக் கருதப்பட்ட 'பறவைக் காய்ச்சல்' (Bird flu), தைவானில் பன்றிகளிடையே பரவிய பன்றி வைரஸ் (Pig Virus) என்பவற்றைத் தொடர்ந்து இந்த வட்டாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் கொடிய வைரஸ் இது

தைவானில் 5 வயதுக்குட்பட்ட 50 க்கும் அதிகமான குழந்தைகளைப் பலி கொண்டு, 50 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்களைத் தொற்றிய பிறகும் 'என்ரறோ வைரஸ் 71' (ENTEROVIRUS — 71) எனப் பெயரிட்ட இந்த வைரஸ் எதிலிருந்து தொற்றியது — அதன் மூலம் எது என்பது— இன்னமும் மருத்துவர்களால் கண்டறியப் படாமலே உள்ளது.

ஹொங்கொங் 'பறவைக் காய்ச்சல்' (Bird flu), பன்றிக் காய்ச்சல் (Pig Virus) என்பவற்றைத் தொடர்ந்து தைவானில் தற்போது புதிய வைரஸ் காய்ச்சல் சிறுவர்களிடையே பரவுகிறது.

புதிது புதிதாகத் தோன்றும் வைரஸுகள் மருத்துவ உலகிற்கு சவால் விடுகின்றன.

......'E V 71' (ஈ வி 71) எனப் பெயரிடப்பட்ட இந்த வைரஸ் இதுவரை 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்களைத் தொற்றியுள்ளது. பீதியடைந்த பெற்றோர்கள் 5 வயதுக் குட்பட்ட பிள்ளைகளைத் தூக்கிக் கொண்டு மருத்துவ மனைகளுக்குப் படையெடுக்கின்றனர்.........

ஒரே விதமான அறிகுறிகளை வெளிப்படுத்திய சாதாரண காய்ச்சலால் தாக்குண்ட பல குழந்தைகள் அடுத்தடுத்து உள்ளூர் மருத்துவ நிலையங்களில் சிகிச்சை பெற்றபோது அது ஒரு வைரஸ் காய்ச்சல் என்பது கண்டறியப்படவில்லை.



வாயையும் மூக்கையும் கட்டிக் கொண்டு பரிசோதனைக்காகக் காத்திருக்கும் ஒரு தாயும் குழந்தையும்.

காய்ச்சல் தொற்றிய குழந்தைகள் எண்ணிக்கை நூற்றுக் கணக்கைத் தாண்டியபோதுதான் நிலைமையின் பாரதூரம் உணரப்பட்டது. ஒரே சமயத்தில் நூற்றுக் கணக்கான குழந்தைகள் ஓர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது நிலைமை விபரீதமானது.

நகரங்களில் செய்தி பரவியதும் பெற்றோர்கள் தங்கள் ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளைத் தூக்கிக் கொண்டு மருத்துவ சோதனை நிலையங்களுக்குப் படையெடுத்தனர். அதற்கிடையில் பல மருத்துவ மனைகளில் சிறுவர் வார்ட்டுக்கள் நிரம்பி வழிந்தன. வைரஸ் தொற்றிய குழந்தைகளும், வாடிய முகத்துடன் பெற்றோர்களும் நிறைந்தனர்.

தமது குழந்தைக்கு அந்தக் கொடிய வைரஸ் தொற்றவில்லை என்பதை மருத்துவர்கள் மூலம் உறுதிப்படுத்திவிட முண்டியடித்தனர் பெற்றோர். வாயையும், மூக்கையும். மூடிக்கட்டியபடி நூற்றுக் கணக்கான சின்னஞ் சிறிசுகள் கிளினிக்குகளில் மணிக் கணக்குகளில் சோதனைக்காகக் காத்துக் கிடந்தன.

வைரஸ் தொற்றிய குழந்தைகளில் பல்வேறு அறிகுறிகள் தென்பட்டன. சில குழந்தைகளின் கால்களில் சிறுவெடிப்புகள் ஏற்பட்டு இரத்தம் கசிந்தது. சில குழந்தைகளின் நுரையீரலில் இருந்து மஞ்சள் நிறத்திரவம் நுரையாக வெளியேறியது.

மார்ச் மாதத்தில் உயிரிழந்த ஏழு குழந்தைகளினதும் மரணத்துக்கு ஒரே வைரஸ்தான் காரணம் என்பதை முதலில் மருத்துவர்கள் கண்டறிந்தனர். ஆனால் அதை இனங்காண முடியவில்லை.

## சிறுவர்களைக் கொல்லும் வைரஸ்!

'என்ரறோ வைரஸ்' என்னும் வைரஸ் குடும்பத்துடன் இந்த வைரஸுக்கு தொடர்பு இருக்கும் என நம்பப்பட்டது. இதே குடும்பத்தைச் சேர்ந்த சில வைரஸுகள் அமெரிக்கா உட்பட சில நாடுகளில் கோடை காலத்தில் தோன்றியுள்ளன. ஆனால் சாதாரண சொறி சிரங்கைத் தவிர பாரதூரமான தாக்கங்களை அவை ஏற்படுத்தியிருக்கவில்லை.

தொடர்ந்து புதிய ஆய்வில் ஈடுபட்ட தைவானின் சிறுவர் தொற்றுநோய் மருத்துவ நிபுணர்கள் கடைசியில் ஒருவாறு புதிய வைரஸை இனங்கண்டனர்.

**நல்லூர் தாஸ்**

1970 களில் ஜப்பானிலும் ஹங்கேரியிலும் தோன்றிய 'என்ரேறோ வைரஸ்—71' தான் தற்போது மீண்டு வந்திருக்கிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே வைரஸ் மலேசியாவில் 30 குழந்தைகளைத் தாக்கியது. ஆனால் பிள்ளைகளின் இதயம், மூளை என்பவற்றைத் தாக்கும் அளவுக்கோ அல்லது 'கோமா' நிலையை ஏற்படுத்தும் அளவுக்கோ அது பாரதூரமானதாக இருக்கவில்லை.

தற்போது பரவிவரும் வைரஸ் அடுத்தடுத்த மாத காலப் பகுதியில் 5 லட்சம் சிறுவர்களைப் பீடிக்கும் என தைவான் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் சான் சீ செயன் எச்சரித்துள்ளார்.

50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களைப் பீடித்த பிறகும் இந்தக் கொடிய வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப் படாதது பெற்றோர்களிடையே பீதியைக் கிளப்பி விட்டிருக்கிறது. குழந்தைகளைப் பாதுகாக்கத் தவறிய சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்துள்ளன.

தைவானில் முன்னர் ஏற்பட்ட பன்றிக் காய்ச்சலுக்கும், ஹொங்கொங்கில் பரவிய பறவைக் காய்ச்சலுக்கும் காரணமாக இருந்த வைரஸுகளுக்கும் தற்போது பரவும் வைரஸுக்கும் தொடர்பு இருப்பதாக ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்ட மருத்துவச் சான்றுகள் ஏதும் இல்லை. நோயின் மூலம் எது என்பதை வெளிப்படுத்த மருத்துவர்கள் தடுமாறுவதால் அச்சம் நீடிக்கிறது.

நிலைமை மேலும் விபரீதமாகலாம் எனக் கருதும் தைவான் அரசு, உலக அளவிலான எச்சரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது. அயல் நாடுகளுக்கும் இது பரவக் கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான அமெரிக்க நிலையத்தைச் சேர்ந்த மருத்துவக் குழு ஒன்று தைவான் சென்று நிலைமையைக் கண்காணித்து வருகிறது.

கடந்த ஆண்டின் இறுதியில் ஹொங்கொங்கில் பரவிய H5N1 (எச். 5 என்.1) என்ற ஒருவகை வைரஸினால் 13 பேர் வரை உயிரிழந்தனர். நூற்றுக் கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். பறவைகளில் இருந்து குறிப்பாக கோழிகளில் இருந்து மனிதனுக் [illegible] ஒரு

(X ஆம் பக்கம் பார்க்க)

# நேரம் ஒரு சிறந்த மூலதனம்

பணம் ஒரு மூலதனம்தான். ஆனால் அதைவிட மதிப்பு வாய்ந்த மூலதனம் நேரந்தான்.

தன்னுடைய நேரத்தைச் சிறிது கூட வீணாக்காமல் திட்டமிட்டு நன்கு பயன்படுத்திவரும் ஏழை—பெரிய பதவி, செல்வம், புகழ் போன்றவைகளை அடைந்து — அனைவரும் போற்றும்படியான சிறந்த வாழ்க்கையைப் பெறுவான்.

அதற்கு மாறாக வீண் அரட்டை அடிப்பதிலும், கேளிக்கைகளைக் கண்டு களிப்பதிலும் தன் நேரத்தை வீணடித்து வரும் பிறவிப் பணக்காரன், தன் மூதாதையர்கள் விட்டுச் சென்ற செல்வம், சொத்து போன்றவைகள் அனைத்தையும் இழந்து நடுத் தெருவில் நிற்கவேண்டியிருக்கும்.

நேரம் என்ற விலைமதிக்க முடியாத மூலதனத்தை மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் கடவுள் சம அளவில் தான் கொடுத்திருக்கிறார்.

பெரியநாட்டையே ஆண்டுவரும் அரசன் என்பதற்காகவோ, அல்லது உலகப் புகழ்பெற்ற மாபெரும் அறிஞன் என்பதற்காகவோ, சாதாரண மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நேரத்திதைவிட கடவுள் அவர்களுக்கு ஒரு விநாடி நேரத்தைக்கூட அதிகமாகக் கொடுக்கவில்லை.

கோடி ரூபா கொடுத்தால்கூட ஒரு விநாடி நேரத்தை ஒருவன் கூடுதலாகப் பெறமுடியாது.

பணத்தை இழக்க நேரிட்டால், கடுமையான உழைப்பின் துணைகொண்டு, இன்னும் அதிக அளவில் பணத்தைச் சம்பாதித்துக்கொள்ள முடியும். அறிவு மங்கிவிடும்போது, மீண்டும் பாடுபட்டு சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் படித்து, இன்னும் அதிகஅளவில் அறிவை வளர்த்துக்கொள்ள முடியும். தன்னுடைய உடல்நிலை கெட்டுவிட்டபோதுகூட, சிறந்த மருத்துவச் சிகிச்சையின் மூலம், தான் இழந்த ஆரோக்கியத்தை மீண்டும் பெற்றுவிட முடியும்.

ஆனால், ஒருவன் தன் அஜாக்கிரதையினால் நன்கு பயன்படுத்திக்கொள்ளாமல் இழந்துவிட்ட நேரத்தை மீண்டும் திரும்பிப் பெறவே முடியாது.

நேரத்தைச் சேமித்து வைக்க முடியாது; நாளை வரப்போகும் நாளிலிருந்து ஒரு சிறிய பகுதி நேரத்தை இன்று கடனாகக் கேட்டுப் பெறவும் முடியாது.

ஆகையினால் ஒவ்வொருவனும் தான் வாழ்ந்து வரும் ஒவ்வொரு விநாடியையும் தன் முன்னேற்றத்திற்கு முழுவதுமாக முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடவுளுடைய அருளைப் பார்த்தீர்களா? தூங்கி விட்டு நீங்கள் காலையில் எழும்போது, உங்கள் சட்டைப் பையில் இருபத்து நான்கு மணி நேரத்தைப் போட்டு நிரப்பி விடுகிறார். அந்த நேரம் முழுவதும் உங்கள் ஒருவருக்கு மட்டும்தான் சொந்தம். உங்களிடமிருந்து அந்த நேரத்தை யாராலும் திருட முடியாது. இந்த நேரத்தை உங்கள் விருப்பப்படி நீங்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும்,

"மற்றவர்களை விட காலையில் ஒரு மணி நேரத்திற்கு முன்பே எழுந்து செயல்படுபவனுக்குக் கூடுதலாகப் பத்து வருட வாழ்க்கை கிட்டுகிறது" என்று ஓர் அறிஞர் குறிப்பிட்டிருக்கிறார்.

நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள, நீங்கள் வீண் அரட்டையில் ஈடுபட்டுவரும் சோம்பேறிகளின் சேர்க்கையைத் தவிர்க்க வேண்டும். உள்ளத்தைத் தூய்மைப் படுத்தாத நூல்கள், சினிமா, டி.வி. நிகழ்ச்சிகள் போன்றவைகளைத் தவிர்க்க வேண்டும்.

"இந்த வேலையை நாளைய தினம் செய்யப் போகிறேன்" என்று வேலையைத் தொடங்குவதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே செல்பவனை, தரித்திரம்தான் பின் தொடரும்.

மனிதன் தன் அறிவின்மையால் நேரத்தை விட பணத்துக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறான். தன்னுடைய செலவு விவரங்களை அவன் எழுதிவைக்கிறான். ஆனால் தன்னுடைய நேரத்தைப் பற்றி அவன் எந்தக் குறிப்பும் எழுதி வைப்பதில்லை. அப்படி ஒரு குறிப்பு எழுதி வந்தால், தன் நேரத்தின் பெரும் பகுதியைத் தான் வீணடித்து வருவதை அவன் சுலபமாக உணர முடியும்.

சுலபமான — ஒரே மாதிரியான — காரியத்தைச் செய்து வருபவன், குறைந்த தேவைகளைக் கூட பெற முடியாதபடி மிகவும் அவலமாக வாழ்ந்து வருவான். பெரிய இலட்சியங்களை அடைவதில் தன் நேரத்தைப் பயன்படுத்தி வருபவன், பல சாதனைகளைப் படைத்து, சகல வசதிகளும் நிறைந்த நல்ல வாழ்க்கையை அடைவான்.

கவலை, நம்பிக்கையின்மை, பயம், சோர்வு, வெறுப்பு போன்றவைகளை வரவழைத்துக்கொண்டு தவறாக வாழ்ந்து வருபவனால் கட்டாயம் தன் நேரத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாது.

**- ராவ் -**

ஒவ்வொரு வாரத்திலும் அனைவருக்கும் 168 மணி நேரம் கிடைக்கிறது. அதில் அவன் அலுவலகத்தில் 40 மணி நேரம் பணி புரிய பயன்படுத்த வேண்டியிருக்கும். மேலும் தூங்கி ஓய்வெடுத்துக் கொள்ளுவதற்கு 56 மணி நேரம் தேவைப்படுகிறது. ஆக அனைவருக்கும் ஒவ்வொரு வாரத்திலும் 72 மணி நேரம் ஓய்வு நேரம் கிடைக்கிறது.

இந்த உலகத்தில் இருக்கும் பெரிய ஆராய்ச்சியாளர்களும், சிறந்த கலைஞர்களும், விளையாட்டு வீரர்களும் மற்றும் பல விதமான சாதனைகளைப் படைத்தவர்களும் தங்களுடைய ஓய்வு நேரத்தைத் தங்களுடைய இலட்சியங்களை அடையும் முயற்சிகளில் பயன்படுத்திக் கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள்.

இரவில் நன்றாகத் தூங்கிவிட்டு காலையில் எழுந்திருக்கும்போது, மனதில் சுறுசுறுப்பும் உற்சாகமும் நிறைந்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலமாகும் அண்டவெளி இரகசியங்கள்!

இரவு வானத்தில் கண் சிமிட்டும் கணக்கற்ற விண்மீன்கள் கண்களைக் கொள்ளை கொள்ளும். கழுத்து வலிக்க வலிக்க — கால் கடுக்க நின்றுகொண்டே மணிக் கணக்கில் அவற்றை இரசிக்கலாம்.

இரசிப்பதோடு நின்றுவிடாமல் அவற்றை ஆராயப் புகுந்தால் — எல்லையின்றி விரியும் பிரபஞ்சத்தின் புதிர்கள் விடுபடத் தொடங்கும். ஆனால் ஆராய்ச்சியின் முடிவு கண்டு விட முடியாது.

எமது முன்னோர்கள் இவற்றைப்பற்றி நிறைய வே தெரிந்திருக்கிறார்கள். மனித வாழ்வில் நட்சத்திரங்களும் கோள்களும் பல தாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் அவர்கள் நம்பி வந்திருக்கிறார்கள். சாஸ்திர சம்பந்தமான இத்தகைய பல புதிர்களும் கூட விஞ்ஞானத்தால் விடுவிக்கப்படவில்லை.

ஆனால் விஞ்ஞானிகள் தற்போது கண்டுபிடித்து வரும் பல விடயங்களை ஏற்கெனவே எமது முன்னோர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தான் ஆச்சரியத்துக்குரிய விடயம்.

இருண்ட வானத்தில் வெறுங் கண்களால் பல ஆயிரக் கணக்கான நட்சத்திரங்களைக் காண முடிகிறது. பூமியின் வடவரைக் கோளத்தில் இருந்து சுமார் மூவாயிரம் நட்சத்திரங்களையும்— அதன் தென்னரைக் கோளத்தில் இருந்து சுமார் மூவாயிரம் நட்சத்திரங்களையும் தெளிவான இரவொன்றில் அடையாளம் காண முடியும். ஆக மொத்தம் சுமார் ஆறாயிரம் நட்சத்திரங்களை வெறுங் கண்களால் இங்கிருந்து பார்க்க முடியும்.

வெறுங் கண்களால் பார்க்க முடியாத கணக்கற்ற பல பில்லியன் (1 பில்லியன்= பத்தாயிரம் லட்சங்கள்) நட்சத்திரங்கள் அண்ட வெளியில் பரந்து கிடக்கின்றன. அவற்றை விட ஏராளமான கிரகங்களும், வால்வெள்ளிகளும், விண்கற்களும், தூசிப்படைகளும் கூட விண்ணில் சுழல்கின்றன.


இவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகள் மிகவும் சுவாரசியமான தகவல்களை தந்து கொண்டிருக்கின்றன. பெரும் செலவில் விண்வெளி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொலைநோக்கிகள், விண்வெளி ஓடங்கள், கணனிகள், நவீன கமெராக்கள், றொபோக்கள் எனப் பல நவீன தொழில் நுட்ப சாதனங்கள் இவ் வாய்வுகளுக்கு கைகொடுக்கின்றன.

வளிமண்டலத்தில் உள்ள தூசி துணிக்கைகள், நீராவிப் படலங்கள், முகில்கள் என்பவற்றின் செறிவு நேரத்துக்கு நேரம் மாறுபடுவதால் தொலைநோக்கிகள் ஊடாகக் கூட நட்சத்திரங்களை ஆராய்வது கடினமாகிறது. ஒரு நட்சத்திரத்தைக் கண்டு பிடிக்க பல இரவுகள் காத்திருக்கவேண்டிய தேவையும் எழுகிறது.

விண்ணில் நிலாக்கால இரவுகளில் தெளிவாகச் சந்திரனை அடையாளம் காண முடிகிறது. நட்சத்திரங்களைத் தவிர சந்திரனும் சில கோள்களும் மட்டுமே வெற்றுக் கண்களுக்குப் புலப்படக்கூடியன.

விடிவெள்ளி எனப்படும் வெள்ளி (Venus), சனி (Saturn), செவ்வாய்(Mars) புதன் (Mercury), வியாழன் (Jupiter) ஆகிய கிரகங்களே அவையாகும். ஏனைய மின்னுவதெல்லாம் அனேகமாக நட்சத்திரங்களே.

நட்சத்திரங்களுள் சிரியஸ் (Sirius), கனோபஸ் (Canopus), வெகா (Vega) போன்றவை பிரகாசம் கூடியவை. கி.மு. 150 அளவில் கிரேக்க வானியலாளர்கள் இவற்றின் பிரகாசத்தை அளக்க முனைந்திருக்கிறார்கள். அவர்கள் பயன்படுத்திய அலகு Magnitude என்பதாகும். இன்று தொலைநோக்கியூடாகவும் இதே அலகைப் பயன்படுத்தியே அவற்றின் பிரகாசம் அளக்கப்படுகிறது எனலாம்.



எந்நேரமும் விண்ணை நோக்கி ஆராய்ந்த வண்ணம் தனது 'கண்களை' அகலமாகத் திறந்திருக்கும் தொலைகாட்டிகளுள் ஒன்று. இது இங்கிலாந்தில் அமைந்துள்ளது.

முன்பெல்லாம் பிரகாசமானவை எனக் கருதப்பட்ட நட்சத்திரங்களை விடப் பல மடங்கு பிரகாசமான புதிய நட்சத்திரங்கள் இப்போது தொலைநோக்கியூடாகத் தென்படுகின்றன. இவை வெகுதொலைவில் இருப்பதால் அடையாளம் காண்பது—வெற்றுக் கண்களுக்கு — சாத்தியமாவதில்லை.

இருண்ட வானத்தில் மின்னும் நட்சத்திரங்களின் பாதையை அறிய, திறந்த கமெராக்கள் பலமணிநேரம் 'ஷட்டர்' மூடப்படாமலே காத்திருந்தன. படச்சுருளில் பதிவுகளின்படி நட்சத்திரங்கள் வரைந்த வளைகோடுகள் பிரகாசமான கீற்றுகளாகத் தென்பட்டன.

சூரியனுக்கு மிக நெருக்கமான நட்சத்திரமோ அதிலிருந்து 41மில்லியன் மில்லியன் (ஒரு மில்லியன்என்பது பத்து லட்சங்கள்) கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறது என்றால் பிற—தொலைவில் உள்ள நட்சத்திரங்களின் தூரத்தை கணித்தாலும் அவற்றை கிலோ மீற்றரிலோ மைலிலோ சொல்லுவதும் மிகவும் சிரமமானது என்பதனைப் புரிய முடியும். மில்லியன், பில்லியன், ட்றில்லியன் போன்ற எண்களுக்கும் எட்டாத தொலைவில் அவை உள்ளன.

எனவே இத்தகைய தூரங்களை அளக்க வானியல் ஆராய்ச்சியாளர்கள் ஒளியின் வேகத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

சந்திரனில் இருந்து பூமிக்கு ஒளிவந்து சேர எடுக்கும் நேரம் 1.28 செக்கன்கள். இது பூமிக்கு மிக அண்மையில் உள்ளதும் பூமியைச் சுற்றிவருவதுமான ஒரே ஒரு உபகோள் என்பது யாவரும் அறிந்த விடயம்.

சனிக்கிரகத்தில் இருந்து பூமிக்கு ஒளிவந்து சேர எடுக்கும் நேரம் 1.2 மணித்தியாலங்கள் ஆகும்.

நட்சத்திரங்களில் இருந்து ஒளி பூமியை வந்துசேர பல ஆண்டுகள் எடுக்கும். ஆண்டு ஒன்றிற்கு ஒளிசெல்லும் தூரம்—அதாவது ஒளி பிரயாணம் செய்யும் தூரம் ஒளியாண்டு எனப்படும்.

வெகுதொலைவில் உள்ள நட்சத்திரங்களின் தூரத்தை அளக்கும் அலகாக ஒளியாண்டு பயன்படுகிறது. ஒரு ஒளியாண்டு எனப்படுவது 9460 பில்லியன் கிலோமீற்றர்களாகும்.

100 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள ஒரு நட்சத்திரத்தினை பூமியில் இருந்து இன்று நாம் பார்க்கின்றோம் என வைத்துக் கொள்ளுவோம். இப்போது நாம் காண்பதோ அந்த நட்சத்திரம் 100 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமையினைத்தான் என்பதுதான் உண்மையாகிறது.

## மு. சிவநேசன்

அப்படிப்பட்ட நட்சத்திரமொன்றின் இன்றைய நிலைமையைக் கண்டுகொள்ள இன்னும் 100 ஆண்டுகள் காத்திருக்கவேண்டும். இன்று அங்கிருந்து புறப்படும் ஒளி இங்கு வந்துசேர 100 ஆண்டுகள் எடுக்கப்போகிறதே!

கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் வெகுதொலைவில் உள்ள நட்சத்திரம் 10 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் இருப்பதாக கணிக்கப்படுகிறது. அதை இப்போது பார்க்கும் நிலைமையோ 10 பில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. அதாவது பூமி தோன்ற முன்பு அதிலிருந்து புறப்பட்ட ஒளிதான் இன்று இங்கு வந்து சேர்ந்திருக்கிறது என்றால் அது ஆச்சரியமாக இல்லையா?

எல்லையின்றி விரிந்து பரந்து செல்லும் அண்டவெளியில் இன்றுவரை இருப்பதாக கணிக்கப்பட்டுள்ள நட்சத்திரங்கள் எத்தனை தெரியுமா? இருநூறு பில்லியன் பில்லியன் நட்சத்திரங்கள் இருப்பதாக வானியல் நிபுணர்கள் கணிக்கிறார்கள். இருநூறுக்கு பின்னால் பதினெட்டு ''0'' களை போட்டால் வரும் தொகை இதுவாகும்.

ஒரு கோடி நட்சத்திரங்களை ஒரு சாக்கில் பொதி செய்வதாக கற்பனைபண்ணினால் முழு நட்சத்திரங்களையும் பொதிசெய்ய எத்தனை சாக்குகள் தேவைப்படும்? அவ்வாறு பொதிசெய்த சாக்குகளில் ஒரு கோடி சாக்குகளை ஒரு குவியலாக குவிப்போம். அவ்வாறு இருபது லட்சம் குவியல்கள் தேறும் என்றால் பாருங்களேன்.

அத்தனையும் ஒவ்வொன்றும் எமது சூரியனைப்போன்றவை. அதைவிடப் பல மடங்கு பெரியவை; தீப்பிழம்பாக எரியும் வாயுவாக உள்ளவை என்றால் பிரபஞ்சத்தே பரந்து கிடக்கும் சக்தியின் அளவுதான் என்ன?



சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வெடித்துச் சிதறிய நட்சத்திரம்ஒன்றின் எச்சங்கள். இந்த வெடிப்பால் ஏற்பட்டஒளிக்கீற்றுகள் பூமியை வந்தடைய சுமார் ஐயாயிரம் ஒளி ஆண்டுகள் சென்றன. 1054 ஆம் ஆண்டு பூமியில் உள்ளோர் இந்த வெடிப்பைக் கண்டனர். இத்தகைய நட்சத்திர வெடிப்பை சுப்பநோவா Supernova என்பார்கள். அவை நீண்ட காலத்துக்கு பெருமளவில் ஒளியைத் தொடர்ந்து வெளிவீசிக் கொண்டிருக்கும்.

பூமியில் இருந்துபார்க்கும் போது கூட்டம் கூட்டமாகத் தென்படும் நட்சத்திரங்கள் வானில் பல வடிவங்களை வரைகின்றன. ஆனால் நிஜத்தில் அவை எங்கெங்கோ வெகு தொலைவில் இருக்கக் கூடும். புள்ளிகளை இணைத்து வடிவங்களை வரையும் குழந்தைகளின் கலைபோன்றது இக்கற்பனை. ஐம்பதுக்கும் மேற்பட்ட இத்தகைய வடிவங்கள் பெயரிடப்பட்டுள்ளன. இவற்றில் சிலஎமக்குப் மிகப் பழக்கப்பட்ட பெயர்களே. உதாரணமாக Aries — மேஷம், Taurus—ரிஷபம்'

## அளவிடமுடியா அதன் எல்லைகள்!

Gem ini—மிதுனம், Cancer —கடகம், Leo — சிம்மம், Libra—துலாம், Virgo— கன்னி ,Scorpio—விருச்சிகம். Sagittarus—தனுஸ், Capp-ricomus—மகரம், Aquarius —கும்பம், Perseus—மீனம் போன்ற ராசிகள் இவற்றில் சிலவாகும்.

நட்சத்திரத்தை ஒரு பாரிய அணுகுண்டு என்றால் அது மிகையாகாது. அது ஒளிரக் காரணம் எரிதல்தான். உள்ளே ஐதரசன் அணுக்கள் தாக்கமுற்று ஹீலியம் (Helium) உருவாகின்றது. இவ்வணுத்தாக்கம் பெருமளவு சக்தியை வெளியிடுகிறது. எனவே நட்சத்திரங்களின் நடுவே வெப்பநிலை பல மில்லியன் பாகைகளைத் தாண்டும்.

எனவே இவற்றின் வெளிப்பகுதி அதிபிரகாசமாக ஒளிருகிறது. ஒளியும், வெப்பமும், வானொலி அலைகளும், கதிர் வீச்சும் அங்கிருந்து கிளம்புகின்றன. முழு ஐதரசனும் எரிந்து முடியும்வரை இவை ஒளிரும்.

பெரும்பாலும் வாயுத் தொகுதியாக காணப்படும் நட்சத்திரங்கள் பருமனில் வேறுபட்டவையே. அனேகமாக இவை சூரியன் அளவு பருமன் உடையவை எனலாம். சூரியனின் விட்டம் 14 இலட்சம் கிலோ மீற்றர்கள் எனப்படுகிறது. முப்பதினாயிரம் இலட்சம் கிலோ மீற்றர் விட்டமுள்ள நட்சத்திரங்களும் அண்டவெளியில் உள்ளன.

பூமியைவிட சிறிய நட்சத்திரங்களும் உள்ளன. ஏன் 15 கிலோ மீற்றர் மட்டுமே விட்டம் கொண்ட சிறிய நட்சத்திரங்களும் உள்ளன. அதற்காக அவை விரைவாக எரிந்து முடிந்துவிடும் எனக் கருதவேண்டா.

இங்குள்ள நட்சத்திரங்களில் சடப்பொருள் செறிவுமிகமிக அதிகம். இவற்றில் ஒரு கரண்டி உள்பொருளை அள்ளி நிறுத்தால் அது பல தொன்களைத் தாண்டுமாம். அத்தனை நெருக்கம்.

தூசி துகள்களும் வாயுவும் கொண்ட குவியலாக அண்ட வெளியில் முகில்போல மிதக்கும் ஒளிராத சடப் பொருள்களும் ஏராளம். இவை நெபுலா என அழைக்கப்படுகின்றன. நெபுலா ஒன்றின் பருமன் எவ்வளவுதெரியுமா?

தூசிப்படையில் மிதக்கும் தூசித்துணிக்கை ஒன்று மட்டும் பூமியைவிடப் பலமடங்கு பெரிதாக இருக்கலாம் என்றால் முழு நெபுலா ஒன்றன் பருமன்? ?...

ஒரு செக்கனுக்கு 25 கிலோ மீற்றர் வேகத்தில் விரிவடையும் நெபுலா ஒன்றின் தற்போதைய விட்டம் 3 ஒளியாண்டுகள் என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா? அந்த நெபுலாவின் ஒரு முனையில் ஏற்றி வைத்த விளக்கை மறுமுனையில் இருந்து காணவே 3 ஆண்டுகள் செல்லும்.

பிரபஞ்சத்தே நட்சத்திரங்கள் ஒளிர்ந்து தீர்ந்து கொண்டும் பிறந்து கொண்டுமே இருக்கின்றன. இவற்றுக்கும் ஆயுள் உண்டு என்கிறார்கள் விஞ்ஞானிகள். இவை பிறப்பதையும் மறைவதையும் காணத் துடிக்கிறார்கள். கணக்கில்லா நட்சத்திரங்களில் எதை தொலைநோக்கியால் பார்த்தபடி காத்திருந்து — அதுவும் எத்தனை யுகம் காத்திருந்து — பிறப்பு, இறப்பை சந்திப்பது என்பதே கேள்வி.

சூரியனின் ஆயுள் பத்து பில்லியன் ஆண்டுகளே! இதில் ஐந்து மில்லியன் (5000,000,000) ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்னும் அதே அளவு காலம் அதன் ஆயுள் நிலைக்கும் எனலாம்.

15 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு அண்டவெளியில் ஒரு பெரும் வெடிவிபத்தாக இப்பிரபஞ்சம் தோன்றி இருக்க வேண்டும் எனக் கருதுகிறார்கள் விஞ்ஞானிகள். அதைத் தொடர்ந்து எங்கும் சிதறும் தீப்பிழம்புகளும் சடப்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேளாண்மை

'சுரீர்' என்று கையில் ஏதோ கடித்தது. வலி ஒரு புறம். நித்திரை குழம்பிய எரிச்சல் ஒருபுறம். ராஜன் பாயைச் சுருட்டிக்கொண்டு எழும்பினான். விடிந்துவிட்டிருந்தாலும் இன்னும் முழுதாக இருள் பிரிந்திருக்கவில்லை. பனிக்குளிர் வேறு.

'எறும்பாய்த்தான் இருக்க வேணும் வேறு ஏதாவதெண்டாலும் இவ்வளவுக்குக் கடுக்கத்தொடங்கிவிடும்' தனக்குள் நினைத்துக் கொண்டு வெளியில் வந்து கடித்த விரலைத் தடவிப் பார்த்தான், ஒன்றும் தெரியவில்லை. கம்பியில் கிடந்த அரிக்கன் விளக்கைக் கழற்றிப் படுத்த இடத்தைப் பார்த்தான். நிலத்தில் கோடு கோடாய் வெடிப்புக்கள் தெரிந்தன.

''சரி போகட்டும், இண்டைக்கு முழுவியழம் சரியில்லைப்போலை...''

குசினிக்குள் விளக்கு எரிவது தெரிந்தது.

''அம்மா! தேத்தண்ணி போட்டாச்சே...'' அங்கிருந்தவறே கேட்டான்.

''ஓம்...ஓம்...வா...''

''ஐயாவுக்கு ராமுழுதும் ஒரே இழுப்பு. இண்டைக்கு நீதான் வாகனம் எடுக்க வேணும். ரெண்டாவது ரேணாம் தம்பி...''

''அடச்சீ—ஏதோ கையில் கடிச்சும் போட்டுது...'' சலித்துக்கொண்டான்.

வாகனம் ஓடுவது என்றால் அவனுக்கு அலாதிப் பிரியம். ஐயா லேசில் அவனை விடமாட்டார். அவன் 'கொண்டக்டராய்த் தான் நிண்டு கொள்வான். அதுகூட இஷ்டமான வேலைதான். இன்றைக்கு ஏனோ சோம்பலாக இருந்தது.

''ஐயாவுக்கு இழுப்போ... எனக்கொண்டும் சத்தம் கேட்கயில்லை...''

''இழுத்து மூடிக்கொண்டு படுத்தால் என்னண்டு சத்தம் கேட்கும்? இரவு முழுக்க எங்களுக்கு நித்திரையில்லை...''

படியில் குளிருக்கு முடங்கிக்கொண்டிருந்தவாறு பதில் சொன்னாள் வானதி. ராஜனைவிட மூத்தவள். இந்த ஆவணியுடன் இருபத்தொன்பது வயது முடியப் போகின்றது என்று சொல்லிச் சொல்லியே அம்மா ஏங்கிப்போய் இருக்கிறா.

''தம்பி...'' ஐயா கூப்பிடுவது கேட்டது.

''வாறன் ஐயா...''தேநீரைப் பருகி முடித்துக் கோப்பையை வைத்துவிட்டுராஜன் எழுந்து போனான்.

''...இண்டைக்கு வானை நீதான் எடு தம்பி. ஏழேகால் ரேண் எல்லே. பிறகு ஏலுமெண்டாக் நான் வாறன். தயா யாரும் நிண்டால் உன்னோடை கூட்டிக்கொண்டு போ...''

''...சரி நான் ஆரையும் பார்க்கிறேன் ஐயா...சனிக்கிழமை தானே. பிரச்சினையிருக்காது...''

சனிக்கிழமை என்றவுடன் கௌரியின் நினைவு வந்தது. கௌரிக்கு இண்டைக்கு ரியூசன் இருக்கும். எப்படியும் ஆவரங்கால் சந்தியில் நிற்பாள். அந்த உற்சாகம் விசிலாக மாறக் குளிக்கப் போனான்.

தம்பி பகிர் எழும்பிவிட்டிருந்தான்.

'' நானும் போறன் வானோட...''

''...நீபோய் என்ன செய்யப் பேறாய்? காசு வாங்குவியே? இண்டைக்கு ரியூசன் இருக்கெல்லே பேசாமல் வீட்டிலை படி.''

வானதி அதட்டினாள்.

''...நான் போனால்... உனக்கு அந்தச் சாறிவாங்க முந்நூறு ரூபாய் தானேக்கா கேட்டனி நீ. ஐயாதரேல்ல. நான் இண்டைக்குப் போய் உழைச்சு உனக்கு முந்நூறு ரூபாய் தாறன்...''

பெரிய மனுஷத்தனமாய் பகீர் சொன்னான்.

''...எனக்கு ஒருதரும் காசு தரத் தேவையில்லை சரியா...''

வானதி கோபமாமச் சொன்னாள்.

கிணற்றடியில் நின்ற ராஜனுக்கு இந்த உரையாடல் கேட்டது. 'அக்கா எவ்வளவு நாளாகக் கேட்கிறா. தையல் வகுப்பில் ஏதோ 'பார்ட்டி' என்று எல்லோரும் ஒரே மாதிரி சாறி உடுத்த வேணுமாம். அதற்கு எழுநூறு ரூபாய் வேணும் என்று முதலில் கேட்டு ஐயா கொடுக்கார். இப்ப அதை ஆயிரமாக்கி விட்டாள். எத்தனையோ நாள்களாக அக்கா கேட்கிறா. தட்டுப்பட்டுக் கொண்டே போகிறது. காலமை ரேண் எடுத்தால் தான் ஓரளவு காசு வரும். அதில் பாதி மண்ணெண்ணெய்க்குப் போய்விடும். தோட்டத்தில் வெண்காயத்துக்கு இறைப்பு, மருந்தெண்டு மிச்சம் போயிடும். மற்றப்படி வீட்டுச் செலவுகளைச் சமாளிக்கத்தான் காசு காணும். பகீருக்கும் சின்னவங்களுக்கும் ரியூசன் காசு வேற.'

'வானும் திருத்த வேணும். பிரச்சினைக்கு முதல் ஓரளவு காசு புழங்கேக்கையே பழசாய்த்தான் வான் எடுத்துத் திருத்தினது. இப்ப ஒரே சத்தம். கௌரி கூடப்பகிடி பண்ணினாள். 'மரமஞ்சள் குடிச்சிட்டுத்தான் ஏற வேணும்' என்று. வெட்கமாக இருந்தது. சீ. ரீ. பி. வராமல் இருந்திருந்தால் ஓரளவு உழைப்பு வரும். சனமும் பாவம் தான்.'

''...அண்ணா நானும் வாறன்...'' பகீர் கிணற்றடிக்கு வந்தான்.

''...வாவன்... வந்து ஒரு சீற்றப் பிடிச்சு இரு போ...''

''...நான் காசு வாங்குவன் தானே! ஐயா எல்லாம் சொல்லித் தந்தவர். இண்டைக்கு நான் காசு வாங்கினால் அக்காவுக்கு முந்நூறு ரூபாய் ஓ...''

''...அப்ப இண்டைக்கு நீ வேண்டாம் போ...''

''...ஆ பார்ப்பம்...'' பதினொரு வயசுக்குப் பிடிவாதமும் கூட வளர்த்தியும் கூட. நல்லாச் சாப்பிடுகிறான் போல.

சேர்ட்டை எடுத்துப் போட்டுக் கொள்ளும் போது கௌரியின் நினைவு வந்தது. அவளுடனான [illegible] வகையானது [illegible] தடுமாற்றமாகவே இருந்தது.

ஐயாவிடம் சொல்லிக் கொண்டு வந்து 'வானை' எடுக்க பகீரும் வந்து ஏறிக் கொண்டான்.

அம்மா உள்ள தெய்வத்துக்கெல்லாம் பூ வைத்து முதலே ஊதுபத்தியும் ஏற்றியிருந்தாள். ஸ்டியரிங்கைத் தொட்டுக் கும்பிடும் போது ஏனோ கை நடுங்கியது.

'விசர்' தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் ராஜன்.

வானதி கேற்றைத் திறந்து கொண்டு முன்னால் நின்றாள். இந்த வீட்டின் அதிர்ஷ்டம் அவள் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்க, அவளுக்குத்தான் இன்னும் அதிர்ஷ்டம் வருகுதில்லை. பகீர் வாகனத்தில் ஏறியதைக் கண்ட அவனின் நாய்க்குட்டி தானும் ஏற




முயற்சித்தது. அதை அவன் துரத்தத் துரத்த ராஜன் வானை 'ஸ்ராட்' செய்தான்.

''அக்கா இண்டைக்குனக்கு முந்நூறு ரூபாய் ஆ...''

பகீரின் கத்தல் கேட்கக் கூடாதென்றே வானை வேகமாக்கினான்.

அச்சுவேலி பஸ்ராண்டில் அவ்வளவு கூட்டமில்லை. வழமையாகக் ஸ்கூல் பஸ்ஸில் போற பிள்ளைகள் நிரம்பி வழிவர். இன்று யாருமில்லை. ரேணுக்கு அடித்து விட்டு அவன் இறங்கிக் கொண்டான்.

''...யாழ்ப்பாணம் போறாக்கள் வந்து ஏறிக் கொள்ளுங்கோ...'' என்று கத்தி ஆட்களை அழைத்தான் பகீர்.

ராஜனுக்குச் சிரிப்பு வந்தது. அவனும் பழகிட்டான். பரம்பரையாக இந்தத் தொழில்தானோ? இந்த வயதில் எந்தப் பிள்ளைக்கும் உழைக்கும் ஆசை வரக் கூடாது. ஆனால் யாருக்கு வராமல் விட்டது. எனக்கும் வந்ததே...?



**-மௌனிப்ரியா-**

''என்ன? ஐயா இண்டைக்கு வரயில்லையே? நல்ல ஆளைத்தான் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறாய். ஐடென்ரி காரிட் இல்லையெண்டு ஆளைப் பிடிச்சுக் கொண்டு போகப் போறாங்கள்...''

சிரித்தான் தயா.


''ஐயாக்கு இழுப்படா. நீ வாவன் என்னோட...''

''பகீர் இருக்குறான் [illegible] போக

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 59



சொற்சிலம்பம் இல. 59
சஞ்சீவி,
861, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 24 — 07 — 1998

**இடமிருந்து வலம்**

1. ஒரே சமயத்தில் பத்து விடயங்களை கவனிக்கத் தக்கவன். 5. பசுவின் பெண் கன்று. 7. செய்யுளின் வண்ணம். 8. வினா. 9. தேர். 10. தற்போதைய யுகம். 11. தங்களது எனப்பொருள் தருவது. 12. உயிரின் ஆரம்பம் இதில். 13. படி. 14. இந்தச் சங்குக்கு மதிப்பு அதிகம். 15. மீன் பிடிக்கவும் கோழி அடைக்கவும் பயன்படும் கூடைக்கு இந்தப் பெயர். 16. தோழன். 18. தெய்வ மாதர்களுள் ஒருவர். 19. வாழ்க்கைத் துணைவி. 20. தென்னை, பனை ஆகியவற்றின் நார். 21. தீயின் வடிவம்.

**மேலிருந்து கீழ்**

1. அயோத்தி மன்னன். 2. நவரசங்களில் ஒன்று. 3. கொலை. 4. ஓர் அசைச் சொல். 5. தினம். 6. ஒன்று சேர்வதால். வருவது. 8. கிண்டல் 10. இனிமையான சாறு தருவது. 12. ஏர், 13. பரிவு காட்டுதல். 14. வயலில் கட்டும் எல்லை. 15. கை. 17. தமிழகத்துக்கும் கர்நாடகத்துக்கும் இடையில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நதி. 18. சுட்டுச் சொல். 19. சந்திரன்.

### சொற்சிலம்பம் 57 — விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சவடால். 4. உதவி. 7. தடம். 8. சமையல். 9. கம்பீரம். 11. கம்மல். 13. தம்பதி. 14. சுனை. 15. பாகு. 16. வீடு. 17. தும்பி. 19. தழும்பு. 21. தாவரம்.

**மேலிருந்து கீழ்**

1. சதகம். 2. வடம். 3. டாம்பீகம். 4. உமை. 5. தயவு. 6. வில். 8. சம்மதி. 10. ரம்பம். 12. யானை. 13. தகும். 14. சுடும். 15. பாதுகை. 16. வீழும். 18. பிதா. 19. தர. 20. புசி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: செ. மயூரன்,
566, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ இரண்டாம் பரிசு: சி. மாதுளா,
எல்லை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

★ மூன்றாம் பரிசு: செல்வி செல்வமதி செல்வராசா,
கிராம்புவில் மேற்கு வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 58 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினையன்னாய் உன்னிடத்தில்.....!

(நயினைத் தாயை வழிபடப் புறப்பட்டு, அவலப்பட்டுத் திரும்பிய பக்தையின் வேண்டுதல் இது.)

பண்ணைக் கடல் தொடங்கிப்
படகேறுந் துறைவரைக்கும்
எண்ணி முடிக்க வொண்ணாச்
சோதனையின் சாவடிகள்!

தூரம் நெடிதெனினும்
தேவியினைத் தரிசிக்கப்
'பாரம் சுமந்த' மனப்
புலம்பலுக்கோ குறைவில்லை!
கூரம்புகளாகிக் குத்தும்
துயர்களிடை
தேருந் திறனுடனே
தீர்வுக்காய் துதிக்கின்றோம்!

முன்னெழுந்து முகங்கழுவி
நீராடிப் புறப்பட்டு......
தின்னத் தவிதவிக்கும்
வாயின் உணர்வொடுக்கி
கின்னஞ் சிறுசுகளாய்
'அம்மை'யுந்தன்
வண்ணத்தில் ஆசையுற்று
வந்தோம் நாம்!

நடுத்தீவில் சப்பறத்தில்
நள்ளிரவு ஒரு மணிக்குன்
காட்சிகளைக் கண்கண்டு
களித்தேகமுடியாமல்
பகல் வந்தோம்!

வழிவழியாய்ச் சோதனைகள்!
வாட்டும் வெயிற்கொடுமை!
தீண்டும் கடற்காற்றில்
தோய்ந்து பின்னர்
உதடுகளில், உப்பின் சுவை சுமந்து...
கால்வலியின் இயல்பறிந்தோம்!

காரணமோ...யுத்தக்கெடுபிடியாம்...
ஏனம்மா......?
இந்தப் பழிசுமக்க முற்பிறப்பில்
நாம் செய்த வினை தீதோ...?

தீபஒளி தகதகக்க...
பூங்குவியல் சொரிந்திருக்க
வீதிவழி வலம்வர நீ......
நாமெல்லாம் பின்தொடர......
புழுதிவெயில் சுட்டெரிக்கா!
பூங்காற்றோ விசிறிவிடும்!
உன் கருணைத் தூறலிலே
வெயில் வெம்மை அடங்கிவிடும்!

இருந்தென்ன......?
உனைக் காண வரக்கூட......
'விசாவெல்லோ' வேண்டுமிங்கு!

உன்னிடத்தே சொல்லிவிட
எண்ணத்தில் பல உண்டு!
கலையாற்றில் நீச்சலிட......
கருங்கல்லாய் உறுதியிலே
என்றும் நிமிர்ந்திருக்க...
கன தூரம் பிரிந்துவிட்ட
'அன்பு'களை நினைந்துருக......
உன் முன்னே பிரார்த்திக்க...
இன்னுமாய் விஷயமுண்டு......!
என்றாலும்
நான் கேட்பேன்......
என் தாயே
இந்தக் 'கியூ' வேண்டாம்!
நகரில் பஸ்ஸெடுத்தால்
படகுத்துறைவரைக்கும்......
இறங்குகிற நிலைவேண்டாம்......!

உன் காட்சிதான் கண்ணில்
முதலில் விழவேண்டும்!
நீலப்படைகளல்ல ...
நிச்சயமாய் இது உண்மை!

அன்னாய்!
அப்படியோர் வழிவிடு நீ
அதன் பின் தான் நான் கேட்பேன்
மீதியெல்லாம்......

—தாட்சாயணி—

# கண்ணோடு மணியானால் கண்ணை விட்டுப் பிரிவதில்லை!

சூரியனாய் உலகில் உதித்துவிட்டால்—அதன்
சுடர் விட்டுப் பிரிவதில்லைத் தம்பி
சுந்தர நிலவாய் எழுந்துவிட்டாலும்—சிறு
கறை விட்டுப் பிரிவதில்லை அறி!

மரமாக மண்ணில் மாறிவிட்டால்—குளிர்
நிழல் விட்டுப் பிரிவதில்லைத் தம்பி
பூமிக்கே உரி பொருளாகிவிட்டால்—புவி
ஈர்ப்பு விட்டுப் பிரிவதில்லைத் தெரி!

கடல் என்று தோன்றிவிட்டால்—பொங்கும்
அலை விட்டுப் பிரிவதில்லைத் தம்பி
சலனம் மனதில் பிறப்பெடுத்தால்—அதை
சங்கடம் விட்டுப் பிரிவதில்லைப் புரி!

காகக் கூட்டினுள்ளும் கருங்குயில்—தன்
கூவல் விட்டுக் கரைவதில்லைத் தம்பி
செவ்விரத்தமே பாலாக மாறினாலும்—தூய
வெண்மை விட்டுப் பிரிவதில்லை உணர்!

— பொன். முருகதாஸ் —

# செம்மணிச் செந்தழல்கள்

சடுதியாக
கண்ணியம் சிறிதுமில்லா கனவான்களிடம் புதிதாய்
பண்ணாத பாவத்துக்கு பலநூறு பேர்
சாவோலை பெற்றனர் சதி தந்த வினையால்
சாவைத் தழுவிய அனைவருக்கும் சதுப்பு நிலமே
புதை குழியானது புதுமையில்லை; மண்ணுக்கு
விதை யானவர்க்கு நீள் விசும்பே சாட்சி!
நின்ற
படைச்சிப்பாயின் ஏக்கப் 'பசி' போக்க அங்கே
பகலிரவாய் கதறி, பாவையவர் கற்பிழந்து
ஈற்றில் இன்னுயிரையும் ஈந்த சேதியும்
ஈன்றவர் சிந்தை நோக ஈனர்களிடம் சிக்கி
அலறித்துடித்து ஆற்றொணாது முற்றாய்
அழிந்து ஒழிந்து போன அப்பாவிகள் கதையும்
எமக்கு
வேதனை தரும் வேதங்களானாலும் புதியன வல்ல
இதயம் சிதற இரத்தமாய்க் கண்ணீர் கசிகிறது
வெஞ்சினம் வெறுமை கண்டு பஞ்சாக
நெஞ்சினை நெருஞ்சிமுள் தைக்கிறது
வஞ்சனையை வெல்ல வழியின்றித் தவிக்கிறது
ஊமை நெஞ்சோடு உள்ளவரைதான் இங்கே
மனிதப் பூச்சிகளின் மாண்புறு உயிர் தங்கும்
இப்போது
கைதானோர் காணாமற் போனோர் விவரம்
கைமேல் தெரிகிறது கணக்கும் தெளிவாய் புரிகிறது
மனித நேயம் இந்நாட்டில் மதிக்கப் படுகிறதாம்
மன்னிக்கவும் யார் சொன்னது மிதிக்கப்படுகிறது
அழுத கண்ணீர் கூரிய வாள் என்றால்
கொட்டிய குருதி கொற்றத்தை வீழ்த்தாதோ?
பலிபோன வுயிர்கள் பலவும் ஊழித்தீயாய்
பழி தீர்க்கப் பட்டியம் ஏந்தி பலி கொள்ளாதோ?
செம்மணியில்
செந்தழல் எரியும் கொற்றவை சிந்து பாடும்
சந்தனம் மணக்கும் சவ்வாதின் வாடை வீசும்
சரித்திரம் வாய்திறந்து சிரிக்கும் பேசும்
சங்கு முழங்கும் சவக்குழிகள் பிளக்கும்
எலும்புக் கூடுகள் எழும் எக்காளமிடும்
எவர்க்கும் அஞ்சாது நீதி கேட்கும்
அப்போது அறமே கூற்றாய் அழிக்கும்
அதுவரை பொறுத்திருப்போம்! அதன்பின்
வித்தை காட்டும் வீணர் வீழ்வர் மறைவர்
விண்ணும் வெளிக்கும் விடி வெள்ளி முளைக்கும்!

— க. தியாகராஜா —

# வேண்டுதல் வேண்டாமை

கயமையொழி மனது வேண்டும் — இங்கே
கதைத்தே நேரம் கழிக்க வேண்டாம்
உயர்வுமிகு எண்ணம் வேண்டும் — பின்னால்
உதைத்து இலாபம் காண வேண்டாம்!

ஓடும் நதியும் கடலும் காற்றும் — மிக
உல்லாசமாய் திரிய வேண்டும்
வாடும் மலரும் மக்கள் துயரும் — ஒரு
வரம்பு மீறிப் போக வேண்டாம்!

கலையை இரசித்துக் கவிதை பாடி — எழுந்து
கம்பீரமாய் நடக்க வேண்டும்
அலைய வைத்து மனதை எங்கும் — அப்பால்
''அம்போ'' என அரற்ற வேண்டாம்!

கொல்ல வரும் பகையைக் கூட — அன்பால்
கொடுமை நீக்கி மகிழ வேண்டும்
வெல்ல எண்ணி வழியை மாற்றி — உன்பால்
வேதனையை வளர்க்க வேண்டாம்!

பேதமில்லை மனிதர் நம்முள் — என்ற
பெரிய மனது வளர வேண்டும்
ஏதமிலா ஒருவன் அவனே — அந்த
இறையின் பேரில் கறைகள் வேண்டாம்!

ஓதல் வாழ்தல் சாதல் என்று — வாழ்க்கை
ஓடுகையில் இரசிக்க வேண்டும்
''போதல் எப்போ(து)'' என்றே எண்ணி — தினமும்
பொரி கலங்கி நிற்றல் வேண்டாம்.

— அனலையூர்ச் சேந்தன் —

# வன்னித் தோழனின் மடலுக்கு ஒரு பதில்!

கடந்த வாரம் கவிதை முற்றத்தில் ''வன்னியிலிருந்து ஓர் மாடல்'' என்ற தலைப்பில் பிரசுரமான கவிதைக்கு பதில் இது.

பாசமிகு தோழனே!
படித்தறிந்தேன் உன்மடலை
பதிலெழுத அமர்ந்துவிட்டேன்
பாரமிகு இதயத்துடன்.

புலம் பெயர்ந்த சொந்தங்கள்
குடியிருந்த மனைகளெல்லாம்
உடைந்துடைந்து பகுதியாக
பலரிடையே பண மாச்சு
உன் வீட்டு நிலைமைகளும்
இதுபோல்தான் ஆயாச்சு.

செவ்விளநீர் தென்னைகளும்
பல பயன் பனை மரமும்
தான் நடந்து இடம்பெயர்ந்து
காவலரண் பகுதியிலே
காவலுக்கு நிற்கிறது.
செவ்வரத்தைக் கள்ளிகளும்
பூவரசு முருங்குகளும்
வேரோடு பிடுங்கப்பட்டு
வேலியின்றிப் போயாச்சு.

விழுதுகள் தாங்கிநின்ற
காளிகோயில் ஆலமரம்
தென்றல் வீசி சுகந்தந்த
அரசோடு வேம்புகூட
சிறகொடிந்து போனாலும்
உயிரோடு நிற்கின்றன.

நாம் இருந்து இரவிரவாய்
கதையளந்த சுமைதாங்கி
ஒருபக்கம் உடைந்தாலும்
உயர்ந்து நிற்கிறது
கதையளக்க ஆள்களின்றி.
இருபாலை, கோப்பாய்......
நீர்வேலி, புத்தூருடன்
அரியாலை, யாழில்கூட
பாடசாலை இயங்கையிலும்
மாணவர்தான் செல்லவில்லை.

மூலைக்கு ஒரு சினிமா
பாங்காய் ஓடுகையில்
காதல் படம் சண்டைப்படம்
நீலப்படங்கூட ஓடுகையிலே
மாணவர்கள் ஏன்
பாடசாலை போவர்?

எழுதும் மடல் அவலத்துடன்
நீண்டு கொண்டு போவதனால்
இத்தோடு முடிக்கின்றேன்.

—சுதா—

# ஊரறியாமல் உறங்கும் உண்மைகள்

செம்மணித்தாயே...செம்மணித்தாயே...
கண்களில் என்ன ஈரம்
உன்மடிமீது ஒரு பெரும் சோகம்
உறங்கிடும் கதையைக் கூறும்.

குரலெடுத்து நீ கூவம்மா—நாவற்
குழியே நீயும் பேசம்மா

பிஞ்சுமலரினை பேயவர் அன்று
பிய்த்து எறியும் போது
நெஞ்சம் துடித்திட நீயிருந்தாயே
அழுத விழிகளோடு

காயங்கள் தானினி ஆறுமா—இந்த
கண்ணீரின் கோடுகள் மாறுமா

இன்னும் எத்தனை கண்மணிப் பூக்கள்
இங்கே புதைந்து உள்ளார்
சின்னக் குயில்களுடன் செல்லக்
கிளிகளிங்கு
தேகம் சிதைந்து உள்ளார்

செல்லம்மா உனக்குத்தான் புரியும்
—நீ
சொன்னால்தான் அந்த
உண்மைகள் தெரியும்

வாடிய வேதனை தீயினில் உந்தன்
வாய்திறக்க வழியில்லையோ
ஆடிய அரக்கனின் பாதகச் செயலினை
சொல்லி அழுதிட மொழியில்லையோ

விழியில் வழியுது நீரம்மா—இங்கு
விம்மி அழுதுது ஊரம்மா

—சுழிபுரம் வானவராயன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் பாவம்

காலடசின் தங்கையரைக் கரைசேர்த்துக் களைப்பாறி
கடைக்குட்டித் தம்பியை கல்வியில் முன்னேற்றி,
ஈன்றவரின் நோயோடு திழுபட்டுப் பணிசெய்து
நாரி நிமிர்த்தி நாற்பதுவய தானபின்பு,

சாதகத்தை தரகரிடம் சமர்ப்பித்துக் காத்திருக்க,
சாத்திரம் பொருந்திவர, கோத்திரம் குறுக்கிழுக்க,
கோத்திரம் சமமாக, சாத்திரம் சறுக்கிநிற்க
மேலும் இருவருடம் வீணாய்க் கழிந்ததுவே.

ஓடுமீன் ஓடி உறுமீனைக் காத்திருந்து
தாடிமயிர் வெளுத்து தலைமண்டை வெளியாச்சு.
வாடிய என்வாழ்வை மலர்விக்க இனியொருத்தி,
நாடி வருவாளா? நான்செய்த பாவமென்ன?

பெண்களோடு சோதரனாய்ப் பிறந்த குற்றம்,
பெற்றாரை தெய்வமென மதித்த குற்றம்,
பிறப்போடு கிரகங்கள் பகைத்த குற்றம்,
புரையோடிக் கெடுக்கின்ற சமூகக் குற்றம்,

இத்தனையும் கலந் தென்னை தரிசிருத்த
எம்பாவம் பேசுதற்கு யாரும் இல்லை.
பெண்பாவம் பேசுகின்ற, எழுதுகின்ற
'பெரியீரே எமக்கும் இரு வரி ஒதுக்கும்!

— புத்தூர். வே. இளையகுட்டி —

# நெறிவாழ்வு வரவேண்டும்

கொழும்பெல்லாம் தமிழ்மக்கள் அலையானது
    கெடுகின்ற வழியெல்லாம் திறப்பானது!
ஒழுங்கான தமிழ்பெண்டிர் உருமாறியே
    ஒரு சொட்டு சுகத்திற்கும் உடனாகினர்
மழுங்காத இளைஞர்கள் தலைமீறியே
    மதுவுண்டு களிகொள்ளும் படியாகினர்!
அழுங்கான குணமெல்லாம் விலையானது!
    அயல்நாட்டு பணத்திற்கே இரையானது!

ஏமாற்றல் வலியோர்க்கு எளிதானது
    'ஏஜன்சி' என்கின்ற தொழிலானது!
நாமார்க்கும் கடன்பட்டால் நடைமாறுவோம்
    நாளைக்கு 'றூட்' டொன்று திறந்தேகுவோம்
வான்மார்க்கம் வகையொன்றாய் தினம்பேசுவர்
    'வாறன்டு' போட்டுட்டால் தலைமாறுவர்
சீர்மாற்றம் வரன்மாற்றல் அரங்கேறுது
    சீர்கேடு பண்பாட்டின் திருவானது!

அறந்தோய்ந்து அறிகல்வி புறம்போனது!
    ஆன்மீகத் துறையார்வம் சிறைபோனது!
திறமாய்ந்து படியேறும் கலையானது
    தார்மீகம் துவக்கென்ற மறையானது!
மறஞ்சேர்ந்த மனுத்தென்பு அரசாளுது
    மேன்மக்கள் அறிவெல்லாம் வெளியேறுது!
நிறம்பார்த்து நடிக்கின்ற நயவஞ்சகம்
    நேரான தனமென்று உரம்தேடுது!

கச்சேரி வீட்டிற்குள் நடக்கின்றது
    கயவர்கள் கரைசேர முடிகின்றது!
நச்சாறு நாட்டிற்குள் நகர்கின்றது
    நிறுக்கின்ற படிகூட தடுமாறுது!
அச்சாறு சாமான்யர் தலைதன்னிலே
    அரைக்கின்ற தனவந்தர் உயர்கின்றார்!
இச்சோறு என்னாளும் அவியாதது
    எளியோர்க்கும் நெறிவாழ்வு வரவேண்டுமே!

— மாவை வரோதயன் —

# பிறர்க்குத் துணையாமோ?

(11 - 07 - 1998 இல் சஞ்சீவியில் பிரசுரமான "இன்னுமேன் தாழ் பணிகின்றாய்?" என்ற தலைப்பில் இடம்பெற்ற கவிதைக்குரிய பதில் இது.)

அன்றென் தமக்கை நவாலியில்; "சேர்ச்சில்" அனாகுறையில்
பின்னுமென் தம்பி பிரதட்டை செய்கையில் பிண்டமென
நின்றுகொல் லும்மிறை என்றவென் பாட்டி நிலம்பெயர்வில்!
இன்றும்நான் நம்புறேன் தெய்வமே! நின்றுநீ கொல்லுறியே

வாழ்வை அளித்துமே, வாய்க்கென முப்போ துணவுதந்து
தாழ்வைத் தகர்த்தெறி என்றுமென் நாவில் தமிழ்கொடுத்து
நாளுமென் வாழ்வில்நீ நன்மையாய் திமையாய் ஆனதாலே
தாளைப் பணிவதோ என்கடன் தாயே! இதுதவறே?

(ஆனால்)

தாயென்ற போதிலும் பிள்ளைதான் ஆயினும் பேறுபெற்ற
வாயென்ற ஒன்றும் வயிறென்ற ஒன்றும் வகைபிறிதே!
சூய்!என்று விட்டுச் சுவீற்றென்ற போது சுருண்டிட நான்
நாயன்று; எந்தா நரம்பெங்கும் ஓடுதே உன்தழிழே

அத்தனின் பாகம்நீ அன்றியும் ஏகபா, தன்அவனின்
சித்தாந்த மெய்ப்பொருள் அம்மா எனைவிட நீயறிவாய்
இத்தனை அண்டமும் உன்னது தன்மைதான் அன்றிஊழி
நர்த்தனம் செய்யநீ நம்பிரான் அல்லமா யாசுடரே

யுகங்களை மாற்றலுன் கையிலே இல்லையே யூகி — யோகி
இகபரத் தத்துவம் முன்புஉன் காதிலே சொன்னவாறு
செகமெலாம் உன்செயல் ரூபமே ஆயினும் ஏகன்மட்டும்
தகுந்தது கண்டு யுகங்களை மாற்றும் தகுதியோனே.

— ச. முகுந்தன் —

# தம்பிக்கு..!

பட்டினியைப் பாடி அப்பர்
    பரிசு பெற்ற காசைக்கொண்டு
சட்டினியோ டிட்டலியைச்
    சலிக்காமல் வாங்கியுண்டு
பட்டப்பகல் தோறும் இந்தப்
    பாதையெங்கும் தான்கடந்து
மட்டரகமான படம் மிக
    மலிவாகப் பார்த்துவிட்டு
கொட்டமடித்தே நண்பர்
    கூட்டமதில் தான் புகுந்து
பெட்டையளைப் பின் தொடர்ந்து
    பெருமைகளைத் தானளந்து
குட்டிச் சுவராகி உன்
    குலப்பெருமை இழந்தாய்
கண்ணிழந்த போதும் காலில்
    கட்டை பூட்டினாலும்
எண்ணிறந்த கனவை வாழ்வில்
    இழந்து நின்ற போதும்
திண்ணெனவே நின்றார்
    தெரிந்து தொழில் புரிந்தார்
மண்ணை மறந்தோடும்
    மாயவாழ்வை எண்ணி
உன்னை இழக்காதே
    உயர்வைத் தடுக்காதே!

— எஸ். சக்தி —

# வாலிபம்

இதயம் துடிக்கும் வேகம் — அதன்
இசையில் படிக்கும் தாளம்
மதகில் பாயும் நீராய் — மனம்
மருவி இசைக்கும் கானம்!

    குதியில் போடும் ஆட்டம் — துள்ளி
    குதித்து ஆடும் ஆட்டம் — இள
    மதியும் இன்றேல் வானம் — மன
    மகிழ்வி ழந்து போகும்!

சுதியில் என்ன ராகம் — சுழல்
கதியில் என்ன வேகம்
ரதியில் கொண்ட மோகம் — பல
ரகசி யங்கள் பேசும்!

    அளவு கடந்த வெள்ளம் — நாளை
    அணையு டைக்கும் திண்ணம்
    பிளவும் இன்றி நெஞ்சம் — கொடும்
    பிரிவிலே தான் அஞ்சும்!

வெள்ளி மலிந்த வானம் — பின்னர்
விடிந்து சிவந்து போகும் — நாங்கள்
துள்ளிக் குதித்த காலம் — கற்
தூணில் பதித்த தாகும்!

— கி. வாயுபுத்திரன் —

# முன்னேறுவோம்!

கைகளுக்குள் முகம் புதைத்து
தாடைக்குக் கீழ் கைகொடுத்து
படுத்திருந்து வானம் பார்த்து
சொட்டுச் சொட்டாய் நீர்சிந்தி
வாட்டத்தின் கோடுகளோடு
சோகமாய் இருப்பானேன்......?

பூமியெம் காலடியில்
புரட்டி ஏற்றம் காண்போம்
காலம் எமக்காக — பிறகு
கவலை எதற்காக?

பாறைகளைத் தாண்டி
அலைகள் கரையேறவில்லையா?
பூமியைப் பிளந்து முளைகள்
முனைப்புடன் வெளிவரவில்லையா?
பாறைகளை ஊடுருவி
வேர்கள் செல்லவில்லையா?
சளைக்காமல் முன்னோக்கி
நதிகள் முன்னேறவில்லையா?
உலுக்கும் புயலின் பின்னும்
உறுதியுடன் மலைகள் நிற்கவில்லையா?

இயற்கையே எம்மை
தூக்கி நிறுத்த
கனக்கும் போர்வைகளை
களைந்து விட்டு
ஏற்றம் காண விரைந்து
முன்னேறுவோம்.

— இணுவில் றொட்றிக —

# அன்பே!
# அன்பைக் கொல்லாதே!

[பலியிடத்தான் வேண்டும் — பலியிடும் மனிதரை!]

"மனிதனின் வேலையாலே மாசுகள் கூடிப்பேரச்சு
புனிதத்தை கெடுக்குமந்தப் புலையனை பிடித்துவைத்து
பலியிடக் காளியிங்கு பலவரந் தருவா" னென்று
விளைவொடு ஆடு, கோழி விரட்டினால் என்னசெய்வோம்!?

சூழலை மாற்றுமிந்த சூகரில் நூறுபேரைப்
பாழ்படா ஆடு ஒங்கிப் பலியிட விருப்பங் கொண்டால்
வாழ்வுதான் என்னஆகும்?! மனிதனே, கூறுநீயும்!
சேவல்போல் உன்கழுத்தை திருகியே அவையும் கொல்லும்

சுண்டிய மனிதரத்தம் 'சூப்' பெனக் குடிக்கவென்று
வண்டியில் கட்டும்மாடு வந்தால் நீ ஓடவேண்டும்!
நண்பனே யோசிகொஞ்சம், நாட்டிலே மனிதம் எஞ்சும்
வன்முறைப் பலிகள் ஒன்றும் வாழ்வினை உயர்தாதென்றும்!

அன்புதான் வாழ்க்கை ஐயா, அறிவுதான் தூண்களையா
இன்பமே காண்பதற்கு இறைவனை பூவால் நாவால்
தென்பொடு பூசைசெய்ய, தேவியும் அருளைப் பெய்ய
துன்பங்கள் மாறிப்போகும், தூய்மையாய் உலகுவாழும்!!

— கி. குருபரன் —

# இயற்கையின் பெருமை

இறைவன் தந்த இயற்கையின்றி
இவ்வுலக வாழ்க்கை ஏது?
இயற்கை தந்த வளங்களின்றி
மனிதன் கண்ட வளங்கள் ஏது?

பகல் என்ற பொழுதின்றி
பாரில் மக்கள் என் செய்வார்?
பகல் மறைந்த இரவு இன்றி
யார் தான் இங்கு ஓய்வு கொள்வார்?

அசைந்து வரும் காற்றின்றி
யார் இங்கு மூச்செடுப்பார்?
நிலம் தாங்கும் நீர் இன்றி
எவர்தான் இங்கு உயிர் வாழ்வார்?

விதி என்ற ஒன்று இன்றி
மதி என்ன செய்து விடும்?
விதி வழியே மதி மாறி
மனித வாழ்வை கொடுத்து நிற்கும்!

வீதி வழி செல்லும் மக்கள்
வீடு வந்து சேர்வதில்லை
பாதி வழியில் பயணம் முடித்து
காடு நோக்கி செல்வதேனோ?

— குப்பிளானூரான் —

# நாளை - புது சபதமெடுக்காயோ...!

சந்தியிலே குந்தி நிற்கும் தம்பிமாரே
உந்த உதவாத வேலையெல்லாம் உபத்திரவமே
பெற்றவர்க்கு பெருமதிப்பை சேர்த்துவைக்க நாளை
கற்ற பிள்ளைகளாய் காவியம் படைத்தால்தான் என்ன?

சொத்து சுகம் அத்தனையும் நிலையானதல்லவே
முத்தான பிள்ளைகளாய் நீவிர் தலை நிமிர்ந்தால்
கொத்தாக மலர்ந்து மணம்பரப்பும் புகழ்எல்லாம்
வித்தாகி வையத்தில் புதுவாழ்வளிக்கும் அறியாயோ!

வேளைக்கொரு உடையணிந்து வெளிப்பகட்டாய் வாழ்ந்தாலும்
நாளை கப்பும் வளையும் பொறுத்திடும் கால்
பாரம் தாங்காது தலைகுனியும் நிலைதோன்றும் — இணைந்த
தாரமும் மெல்லமெல்ல முணுமுணுப்பாள் உன் மனம்கோண

காசிருந்தால் போதுமென்று கல்வியைக் கைவிட்டால்
மாசில்லா வாழ்க்கை மணக்காது உம் ஏட்டில்
தூசி படிந்தாலோ துடைத்திடலாம் — மனதில்
பாசி படிந்தாலோ வாழ்வில் தோல்விதான் மிஞ்சுமப்பா

பணத்தாலே எதையும் வாங்க நினைத்துப் பலர்
பிணம்போல தினம்வாடும் நிலை காணீர்!
குணத்தோடு வாழ்ந்து குவலயத்தில் நாளை — கல்வியிலே
மணம்பரப்பும் வித்தகராய் வாழ்ந்தால்தான் என்ன?

தேன் எடுக்கும் வண்டாய் தெருவோரம் செல்கையிலே
மான்விழியால் தேன்மொழியால் தேவையறிந்து
சுகம் காண நினைப்பது இன்று — நாளை
அகம் கெட்டு நீயலைவாய் சிந்தித்தால் நன்று.

கற்றோர்க்கு சென்றவிடமெங்கும் பெருஞ்சிறப்பை
உற்று நோக்காது ஏன்தான் அலையுதோ உன்மனது
பெற்றவர் மனம் குளிர பெருமைகள் பல குவிய — நாளை
நற்தவப் புதல்வனாய் வாழப் புது சபதமெடுக்காயோ!

— வி. எஸ். செல்வராசா —

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வி | சனி சந் | | செ வெ |
| கே | இராசிச் சக்கரம் | | *சூ புத |
| | | | ரா |
| | | | |

# இந்த வார இராசி பலன்

## [18 - 07 - 1998 முதல் 24 - 07 - 1998 வரை]

மாற்றம்:

18–7–1998 இல் மேடம் இராசியில் சந்திரன் பரணி நட்ஷத்திரத்தில் இருக்கும்.

அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் மத்தியில் மாறி மாறி கருத்து வேற்றுமைகள் ஏற்படும். மத்தியில் சுறுசுறுப்பு, மக்கள் மனதில் சலிப்பு ஏற்படும். இந்தியாவின் நிலையில் மாற்றங்கள் வேகமாகும். அரசியலில் அபிப்பிராய பேதம் தொடரும்.

உலகில் மேற்கின் கரிசனை மத்திய நாடுகளிலும் கிழக்கு நாடுகளிலும் அதிகரிக்கும். பொருளாதார மாற்றம் கிழக்கு நாடுகளில் ஏற்படும்.

**மேடம்:** சொத்து வழிப் போராட்டம் ஒன்று திடீரென ஏற்பட்டு அதிகம் சிந்திக்க வைக்கும். சந்தியில் சிரிக்கவைக்கும் உறவினர் ஒருவரின் விபரீதப் போக்கினால் மனவேதனை ஏற்படும். தொழில்ஸ்தானத்தில் ஓய்வு இன்றி உடல்நிலையில் பாதிப்பு ஏற்படலாம். வாய்வு, விஷபீடை, நெஞ்சு நோ, அக்கினி பீடை என மாறி மாறி வருத்த இடம் உண்டு. ஏழரைச் சனியால் நாலுபேர் நாலுவிதமாக கதைத்தபடிதான் இருப்பார்கள். கலக்கமின்றி உங்களை நடுநிலைமையில் வைத்துச் செயற்பட்டு வாருங்கள். மனதில் அதிக யோசனைகள் ஏற்படும். ஆலய தரிசனம் வேதனைகளைக் குறைக்க உதவும் என்பதனை மறவாதீர்கள். எந்தச் சவாலையும் சமாளித்து வாருங்கள்.

★ அதிர்ஷ்டநாள்; திங்கள், வெள்ளி.

**இடபம்:** சங்கு தானாக ஊதுமா? உங்கள் செயற்பாட்டை அயலவர்களும், எதிர்ப்பாலார்களும் பார்த்தபடியே இருக்கிறார்கள். தொழில்ஸ்தானத்தில் மறைமுக எதிர்ப்புக்கள் இருக்கத்தான் செய்யும். பொறுமையுடன் இருக்கத் தெரிந்த நீங்கள் சாதுரியமாக இக்காலத்தில் சமாளிக்க முடியும். கலை ஆர்வததால் பொருள் செலவுகள் அதிகரிக்கும். களைப்பு, நரம்புச்சோர்வு, இருதயநோய், சலவருத்தங்கள், கைகால் உளைவுகள் என்பனவற்றால் வருந்த நேரிடும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.

**மிதுனம்;** உங்களைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. கேட்கவே பயமாக இருக்கிறது. ஏன் திடீர், திடீரெனக் காரணமில்லாமல் கோபித்துக் கொள்கிறீர்கள். தொழில் ஸ்தானத்தில் நல்ல செல்வாக்கு உங்கள் சொல்வாக்கால் ஏற்பட்டபடி இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். சிலருக்கு இடமாற்றங்கள் திடீர், திடீரெனக் கொடுக்கும். உடல் அசதி, கை கால் உளைவு, வாதநோ, வாய்வுத்தொல்லை, முதுகுவலி என்பன அடிக்கடி கொடுக்கும். இக்காலத்தில் நீங்கள் எந்தச் செயற்பாட்டிலும் ஒரு தீவிரப் போக்கைக் கடைப்பிடிப்பீர்கள். நன்மைகள் ஓடிஓடிவரும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன்,

**கடகம்:** என்ன பயம் உங்களுக்கு? அரசியலில் புகழ் ஏற்படும். எதையும் மறைத்து வைக்க மாட்டீர்கள். அரசியலிலும் சரி, உலகவாழ்வியலிலும் சரி, ஆத்மீகத்திலும் சரி மாறி மாறி அலைமோதிய எண்ணச் சிந்தனைகளை, கருத்துக்களை, சொல்லியபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் நல்ல திட்டங்கள் உருவாகியபடி இருக்கும். சிரித்துப் பேசிக் கொண்டிருப்பீர்கள். அடுத்த நிமிஷம் எடுத்துப் பேசிப் பயமுறுத்துவீர்கள். சலவருத்தம், சளி, தோல்வருத்தம், சிரசுவருத்தம், கைகால் நோ போன்ற வருத்தங்களால் வருந்த நேரிடலாம். தகுந்த வைத்தியம் செய்யுங்கள் சுகம் வரும்.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன்

**சிங்கம்:** தூரத்து உறவினருடன் தூரத்துச் செய்திகளும் ஆபத்துக்கு உதவா. புதியதிட்டங்களை உருவாக்கும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் நல்ல வரவேற்பும், சிறப்புக்களும் ஏற்பட இடம் உண்டு. பொருள் செலவுகள் அதிகரிக்கும் காலமாகும். நெஞ்சு நோ, முதுகு வலி, இடுப்புவலி, உஷ்ண பீடைகள், சளித்தொல்லை என வருத்தலாம். உங்களைப் பொறுத்தமட்டில் வேலை நேரம் வேலை, ஓய்வு நேரம் ஓய்வுதான் என்ற சுதந்திரப் போக்கு உள்ளவராக நடப்பீர்கள்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.

**கன்னி:** காரியங்களில் ஒரு வித மந்தநிலை. குடும்பத்தில் கலகம். இதுவரை தலையாட்டியவர்கள் ஏனோ தானோ எனத் திரிகிறார்களே என்று வேதனைப்படுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் உதவி செய்பவர்களைத் தேடிக் கொண்டு இருப்பீர்கள். எதிர்ப்பாலாரை அனுசரித்து நடவுங்கள். சளித் தொல்லை, இடுப்புவலி, கைகால் பிடிப்பு, களைப்பு, அதிக அலைச்சல் என்பன இருந்தபடி இருக்கும். இக்காலத்தில் சாப்பாட்டைக் கவனிக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

**துலாம்:** எதிர்ப்பாலாருடன் அபிப்பிராய பேதம் ஏற்படும். தொழில்ஸ்தானத்தில் சமநீதிக்காகவும், இலாபத்திற்காகவும் இரட்டைப் போக்கில் போராடுவீர்கள். மேலதிகாரிகளின் ஆதரவுகள் கிடைக்கும். எல்லோரையும் கதைத்துக் கதைத்து காரியங்களைப் பார்த்துவிடுவீர்கள். வயிற்றில் நோ, உஷ்ண பீடை—வலிகள், மல, சல உபாதைகள், தோல் வருத்தங்கள் என்பனவற்றால் அடிக்கடி வருந்த நேரிடும்.

## சோதிட சஞ்சீவி

அழகுபடுத்துவதும், சினிமா, சங்கீத ஞானமும் உங்களின் மனதிற்கு திருப்தியைத் தந்தபடி இருக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

**விருச்சிகம்;** காசுபணத்தால் ஒருவன் பெரியவனாகி விடுவானா? கல்வி அறிவும், அவனின் பண்பான நடவடிக்கைகளுமே ஒருவனைப் பெரியவனாக்கும் என அடக்கமான கருத்துக்களை எடுத்துச் சொல்லுவீர்களே. தொழில்ஸ்தானத்தில் இக்காலம் அதிகம் கதைத்தபடி இருப்பதில் ஒரு திருப்தி. சகோதரங்களுக்கு உதவுவீர்கள். உங்களின் அர்த்தமுள்ள

## மகாதேவா ஜோதிடம்

நடவடிக்கைகளை செயற்படுத்தியபடி இருப்பீர்கள். அதிக உணர்ச்சி, ஆத்திரம், களைப்பு, நெஞ்சுப்படபடப்பு, முரட்டுத்தனம், கிருமித்தாக்கம், உஷ்ண பீடைகள், முதுகுஉளைவு என்பன கொடுத்தபடி இருக்கும். வைத்தியம் செய்யுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

**தனுசு:** எதிர்ப்பாலாருடன் ஏன் வாக்குவாதப்படுகிறீர்கள்? உங்கள் அவசரப்புத்தியால் பிறரிடம் எல்லாவற்றையும் எடுத்துக்கூறிவிட்டு, செய்தது சரி என வாதிடாதீர்கள். தொழில்ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான போக்குகள் இருக்கும். காசு, பொருளில் கவனமாக

(X ஆம் பக்கம் பார்க்க)

# குறள் வெள்ளம்

குழந்தை பிறந்ததும் தாயின் மகிழ்ச்சி எல்லை கடந்துவிடுகிறது. அதுவும் ஆண் குழந்தை என்றால் பெருமையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

பெண் விடுதலை பற்றி அதிகம் பேசுபவர்களுக்கே பிறந்தது பெண் குழந்தை என்றால் முகம் சுருங்கிவிடுகிறது. அது வேறு விடயம்— விடயத்துக்கு வருவோம்.

இந்தப் பிள்ளை வளர்ந்து நாளை ஊர் வம்பை விலைக்கு வாங்கி வரும்போது—ஊராரின் பழிக்கு ஆளாகும் போது பெற்ற வயிறு பற்றி எரியும். தாய் துடித்துப் போவாள்.

'இவனைப் பெத்த நேரம் ஒரு ஆட்டை மாட்டை வளர்த்திருக்கலாம்' என நினைப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இதை உணராப் பிள்ளை. இருப்பதைவிட—பிள்ளை இல்லாதிருப்பதே மேல்.

அமைதியாக இருப்பது போலத் தெரிந்தாலும் பரீட்சை முடிவுகள் வெளியாகும் காலம் பெற்றவர்களின் மனம் துடிக்கும் துடிப்பு— பிள்ளையினதையும் மிஞ்சிவிடுகிறது. பிள்ளை பாராட்டப்படும்போது — பட்டங்கள்—பத்திரங்கள் வாங்கிவரும்போது தாய் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கிறாள்.

அந்த மகிழ்ச்சியைத் தாய்க்கு தரவல்ல பிள்ளைகள்தான் — பெற்றவர்களுக்கான தமது கடமையைச் சரிவரச் செய்கிறார்கள்.

அப்போது பெற்ற வேளையிலும் பார்க்க —பிள்ளையை பெரியவனாக அடையாளம் கண்டே தாய் மகிழ்கிறாள்.

*ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்.*

—0069.

— அம்பிகைபாகன் —

# மந்திரக்காளி

## சிறுவர்களுக்கான மர்மத் தொடர்கதை

### ஆதித்தனும் நிலாவும் துப்பறிகிறார்கள்

பகுதி 10

ஒளிரும் மரத்தினடியில்...


சோம்பலுடன் படுத்திருந்தாள் நிலா. இன்னும் ஒரு வாரந்தான் விடுமுறை முடிவதற்கு இருந்தது.

''கொண்டு வந்த புத்தகங்கள் எல்லாம் படிச்சிட்டியா நிலா?'' ஆதித்தன் கேட்டான்.

''ஓ படிச்சிட்டேனே'' என்றாள் நிலா. ''எப்படி? பெரும்பாலும் நீ படிக்கிறதைக் காணவே இல்லையே நான்'' ஆதித்தனுக்கு வியப்பாக இருந்தது. ''முடிச்சிட்டேனே, முதலையும் முடிவையும் படிக்க முடிச்கிட்டேனே'' என்று கண்களைச் சிமிட்டிக் கொண்டே சொன்னாள் நிலா. முதலையும் முடிவையும் படிச்சா முடிவு வருமா? எண்ணப்பரப்பில் ஒரு மின்னல். காகிதத்தை விரித்தான். படித்தான். சந்தோஷத்தில் துள்ளி எழும்பி ''தாத்தா! கண்டு பிடிச்சிட்டேன் தாத்தா'' என்று கத்தினான். ஒவ்வொரு வரியிலும் முதலெழுத்தையும் முடிவெழுத்தையும் சேர்த்துப் படித்த போது அந்தத் தகவல் கிடைத்தது. ''ஒளிர்மரத்து வடதிசை வேரின் முடிவில் டயறி'', எனும் வாசகம் அங்கிருந்தது.

அன்றைய பின்னிராப் பொழுதில் அனைவரும் அயர்ந்து தூங்கும் வேளையில் ஆதித்தன் முயற்சியைத் தொடங்கினான், நகரத்து பொலிஸ் இன்ஸ்பெக்டருடன் தொடர்பு கொண்டு ''உங்கள் உதவி தேவைப்படுகிறது'' என அறிவித்தான். அவரால் ஏற்கனவே திட்டமிட்டு அக்கிராமத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த இரு காவல் படையினரும் மாயானத்திற்குச் செல்லும் வழியில் ஆதித்தனை சந்திக்கப் பணிக்கப்பட்டார்கள்.

றெக்சியை மட்டும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான ஆதித்தன். வழியில் சிவில் உடைக்



காவலர் இருவருடனும் சேர்ந்து கொண்டான். அவன் மனதினுள், நிலாவும் பாட்டியும் நிறைந்து இருந்தார்கள். திரும்பி வந்து அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு தனக்கு வருமா என்பதில் கூட அவனிடம் சந்தேகம் இருந்தது எனினும் துணிந்து நடந்தான்.

அன்று அமாவாசை நாள் அல்ல. மயானம் வெறிச்சென்று இருந்தது. மந்திரவாதி அருகில் இல்லை. ஒளிரும் மரத்தை நெருங்கி விட்டார்கள். செயற்கையாக இன்றி அம்மரத்தின் பகுதி ஒன்று இயற்கையாக ஒளிர்ந்து கொண்டிருந்தன. அதன் வடதிசையில் பெரியதொரு வேர் நீண்டிருந்தது.

அவர்கள் வேரின் முடிவைக் கண்டு கொள்ளவே பெரும் முயற்சி தேவைப்பட்டது. சில மணி நேரத்தின் பின் பொலித்தீனில் சுற்றப்பட்ட நிலையில் அந்த டயறியையும் கண்டார்கள். அதைக் கையில் எடுத்துக் கொண்டான் ஆதித்தன்:

சூனியப் பிரதேசமான அதில் காவலர் யாருமில்லாதது ஆதித்தனுக்கு வியப்பாக இருந்தது: கொடியவர்களின் உரிமையான இடத்திலேயே அதை மறைத்து வைத்த தந்தையின் புத்திசாலித்தனத்தை அவனால் வியக்காமலிருக்க முடியவில்லை. பல வருடங்களாகத் தேடியும் அவர்களால் இதைக் கண்டுகொள்ள முடியவில்லை எனத் தாத்தா மூலம் அவன் அறிந்திருந்தான்.

டயறியைப் பத்திரப்படுத்திக் கொண்டு வீட்டுக்குத் திரும்ப எத்தனித்த அவ்வேளையிலும் முக்காடு ஒன்றை இட்டு முகம் மறைந்திருந்த ஒற்றைக்கண் மனிதனின் பார்வையுள்


**ச. சாரங்கா**

தானிருப்பதை அவன் அறியவில்லை. இதேசமயத்தில் எதிர்த்திசையில் அவனது முதுகுக்கு ஒரு குறுவாள் குறிவைக்கப்பட்டுக் கொண்டிருந்தது—மறு கணத்தில் காற்றைக் கிழித்துக் கொண்டு புறப்படுவதற்குத் தயாரான நிலையில்......

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வார்த்தை விளையாட்டு




மேலேயுள்ள பலூன் மனிதன் வைத்துள்ள பலூன்களில் சில எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை வைத்துக் கொண்டு ஐம்பது சொற்களை உங்களால் உருவாக்க முடிகின்றதா என்றுபாருங்கள்.
(விடை XI ஆம் பக்கத்தில்)

## வாய்

உண்ணும் வாய் யார்க்கும் ஒன்றே
எண்ணுவாய் வாயின் மேன்மை
உண்ணுவாய் அதிகம் என்றால்
நண்ணுவாய் நோயை நீயும்.

அருந்துவாய் மதுவை நோயில்
அழுந்துவாய் வாழ்நா ளெல்லாம்
வருந்துவாய் பிற்காலத்தில்
திருந்துவாய் என்றால் மீள்வாய்.

பேசும் வாய் ஒன்றே யுண்டு
பேசுவாய் பயனில்லாமல்
கூசுவாய் உண்மை கூற
வீசுவாய் வீணில் சொல்லை.

போடுவாய் கூச்சல் வாயை
மூடுவாய் தீமை கண்டால்
வாடுவாய் அழுகை மூலம்
பாடும்வாய் இதற்கா பெற்றாய்?

ஓதுவாய் வேதம் ஆனால்,
மோதுவாய் பகையை மூட்டி
சாதுவாய் அடங்கும் பேச்சால்
காணுவாய் புகழை என்றும்.

பொக்கை வாய்ச் சிரிப்பின் மூலம்
போக்குவாய் துன்பம் யாவும்
ஆக்குவாய் அன்பை உந்தன்
குழந்தைவாய் சிந்தும் அமுதம்!

தொகுப்பு:- கிருஸ்ணசாமி சுவர்ணா
(மானிப்பாய் மகளிர் கல்லூரி)

## நொடிப் பொழுது


1. ஓங்கி வளர்ந்தாள்; ஒருபிள்ளை பெற்றாள்; பொத்தென்று விழுந்தாள்; புழுத்துச்செத்தாள். அவள் யார்?
2. பக்கமெல்லாம் பட்டையுண்டு; மரமும் அல்ல; பெயர்த்தெடுத்தால் முத்துண்டு; சிப்பி அல்ல. உடைத்தெடுத்தால் விதையுண்டு; பழமும் அல்ல. அது என்ன?
3. பகலிலே தூங்குவான்; இரவிலே அலைவான். அவன் யார்?
4. ஆயிரம் கண்ணுள்ள தேவி; ஆற்றிலே மூழ்கி, வெயிலிலே காய்கிறாள். அவள் யார்?
5. கத்திபோல் இலையிருக்கும்; கவரிமாப் பூப்பூக்கும்; தின்னப் பழம் பழுக்கும்; தின்னாத காய்காய்க்கும். அது என்ன?
6. ஆக்கும் கறிக்கும் ஆகும்பூ; அனைவரும் உணவாய்க் கொள்ளும்பூ; தலையிலே சூடிக்கொள்ளாப்பூ; தாரணியில் என்னபூ?
7. வெட்டலாம்; கட்டலாம்; ஆனால் கொண்டு வரமுடியாது? அது என்ன?
8. ஊருக்கு நாட்டாண்மைக்காரன்; தான் சாப்பிட்ட இலையை எடுக்கமாட்டான். அவன் யார்?
9. மரத்தில் காய்க்காத பழம் என்ன பழம்?
10. வெள்ளைப் பாம்பு கல்லைத் தூக்குது. அது என்ன?

— கோ. துஷியந்தன் —
(ஆண்டு 8, பரியோவான் கல்லூரி)

### விடைகள்

1. வாழை. 2. சோளம். 3. ஆந்தை.
4. மீன்பிடிவலை. 5. வேம்பு. 6. வாழைப்பூ.
7. வரம்பு. 8. நாய். 9. ஐஸ்பழம்.
10. புடோல்.

## கண்டுபிடியுங்கள்!



இந்தச் சித்திரத்தில் மேலே எட்டுக் கட்டங்களும் கீழே எட்டுக் கட்டங்களும் உள்ளன. மேலே உள்ள சித்திரத்தில் வெறுமையாக உள்ள கட்டங்களுக்கு கீழே உள்ள கட்டங்களில் இருக்கும் படங்களைப் பதித்தும், அதேபோன்று கீழே உள்ள சித்திரத்தில் வெறுமையாக உள்ள கட்டங்களுக்கு மேலே உள்ள கட்டங்களில் இருக்கும் படங்களைப் பதித்தும் இரு முழு சித்திரங்களை உருவாக்குங்கள் பார்க்கலாம்.




## பயந்த சுபாவமுள்ள வரிக்குதிரைகள்!

விலங்குக்காட்சிசாலையில் வரிக்குதிரையைப் பார்க்கலாம். இது குதிரை இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு. இதன் உடலின் வரி வரியாகப் பட்டைகளிருக்கும். அதனால் இதற்கு வரிக்குதிரை என்று பெயர்.



ஆப்பிரிக்காக் கண்டத்தில் மட்டுமே வரிக்குதிரை வாழ்கிறது. முன்பு அக்கண்டத்தில் எண்ணற்ற வரிக்குதிரைகளிருந்தன. ஆனால் ஏராளமான வரிக்குதிரைகளை அவற்றின் இறைச்சிக்காகவும் தோலுக்காகவும் மக்கள் வேட்டையாடிக் கொன்று விட்டனர். சிங்கங்களும் ஆயிரக்கணக்கில் இவற்றைக் கொன்று அழித்து விட்டன. எனவே இப்போது மிகச் சில வரிக்குதிரைகளே எஞ்சியுள்ளன.

**பிராணிகள் உலகம்**

வரிக்குதிரையின் அடிப்படை நிறம் வெண்மை. இதன்மேல் கறுப்பு அல்லது கரும்பழுப்பு நிறப் பட்டைகளிருக்கும். அடிவயிறு, தொடையின் உட்புறம் நீங்கலாக மற்ற எல்லா இடங்களிலும் இப்பட்டைகளிருக்கும். கால் முழுவதுங்கூட இப் பட்டைகள் இருக்கும். வரிக்குதிரை திறந்த புல்வெளிகளில் வாழும். அவ்விதச் சூழ் நிலையில் இதன் நிறம், பகைவர்களின் கண்ணுக்கு எளிதில் படாதவாறு மறைக்க உதவுகிறது.

வரிக்குதிரை சுமார் ஒன்றரை மீற்றர் உயரமிருக்கும். சுமார் நானூறு கிலோ எடை வரை இவை வளரக்கூடியவை. இதன் காதுகள் சற்று நீளமானவை. பிடரி மயிர் குட்டையாக இருக்கும். வாலில் மயிர் நெருக்கமாக இல்லாமல் முனையில் மாத்திரம் குஞ்சமாகக்


(XI ஆம் பக்கம் பார்க்க)

## இயலுமா?

(1) ஆண் ஒருவரைக்காட்டி நிரோஷனா பின்வருமாறு கூறினாள்:-"அவர் எனது கணவரின் மனைவியின் மகளின் சகோதரரின் தம்பி யார்."
—அப்படியானால் நிரோஷாக்கும் மேற்படி ஆணுக்கும் இடையே உள்ள உறவுமுறை என்ன?

(2) ஒரு மாம்பழம் ஐந்து ரூபா. கொய்யாப்பழம் ஒரு ரூபா. இலந்தைப்பழம் ஐந்து சதம். கண்ணன் நூறு ரூபாய் பணம் கொடுத்து மொத்தம் நூறு பழங்கள் வாங்கினான். அவன் வாங்கிய மாம்பழம், கொய்யாப்பழம், இலந்தைப்பழங்களின் எண்ணிக்கையைத் தருக.

(3)



91முதல் 106 வரையுடைய இலக்கங்களை உபயோகித்து மேற்படி அட்டவணையை நிரப்ப வேண்டும். ஒருமுறை எழுதிய இலக்கத்தை மறுமுறை பயன்படுத்தக் கூடாது. எந்தப் பக்கமிருந்து கூட்டினாலும் ஒரேகூட்டுத் தொகை விடையாகவரவேண்டும். முயன்று பாருங்கள்.


(4) ஓர் இலக்கத்தைக் கொண்ட எண்கள் எத்தனை? இரண்டு இலக்கங்களைக்கொண்ட எண்கள் எத்தனை உள்ளன? அதே போன்று மூன்று இலக்கத்தைக் கொண்ட எண்கள் எத்தனை.

நா. மகேந்திரலிங்கம்.
(விடை XI ஆம் பக்கத்தில்)

## செய்து பாருங்கள்

(1) ஒன்பதாயிரத்து தொளாயிரத்து ஒன்பது என்பதை 9909 என எழுதுகிறோம்; பன்னீராயிரத்துப் பன்னிரு நூற்றுப் பன்னிரண்டு என்பதை எப்படி எழுதுவீர்கள்?

(2)



இந்தச் சித்திரத்தில் மொத்தம் எத்தனை சதுரங்களை தனித்தனியாக அடையாளம் காணமுடியும்?

(3) இந்தப் புதிரில் மூன்று தவறுகள் உள்ளன. கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்;

8 × 8 = 64    2 × 2 = 4
5 + 3 = 7    10 − 5 = 5
10 − 10 = 20

த. கார்த்திகா,
(ஆண்டு 6,
சாவகச்சேரி இந்துக்கல்லூரி).
(விடை XI ஆம் பக்கத்தில்)

## ஔவை

ஔவைக் கிழவி நம் கிழவி
அமுதின் இனிய சொற் கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் தமிழ்க்கிழவி.

கூழுக்காகக் கவி பாடும்
கூனற் கிழவி அவர் உரையை
வாழும் வாழ்வில் ஒரு நாளும்
மறவோம் மறவோம் மறவோமே.

கி. துளசிகரன்
(ஆண்டு 2,மானிப்பாய் விவேகானந்த வித்தி)

## வெள்ளை முயல்

வெள்ளை முயல் துள்ளுது
வேகமாக ஓடுது
காலைக் காலைத் தூக்குது
கள்ளமின்றிப் பார்க்குது

சிவப்பு கண்கள் மின்னுது
சின்ன வாலும் ஆடுது
பச்சையிலை தின்னுது
பார்க்க மனம் அள்ளுது

பெட்டிக்குள்ளே போகுது
குட்டியோடு தூங்குது
எட்டிஎட்டிப் பார்க்குது
என்னவென்று கேட்குது

— ப. ரஜீவன் —
(ஆண்டு 5, இமையாணன் அ.த.க.வி.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேளாண்மை...

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)
வேணும்... நேரத்துக்கு வானை எடு. பின்னால் சி.ரி.பி. வந்திடும்...''

''ஒமோம்.. நீ வந்தியெண்டால் நல்லாயிருக்கும்... பகீர் சின்னவன்தானே?...''ராஜன் ஆதங்கத்துடன் சொல்லிக் கொண்டு வானில் ஏறிக் கொண்டான்.

எல்லாம் சரிபார்த்து வான் ஓடத்தொடங்கியது. பனிக் காற்றுக் காதினுள் குளுகுளுக்க வானொலியைத் திருப்பினான். அது 'இசையால் வசமாகா இதயமெது?' என்று கேட்டது. இல்ல முடிய சினிமாப் பாட்டொன்று போட வேணும்.

''என்னைத் தாலாட்ட வருவாளா'' போட்டாக 'அந்தமாதிரி' இருக்கும். வானுக்குள் பல காதுகள் கேட்க சிறிய பாட்டொலியுடன் காலைச் சூழலின் கலகலப்புடன் குளிரை வாங்கியபடி வாகனம் ஓடுவது சொல்லிலடங்காத இன்பம். ஆரம்பத்தில் வியப்பாக இருந்தது. இப்போது அது ஒரு மகிழ்வாக மாறிவிட்டது.

ஆவரங்கால் சந்தியில் கௌரி நிற்பது தூரத்திலேயே தெரிந்தது. இவனைக் கண்ட மகிழ்வு முகத்தில் தெரிய ஏறியவுடனே திரும்பிப் பார்த்தாள். இவன் திரும்பி 'தம்பி' என்று 'பகீரை'க் காட்டினான். 'ஆ...'' என்று ஆச்சரியப் பட்டாள்.

வழியில் ரவி சைக்கிளில் வந்தான்.

''...ஒரு வாகனமும் முன்னுக்குப் போகேல்லை ஓடிக் கொண்டு போ...'' என்றான்.

வழி நெடுகலும் தெரிந்தவர்கள் வாகனம் எதுவும்முன்னுக்குப் போகவில்லை என்பதைச் சைகையால் உறுதிப்படுத்த ஊருக்கேயுரிய பற்று உற்சாகமூட்டியது.

புத்தூர் 'சென்றி' தாண்டியதும் ஒரு கும்பல் சனம்ஏறி வாகனம் நிறைந்துபோனது. பகீரின் ராசியோ? ஒழுங்காகக் காசு வாங்குகிறானோ தெரியாது. திரும்பிப்பார்க்க அவன் நிற்பதே தெரியவில்லை, கூப்பிட்டான்.

''கவனமாகப் பிடிச்சுக் கொண்டு நிண்டு காசை வாங்கு பகீர். என்ன?......''

''ஓம்...ஓம்......''

கொஞ்சதூரம் சென்றிருக்கும். பின்னால் ஐம்பதோ ஐம்பத்தியொண்டோ ஒரு மினி பஸ் வருவது கண்ணாடியூடே தெரிந்தது. ஒவ்வொரு நாளும் வந்திடுவாங்கள். வாகனம் நிறைஞ்சு போயிருந்தாலும் சளைக்காமல் ஆக்களை ஏத்துவாங்கள். பிரச்சினை காலத்திலை கூரையிலயே ஐம்பது பேரையேத்தி சாதனை படைச்சவங்கள். இண்டைக்கு இவங்களை விடக் கூடாது. கோப்பாய், இருபாலைச் சந்திகளில் இன்னும் ஆள்கள் நிற்பார்கள். அவர்களையும் ஏத்தினால் கையில் காசு மிஞ்சும். வேகமெடுத்து ஓடினான்.

''...பகீர் இறங்குகிற ஆட்களைக் கெதியில் இறக்கு என்ன?......''

உற்சாகமாய்ப் பதில் வந்தது.

''...நீ இஞ்ச பார்க்காமல் ஓடு அண்ணா...''

வானுக்குள் இருந்தும் இளசுகளின் உற்சாகக் குரல்கள் அவனை ஓடச்சொல்லின. கிட்ட வருவதும் எட்டிப் போவதுமாய் மினிபஸ்கள் இரண்டும் வேடிக்கை காட்டின. ஒரு வயோதியர் தூரநின்று மறிக்கும் பாவனையில் கை காட்டினார். இவர் ஒருவருக்காக வானை நிப்பாட்டினரில் பருத்தித்துறை வான் முந்திவிடும். பிறகு மூன்றுநாலு பேரின் காசை இழக்க வேண்டிவரும். மறிக்காமல் போவோம் என்று நினைத்தவன் அருகில் வந்ததும் ஐயாவின் நினைவு வர, அவரை ஏற்றுவதற்காக வானை நிறுத்தினான்.

'பெரியவர்' ஏறியவுடன் வேகமெடுத்தபோது ஒரு வளைவு வந்தது. அந்த நேரத்தில் பின்னால் வந்த வான் முந்தப்போகிறேன் என்று பிடிவாதம் பிடித்து முன்னேறியது. அதற்கு வழிவிட்டுக் கரையோரமாக வாகனத்தை வெட்டி எடுக்க—

'படார்' என்றொரு சத்தம் கேட்டது.

தொடர்ந்து வானில் இருந்தவர்கள் அலறினார்கள். இந்த வானிலா அந்த வானிலா என்றுகூட ராஜனுக்கு முதலில் விளங்கவில்லை. உடனே பிறேக்கை அழுத்தினான். எதுவுமே நடவாததுபோல் மற்ற வாகனம் போய்விட்டது என்ன நடந்ததென்று யாருக்கும் தெரியவில்லை: எல்லோரும் எட்டி எட்டி வாசலைப் பார்த்தார்கள். அவன் சீற்றை விட்டிறங்கி மறுபக்கத்து ஓடிவந்தான்.

''...ஐயோ சின்னப்பெடியன். உள்ளுக்கை வந்து நின்றிருக்கலாமே...''

யாரோ குளறினார்கள்.

மனம் பதறிப்போக ''யார் யார்'' என்று ஓடிவந்தான்.

பக்கத்தில் அந்த வளைவின் மூலையில் கவனிப்பாரற்றுக் கிடந்த மின்கம்பமொன்று இரத்தத் துளிகள் சிதறிப்போய்ச் சிவப்பாயிருந்தது.

''...ஓ தம்பி பகீர்...?''

கௌரி வாசலுக்கருகில் இறங்கி நின்று வாய்பொத்திக் கலங்குவது தெரிந்தது.

''...பகீர் எங்கே...சின்னவன் பாவம்...அவனை நான் கவனிக்கமறந்துபோனேன்..'

தலை சிதறிப்போய் காற்சட்டையும் சிவப்பாகிப் போன சேட்டுடனும், ஒரு துடிப்புக்கூட இல்லாமல் விழுந்து கிடப்பது யார்? பகீர் போட்டிருந்த உடுப்புக்கூட ராஜனுக்கு சட்டென்று நினைவுக்கு வரவில்லை.

ஆனால் விழுந்து கிடந்த பையனைச் சூழ சில்லறைகள் சிதறிக் கிடக்க, விரிந்து போய்க்கிடந்த வலது கை விரல் இடுக்கில் இறுக்கமாகப் பிடிக்கப்பட்டிருந்த இரண்டு நூறுரூபாய்த்தாள்களும் இரண்டு ஐம்பது ரூபாய்த் தாள்களும் அது 'பகீர்'தான் என்று உறுதியாகச் சொல்லின.

(யாவும் கற்பனை) ★

# சூரியனின் திசை நோக்கி சுழலக்கூடிய வீடு

கூரையில் சூரியசக்தியை ஈர்த்துப் பிடிக்கக் கூடிய சூரியப் படலங்களைக் கொண்ட வீடுகள் ஏற்கனவே எமக்குப் பரிச்சயமானவை.

ஆனால், இப்போது தெடோரெறோஸ்ற் என்ற ஜேர்மன் கட்டடக்கலை நிபுணர் சூரிய காந்திப் பூவை அவதானித்து விட்டு அவற்றைப் போல, சூரியனின் திசையை நோக்கி சுழலக்கூடிய சூரிய வீடுகளை வடிவமைத்துள்ளார்.

கொங்கிரீட் மேடையில் அமைக்கப்பட்ட 180 தொன்கள் நிறையுடைய இந்த சுழலும் வீடு ஐந்து நிமிடங்களுக்கு ஒரு தடவை சூரியனின் முகத்தைப்பார்ப்பதற்காக சில சதம மீற்றர்களால் சுழல்கிறது. இந்தச் சுழற்சியை 20 வாற்று மோட்டார் ஒன்று செய்து கொடுக்கிறது! ★

# குரல் கொடுக்கும் கணனி

பேச்சாற்றல் இழந்தவர்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடிய கணனி ஒன்று ஸ்கொட்லாந்தில் உருவாக்கப்பட்டதைத்தொடர்ந்து பார்வையற்றவர்களுக்கும் பயன்படக்கூடிய கணனி வகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சாதனையை மூன்று இந்திய விஞ்ஞானிகள் நிகழ்த்தியுள்ளனர்.

இந்தப் புதுவகைக் கணனியிலுள்ள நவீன மின்னணு சாதனம் கணனித் திரையில் காட்டவேண்டிய தகவல்களை ஒலிவடிவில் மாற்றிக் கொடுக்கின்றன.

கணனிப் பாவனையாளர் கூறும் தகவல்களை அருக்கெழுத்து முறையில் தானாகவே குறிப்பெடுத்துக் கொள்ளும் இக்கணனியில், தகவல்களை பிரெய்லி எழுத்துக்களாக மாற்றிக் கொடுக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது.

இதனை எஸ். ராம் கோபால், ஜே. எ. திவாகர், எம். பி. சீனிவாசன் ஆகிய மூன்று இந்திய விஞ்ஞானிகளே கண்டுபிடித்தனர். ★

# அதிசய குளிசைப் பெட்டி

நியூயோர்க்கிலுள்ள மவுண்ட் வேர்னொன் தொழிற்சாலையில் அதிசயக் குளிசைப்பெட்டி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

ஒருபக்கம் மருந்துக் குளிசைகளையும் மறுபக்கம் நீரையும் நிரப்பக்கூடிய இப்பெட்டி, மருந்து உட்கொள்ள வேண்டிய நேரத்தையும் தப்பாமல் ஞாபகப்படுத்தக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெட்டியில் நேரத்தைக் கணித்து வைத்துவிட்டால் போதும், சரியான நேரம் வந்தவுடன் ஓசையெழுப்பி உங்களை எச்சரித்து விடுகின்றது.

விசையை அழுத்த அழுத்த குளிசைகள் ஒவ்வொன்றாகப் பத்திரமாக வெளியேவரும். மருந்தினை விழுங்குவதற்கு நீரைத்தேட வேண்டிய அவசியமும் இல்லை. இதற்குள் இரண்டு அவுன்ஸ் நீரும் உள்ளது. ஓர் உறிஞ்சு குழாயும் அதனுடன் பொருத்தப்பட்டிருப்பதால் தண்ணீர் விட்டுக் குடிப்பதற்குக் குவளைகளும் வேண்டியதில்லை.

சட்டைப் பையினுள் எடுத்துச் செல்லப்படக்கூடியவாறு கைக்கு அடக்கமான அளவில் வடிவமைக்கப்பட்டுள்ள இதன் விலை 25 அமெரிக்க டொலர்கள்.

ஞாபகமறதி உள்ளவர்களுக்கும், அடிக்கடி தொலை தூரப் பயணம் மேற்கொள்பவர்களுக்கும் இக்கண்டுபிடிப்பு பயன்தரும். ★

# நேரம்...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)
திருக்கும். கடினமான காரியங்களைச் செய்வதற்கு, நாம் காலை நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். செய்தித்தாள்கள், வார மாத இதழ்கள் படிப்பது, துணிக்கு ஸ்திரி போடுவது, வீட்டு வேலைகளைச் செய்வது போன்ற காரியங்களைச் செய்ய காலை நேரத்தைப் பயன்படுத்தக் கூடாது.

நீங்கள் யாரிடம் வேண்டுமானாலும், ''உங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டுப் பாருங்கள். அனைவரும் உடனடியாகப் பல திட்டங்களை விவரிக்க ஆரம்பித்து விடுவார்கள். அதே போன்று, ''அடுத்த இரண்டு வருட காலத்தில் என்ன என்ன காரியங்களைச் செய்து முடிக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டுப்பாருங்கள். பெரும்பாலானவர்கள் இதைப் பற்றிச் சிந்திக்காததால், பதில் சொல்ல முடியாமல் திண்டாடுவார்கள்.

வாழ்க்கையில் சாதனைகளைப் படைக்க விரும்புபவர்கள் முதலில் தாங்கள் என்ன என்ன காரியங்களைச் செய்து முடிக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அடுத்ததாக, ஒவ்வொரு காரியத்தையும் எப்படிச் செய்யவேண்டும் என்ற திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டும்.

குறைந்த காலத்தில் நிறைய காரியங்களை நல்ல முறையில் செய்து முடிப்பவன்தான் வெற்றி வீரனாக உருவெடுப்பான்.

ஆதலால் ஒவ்வொரு காரியத்தையும் செய்து முடிக்கும் காலவரம்பையும் நிர்ணயித்துக்கொண்டு, கடினமான உழைப்பின் துணைகொண்டு, தான் ஏற்கனவே நிர்ணயித்த காலவரம்பிற்குள் அந்தக் காரியங்களைச் செய்து முடிக்க வேண்டும்.

பொய் சொல்வதால் காலம்தான் வீணாகும். தான் சொன்ன பொய்யை உண்மை என்று நிரூபிக்க மீண்டும் மீண்டும் பல பொய்களைச் சொல்லி, கடைசியில் நன்றாக மாட்டிக்கொண்டு அவமானப்பட வேண்டியிருக்கும்.

கடந்த காலம் செத்துப் போனவைகளின் பட்டியலில் சேர்ந்துவிட்டது. எதிர்காலம் கற்பனை கலந்த கனவுதான். நிகழ்காலம் ஒன்று தான் நம் கைகளுக்கு எட்டும் தொலைவில் இருக்கிறது.

நிகழ்காலத்தை நாம் நன்கு பயன்படுத்திக் கொண்டால் நம்முடைய எதிர்காலம் தானாகவே சிறப்பாக அமைந்துவிடும்.

உங்களுடைய ஐம்பதாவது வயதில் நீங்கள் ஏழ்மையில் அவதிப்பட்டு வந்தால், நீங்கள் கட்டாயம் உங்களுடைய நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளாதவராகத் தான் இருப்பீர்கள்,

வாழ்க்கை என்பதே நேரத்தைக் கொண்டுதான் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தன் நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டவனுக்கு செல்வம், மகிழ்ச்சி, புகழ், உயர்பதவி போன்றவைகள் அனைத்தும் கிட்டும். ★

# தைவானில் பீதி!...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)
கலக்குக் கலக்கி ஓய்ந்தது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஹொங்கொங் நிர்வாகம் எடுத்த தீவிர தடுப்பு நடவடிக்கைளின் உச்சமாக லட்சக்கணக்கான கோழிகளும், குஞ்சுகளும் ஒரே நாளில் தீயில் எரித்து அழிக்கப்பட்டன.

மதவாதிகளின் தீவிர எதிர்ப்பின் மத்தியிலும், பண்ணையாளர்களின் கலக்கத்தின் மத்தியிலும் இந்தக் 'கோழிப் படுகொலை'களை ஹொங்கொங் நிர்வாகம் நிறைவேற்றியது.

அதன் பின்னர் அந்தக் கொடிய வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதேபோன்று கடந்த ஆண்டு மார்ச் மாதகாலப் பகுதியில் தைவானில் ஏற்பட்ட ஒரு வகைத் தொற்று நோய்ப் பரவலுக்கு பன்றிகளில் புதிதாகத் தோன்றிய ஒரு கிருமியே காரணம் எனக் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அங்கு சுமார் மூன்று லட்சம் பன்றிகள் அழித்தொழிக்கப்பட்டன. இதனால் பன்றி இறைச்சி வர்த்தகத் துறையினர் பாதிக்கப்பட்ட போதும் அந்நோய் கட்டுப்படுத்தப்பட்டது.

கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வரும் போதும் புதிது புதிதாகத் தலைகாட்டும் வைரஸுகள் மருத்துவ உலகிற்குத் தொடர்ந்தும் சவால் விடுத்து வருகின்றன. ★

# இந்தவார இராசி பலன்...

(VIIIஆம் பக்கத்தொடர்ச்சி)
இருக்கள். உறவினருக்கு நல்லதல்ல. வாய்வு, நோக்கள், கைகால் உளைவு, வயிற்று எரிவு, உள்உறுப்புக்களால் வருத்தங்கள் சிலருக்கு ஏற்பட இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்; திங்கள், வெள்ளி.

மகரம்: என்ன நிதானமாகச் சிந்தித்தபடி இருக்கிறீர்கள்! எதையும் போராடித்தான் பெறமுடியும். கலகம் பிறந்த இடத்திலேதான் நியாயம் பிறக்கும். தொழில் ஸ்தானத்தில் பல புதிய பிரச்சினைகள் ஏற்படலாம். மேலதிகாரிகள் சினப்பர். பல பொறுப்புக்கள் தேடிவரும். காற்றுள்ள பொழுது தூற்றிக்கொள்ளுங்கள். தோல்வருத்தங்கள், வயிற்று நோ, நரம்புத் தளர்ச்சி, காயங்கள், பழைய நோக்கள், சல வருத்தங்கள், வாய்வுப்பீடைகள் என்பனவற்றால் வருந்துவீர்கள். தகுந்த வைத்தியமும் ஆலய தரிசனமும் நல்ல பலன்களைத் தரும்.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, திங்கள்.

கும்பம்: எந்த அலுவலையும் விசித்திரப் போக்குடன் அணுகுவீர்கள். மனித வாழ்க்கை இறப்புடன் போய் விடுமா? எனக் கேட்பீர்கள். ஆத்மீகத்துறையில் ஆழமாக அறிந்து கொண்டிருக்கும் தன்மை ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் மந்தநிலை ஏற்படும். அதிக பொருள் சிக்கல் ஏற்படும். அதிக லீவுகளால் மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாகலாம். கைகால் வலி, இருதயவியாதிகள், வாத உளைவுகள் என்பன இருக்கும். சிலருக்கு சனித் தொல்லைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, திங்கள்.

மீனம்: வாழ்வில் எதிர் நீச்சல் காலமாகும். விதி ஓடி ஓடி விரட்டியபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் பொருளால் முடக்கம் ஏற்பட்டபடி இருக்கும். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினைகள் ஏற்படலாம். கூடி இருப்பவர்கள் குழிபறிக்கப் பார்ப்பார்கள். நாடிவருவதெல்லாம் நன்மைக்கு அல்ல, தேடித் தேடி அலைந்தபடி இருப்பீர்கள். களவு, நடக்கலாம். எதிலும் இரட்டைக் கருத்துகள் ஏற்படும். வயிற்று வருத்தம், சளி, கைகால் நோ, மனஉளைச்சல் ஏற்பட்டபடி இருக்கும். ஆஸ்பத்திரியிலோ ஆலயத்திலோ உங்களைக் காணலாம் என முதலில் அறியவேண்டும். ஓடி ஓடித்திரியாமல் ஓர்இடத்திலிருந்து செயற்படுங்கள் பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, திங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

(3)

XI ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### வார்த்தை விளையாட்டு

அமுது, அன்பு, அகன், அடை, அட்டை, அடி, அறை, அதி, அதிக, கமுகு, கடை, கட்டை, கட்டி, கடிது, கறை, கதி, முன்பு, முகன், முதுகு, முன், முது, முடை, முட்டை, முட்டி, முடி, முறை, முடிபு, புகு, புது, புடை, புட்டி, புதிது, குகன், குடை, குட்டை, குடி, குட்டி, குறை, குதி, துடை, துடி, துறை, துதி, பா, பாறை, பாகு, பாட்டி, பாடை, பாகன், பாதி, தின், திறை, திகதி, திட்டி.

### இயலுமா?

(1) தாய்—மகன் உறவு.

(2) 19 மாம்பழம், ஒரு கொய்யாப்பழம், என்பது இலந்தைப்பழம்.

| | | | |
|---|---|---|---|
| 106 | 92 | 93 | 103 |
| 95 | 101 | 100 | 98 |
| 99 | 97 | 96 | 102 |
| 94 | 104 | 105 | 91 |

(4) (i) ஓரிலக்க எண்கள் ஒன்பது (1 முதல் 9 வரை—பூஜ்ஜியம் நீங்கலாக).

(ii) ஈரிலக்கம்—தொண்ணூறு (10 முதல் 99 வரை).

(iii) மூவிலக்கம்—தொளாயிரம் (100முதல் 999 வரை).

### செய்து பாருங்கள்

(1) 13, 212. (பன்னீராயிரமும், பன்னிருநூற்றுப் பன்னிரண்டும் சேர்ந்தால் 13 ஆயிரத்து 212 தானே!).

(2) முப்பது சதுரங்கள்.

(3) கணக்கில் இரண்டு தவறுகள்தான் உள்ளன. ஆனால் புதிரில் மூன்று தவறுகள் உள்ளன என்று குறிப்பிட்டிருப்பதுதான் மூன்றவது தவறு.

## அரசின் மௌனம்...

(II ஆம் பக்கத் தொடர்)
குற்றவாளி தெரிவித்த தகவல் உண்மையா? இல்லையா?—என்பதனை ஆராயாமல் எடுத்த எடுப்பில் புதைகுழிகளைத் தோண்ட முடியுமா?—என்று அமைச்சரொருவர் கேட்டிருந்தார். எதுவும் தெரியாதவர்போல இந்த விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு இரகசியப் பொலீஸாரை விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டிருக்க வேண்டுமே?—என்றும் அவர் கேட்டிருந்தார்.

இத்தகைய ஓர் அணுகுமுறை அரசாங்கத்திடம் இருக்குமானால் செம்மணி விவகாரத்தில் அது மனவிருப்பத்துடன் நடந்து கொள்ளும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. வேண்டுமானால், உலக அரங்கில் பெயர் கேட்பதற்காக— ஒரு கண்துடைப்புக் காரியமாக — வேண்டா வெறுப்பாக ஏதாவது செய்யக் கூடும்.

புதைகுழிகள் பற்றித் தகவல் கிடைத்து இரண்டு வாரங்களாகி விட்டன. இது விடயத்தில் தமிழ்க்கட்சிகள் வேகத்துடன் செயற்படவில்லை. இப்பத்தி எழுதப்படும் வரை எந்தத் தமிழ் கட்சியும் ஜனாதிபதி சந்திரிக்காவை நேரில் சந்தித்து விசாரணை மற்றும் தோண்டுதல் வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டதாகத் தகவல் இல்லை. நாம் அதற்கு முயற்சிக்கிறோம் என்று கூறினால் காரியம் ஆகிவிடுமா? அரசுக்கு நெருக்குதல் கொடுப்பதாக வெறும் பத்திரிகை அறிக்கைகளோடு நின்றால் போதுமா?

யாழ்ப்பாணத் தமிழர்களைச் சோகத்திலும் அச்சத்திலும் ஆழ்த்தியுள்ள மிகப் பெரிய விவகாரம் இது என்பதைச் சுட்டிக்காட்டி, அரசைச் செயலில் இறங்கத் தூண்டும் பணியில் இக்கட்சிகள் இன்னும் ஈடுபட்டதாக இல்லை, இது ஒரு முக்கியமான விடயம்; பாரதூரமான விவகாரம்; இதில் உடனடி நடவடிக்கை தேவை என்பதனை விளங்க வைத்து ஜனாதிபதியுடன் ஒரு நேரடிச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்ய முடியாத கட்சிகள் கொழும்பிலிருந்து வேறு எதனைத்தான் சாதித்து விடப் போகின்றன?

செம்மணிப் பிரதேசம் ஒரு சதுப்பு நிலப் பகுதி. இந்தப் பிரதேசம் மக்களின் நடமாட்டத்திற்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இரவிலோ, பகலிலோ அங்கு தாம் திட்டமிடுவது போல இராணுவத்தினர் எதனையும் செய்துகொள்ள முடியும். சதுப்புநிலத்தைத் தோண்டி, சடலங்களையோ, எலும்புக் கூடுகளையோ அகற்றிவிட்டு மூடிவிட்டால் தோண்டப்பட்ட அடையாளம் தெரியாது என்று பரவலாகப் பேசப்படுகிறது. இப்படியிருக்க இது விடயத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆகும் காலதாமதம், சம்பவத்தை அப்படியே இருட்டடித்துவிடும்.

ஆகவே தமிழ்க் கட்சிகள் இதுவிடயத்தில் வேகமாக விரைவாகச் செயற்பட்டு— அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்காவிடில் குடாநாட்டில் காணாமல் போன இளைஞர்—யுவதிகள் பற்றிய எந்தவித தகவலையும் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு துர்ப்பாக்கியநிலை ஏற்படலாம்.

### பிந்திய தகவல்:

செம்மணி விவகாரத்தில் ஒரு முடிவுக்கு வருமுன்னர், அப்பகுதியில் சடலங்கள் புதைக்கப்பட்டதாக தகவல் கூறிய— கிருசாந்தி கொலை வழக்கின் முதலாவது குற்றவாளியான— லா.கோப்ரல் சோமரத்னராஜபக்ஷவை தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரிக்கவுள்ளது. ஆணைக்குழுவின் நீண்ட நேரக் கூட்டத்தில் இந்த முடிவே எடுக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

மேலும் செம்மணி விவகாரத்தில் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி. சில்வாவை கடந்த வாரம் அழைத்துஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆலோசனை நடத்தியதாகவும், அதன் தொடர் பெறுபேறாகவே மனித உரிமைகள் ஆணைக்குழு கூடியதாகவும்உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

★ ★ ★

தென்னிலங்கையிலுள்ள ஐந்து மாகாண சபைகளுக்கும் அடுத்த (ஓகஸ்ட்) மாதம் 28 ஆம் திகதி தேர்தல்கள் நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்து விட்டார். சட்டத்தின் பிரகாரம் அவர் தமது பணிகளை செய்துள்ள போதிலும் தேர்தல் நடைபெறமாட்டாது என்ற கருத்தையே தென்னிலங்கையில் நிலவுகிறது.

ஆரம்பத்திலேயே மாகாண சபைத்தேர்தல்களை எதிர்க்கட்சியின் ஒத்துழைப்போடு ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சி எடுத்தது. ஆனால் எதிர்கட்சிசமயோசிதமாக அந்தப் பொறிக்குள் அகப்படாமல் தப்பித்கொண்டு விட்டது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் தான் விழுந்தும்மீசையில் மண்படவில்லை என்று கூறுபவனைபோல மாகாண சபைத் தேர்தல்களைநடத்தப்போவதாக அரசு அறிவித்தது. ஆனால் பிரதிப்பாதுகாப்பு அமைசசர் காட்டிய எதிர்ப்பினால் அரசு தனதுமுடிவிலிருந்து பின்வாங்கியது. மாகாணசபைத் தேர்தலையும், வடக்கு—கிழக்குபோரையும் வெகு சாமர்த்தியமாக இணைத்துபிரதிப்பாதுகாப்பு அமைச்சர் முன்வைத்த காரணத்தை அரசாங்கத்தினால் ஒதுக்கிவிடமுடியவில்லை.

அதன் பெறுபேறாக மாகாணசபைத் தேர்தல்களை ஒத்திவைக்கும் விடயத்தை அமைச்சரவையில் ஆராய்ந்து உத்தியோகபூர்வமாக அறிவிக்க அரசு விரும்பியது. அவரசகாலச் சட்டத்தை நாடு முழுவதும் விஸ்தரித்து மாகாணசபைத் தேர்தல்களை ஒத்தி வைப்பதே அரசின் திட்டமாகும். இது குறித்து ஆராய்வதற்காகக் கடந்த புதன்கிழமை அமைச்சரவை கூடியது. எனினும் வழமையாக நடத்தப்படும் அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிந்திய பத்திரிகையாளர் மாநாடு அடுத்த நாள் வியாழக்கிழமை நடைபெறவில்லை. நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாட்டாக மைத்திரிபால சேனநாயக்காவின் இறுதிக் கிரியைகளும் அன்றைய தினமே நடைபெற்றன. அதனால் மாகாணசபைத் தேர்தல்கள் சம்பந்தமான தீர்மானம் மூடுமந்திரமாகவே இருந்தது.

தேர்தலுக்குத் திகதி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து மாகாண சபைகளில் இரண்டில் மட்டுமே ஆளும் கட்சி அப்போட்டில் வெல்லக் கூடிய சாத்தியம் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. எனினும் இது விடயத்தில் அரசாங்கம் தனது பலவீனத்தை வெளிக்காட்ட விரும்பவில்லை.

★

## காதலும் காதலி....

(I ஆம் பக்கத் தொடர்)
பொழுதுபோக்கு விளையாட்டு என்று அவளுக்குக் கற்றுக் கொடுத்தது யார்? மண்ணால் செய்த பொம்மையும் உணர்ச்சிகளாளான மனிதனும் ஒன்றுதானா அவளுக்கு? ஒரு பொம்மையை உடைத்து விட்டு மற்றொரு பொம்மையை எடுத்துக் கொள்வது போல், ஒரு மனிதனை மறந்துவிட்டு இன்னொரு மனிதனை மணந்து கொண்டாளா?

அவள் ஆசையோடு வாசிக்கிற வீணையில், ராகங்கள் மாறுவது போல் அவளுடைய வாழ்க்கை வீணையிலும் ராகங்கள் மாறிப் போனது நியாயந்தானா? கூந்தலில் சூட்டிக் கொள்கிற மலர்கள் மாறலாம். இதயத்தில் இடம் பெறுகிற காதல் மாறலாமா?

அவள் எதற்காக என்னை நிராகரித்தாள்? அவளைச் சந்திப்பதற்கு முன்பு என் இதயம் வெறும் கருங்கல்லாய்க் கிடந்தது. தன் நயன உளிகளால் அவள்தான் அதைச் செதுக்கிச் செதுக்கி ஒரு சிலையாக மாற்றினாள். இப்போது... சிலை இருக்கிறது சிற்பியைக் காணோம்.

ஒரு நரக நாளில் அவள் சொன்னாள்:- ''இதுவரை காதலர்களாய் இருந்தோம். இன்று முதல் நண்பர்களாய் இருப்போம்.'' இப்படிச் சொல்ல அவளால் எப்படி முடிந்தது? காதல் என்ன கர்நாடக இசையா...? கொஞ்ச நேரம் கல்யாணி பாடிவிட்டு, அடுத்த நிமிடம் நீலாம்பரியை மீட்டுவதற்கு?

இயற்கையின் தர்மத்தை என காதலி அறியவில்லை. பூ காயாகலாம்; காய் பூவாக முடியாது. நண்பர்கள் காதலர்களாகலாம்; காதலர்கள் நண்பர்களாக முடியாது.

அவள் ஏன் அப்படி மாறிப் போனாள்? அவளை என்னால் எப்படி மறக்கக்கூடும்? மரணம் வரை மறக்கமுடியாத அந்தக் காதல் நினைவுகளை மனம் இப்போதுகூட ஒரு மயக்கத்துடன் அசைபோடுகிறது. முள் இலைகளைக் கடித்து நாக்கில் இரணமாகிப் போனாலும் மீண்டும் அந்த இலைகளிலேயே ஆசை வைக்கும் ஒட்டகத்தைப் போல் என் மனமும், இரணமாக்கி இரத்தத்தைக் கசிய வைக்கும் அந்த தேவதையின் நினைவுகளையே திரும்பத் திரும்ப வலம் வருகிறது.

இளமைக் காலத்து வாழ்க்கை வண்ணங்களை முதுமை நாற்காலியில் அமர்ந்து ஒருவன் நிறம் பிரித்துப் பார்த்து நெடுமூச்சு விடுவதுபோல் நானும் என் கடந்தகாலக் காதல் நினைவுகளில் கரைந்து போகிறேன். நிலத்திற்கடியில் செல்லும் நீரோட்டம் போல் அவளுடைய நினைவுகள் அடுத்தவர்க்குத் தெரியாமல் சதாசர்வகாலமும் என் நெஞ்சில் சலசலக்கின்றன.

அஜந்தா ஓவியங்களை விடவும் அவளுக்காக என் மனக் குகையில் நான் வரைந்து வைத்த காதலோவியங்கள் அழகானவை. அந்த ராஜ வீணையின் நாத நரம்புகளில் காதற் பண் மீட்டிய காலத்தை நினைக்கிறேன். குற்றால அருவியாய், கொல்லிமலைத் தேனாய்வற்றாத கங்கையாய், வாசமுள்ள ரோஜாவாய் அவள் என்னுள் ஆசைகளை வளர்த்த அந்த வசந்த நாள்களின் நினைவுகளில் நீந்துகிறேன்.

அவளுடைய பலாச்சுளை வார்த்தைகளை பருகிய மயக்கத்தில் நான் கண்ட நிலாக்காலக் கனவுகளில் நிம்மதியைத் தேடுகிறேன். புள்ளிமான்போல் பறந்து அவள் பண்ணிசைத்துப் பாடுவதை என் இதய விணையில் இரகசியமாக வாசித்து ஆன்மாவின் ரணங்களை ஆற்றப் பார்க்கிறேன்.

கடற்கரை மணலில் அமர்ந்து நட்சத்திரங்களைக் கணக்கிட்டதும், கடலலை வந்து கால்களைத் தழுவ காலபிரக்ஞையே அற்றுப் போய், கண்களில் கனவு மிதக்கக் காதலில் கரைந்து போனதும், யாருமற்ற தனிமையில் மலர்ச் செடிகளுக்கு நடுவில் அமர்ந்து இராகரூபத்தில் இசை ஓவியங்களுக்கு உயிர் கொடுத்ததும் மறக்கக் கூடிய அனுபவங்களா?

மனம் என்ன அவ்வளவு மலினமானதா? நினைத்த போது நிறத்தை மாற்றிக் கொள்ள நெஞ்சத்தால் ஆகுமா? காதலென்பது ஒரு மகா யக்ஞம். அது தவத்தை விடவும் புனிதமானது.

இதயத்தின் கனத்தை இறக்கி வைக்க இப்போதெல்லாம் கைகளைக் கட்டியபடி நான் கடற்கரையில் நிற்கிறேன், என்பார்வைமுடியும் இடத்தில் பார்த்து கிடக்கும் கடலும், விரிந்து கிடக்கும் வானமும் இணைந்து கிடப்பதுபோல் இயற்கையின் பொய்த் தோற்றம் மாயம் காட்டுகிறது.

உண்மையில் கடலும் வானமும் கலக்கக்கூடுமா? எனக்கு ஓர் உண்மை புரிந்து விடுகிறது. தொட்டு அணைக்க அலைக்கரம் நீட்டும் கடல் நான். நெருங்க நெருங்கப் பிடிகொடுக்காமல் விட்டு விலகி விளையாட்டுக் காட்டும் அந்தத் தொலை வானம் என் காதலி.

★

## அம்பலமாகும்...

(IV ஆம் பக்கத் தொடர்)
பொருள்களுமே நட்சத்திரங்களும் கிரகங்களும் என்கிறார்கள்.

அன்றைய பிளப்பில் பிரிந்த நட்சத்திரங்கள் இன்றும் பிளப்பு மையத்தில் இருந்து வெளியே வீசப்பட்டுக்கொண்டே இருக்கின்றன என்பதுவும், அதனால் இன்னும் பிரபஞ்சம் விரிவடைந்துகொண்டே செல்கிறது என்பதுவும் விஞ்ஞானிகளின் வாதம்.

இவ்வாறு சிதறிய சடப் பொருள்கள் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக நிலையெடுத்துத் திரண்டு கொண்டன. அவை நிலையான சக்தி முதல்களாகவோ (நட்சத்திர வகை) அல்லது ஆறி இறுகிய கிரகங்களாகவோ, தூசிப் படலமாகவோ சுழன்று கொண்டிருக்கின்றன.

புதிய நட்சத்திரங்கள் பிறப்பதை நேரில் தொலை நோக்கி மூலம் அவதானித்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள். இந்த வாய்ப்பு கடந்தமார்ச். ஏப்ரல் மாதங்களில் கிட்டி இருந்தது. எனினும் அவற்றின் வளர்ச்சியைத் தொடர்ந்துகண்காணிக்க பல மில்லியன் ஆண்டுகள் அல்லவோ வேண்டும்? அத்தனை காலமும் தொடர்ந்து ஒரே நட்சத்திரத்தையே குறி வைத்தபடி வலுவுள்ள தொலைநோக்கிகளை ஒதுக்கி வைக்க விஞ்ஞான உலகம் தயாரில்லை.

இதற்கு மாற்றுவழி? பிரபஞ்சத்தே வெவ்வேறு வயதுகளில் — வெவ்வேறு வளர்ச்சிப் படிமுறைகளில் தென்படும் நட்சத்திரத் தொகுதிகளை அவ்வப்போது ஆராய்ந்து அவற்றின் வரலாற்றை வடிப்பதுதான் ஒரே வழி.

இதன்படி சூரியனும் சூழவுள்ள கிரகங்களும் போன்ற ஓர் அமைப்பு ஒன்று உருவாகும் விதம் இவ்வாறு கருதப்படுகிறது:-

நெபுலா எனப்படும் அடர்ந்த தடித்த தூசிப் படை ஒரு வெடிப்பின் மூலம் பிறக்கிறது. பல வெவ்வேறு அளவுகளையுடைய தூசி [illegible] கிரகங்கள் [illegible] சடப்பொருள்கள் அங்கே சுழலத் தொடங்குகின்றன.

இவை இவ்வாறு சுமார் ஒரு மில்லியன் ஆண்டுகள் சுழலும்போது மத்தியில் சக்தியை வெளிவிடுகின்ற — எரியும் — சடப்பொருள்கள் கூடுகின்றன. சூழவும் தொடர்ந்து தூசிப்படை சுழன்று கொண்டேயிருக்கும். இச் சுழற்சி 10 மில்லியன் ஆண்டுகளுக்குத் தொடரும் போது தூசிப்படைகள் கட்டுத் தட்டாக தட்டையாகி— ஒரு தளத்தில் — ஒளிரும் மையத்தைச் சுற்றத்தொடங்குகின்றன.

பெரிய கிரகங்கள் தூசிப் படைகளின் சேர்க்கையால் முதலில் தோன்றி விடுகின்றன. இச் சுழற்சி 100 மில்லியன் ஆண்டுகள் தொடரும் போது தூசிப்படைகள் பாறைகளாகி இறுகிய கிரகங்களைத் தோற்றுவிக்கின்றன. இவ்வாறு தோன்றும் திண்மக் கிரகங்களே பூமியை ஒத்தவை எனலாம். ★

## பயந்த...

(IX ஆம் பக்கத் தொடர்)
காணப்படும். வரிக்குதிரைகள் பொதுவாகச் சிறு சிறு கூட்டங்களாக வாழும். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஓர் ஆண் தலைமை தாங்கி வழி நடத்தும்

வரிக்குதிரை சிறிய ஒலியைக் கூடத் தெளிவாகக் கேட்கும் திறனுடையது. நல்ல பார்வையும் உண்டு. மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் ஓடக்கூடியது. இவ்வளவு திறமைகளிருந்தாலும் இது மிகவும் அச்சமுள்ள பிராணி. சிறிய சத்தம் கேட்டாலும் விரைந்து ஓடிவிடும். சிற்சில சமயங்களில் தன் பகைவரோடு இது முரட்டுத்தனமாகச் சண்டையிடுவதும் உண்டு. இது மிகவும் பிடிவாதமுள்ள விலங்கு. எனவே இதனை எளிதில் பழக்க முடியாது. வரிக்குதிரை சுமார் 15 ஆண்டுகள் உயிர் வாழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதியோப்பிய - எரித்திரிய எல்லைத் தகராறு

# முழு அளவு யுத்தமாக உருவெடுக்கும் ஆபத்து!

எதியோப்பியாவுக்கும் எரித்திரியாவுக்கும் இடையிலான எல்லைச் சண்டைகள் தற்பொழுது ஓய்ந்துள்ள போதிலும் பதற்றம் இன்னும் தனியவில்லை.

மூன்றாவது நாடு ஒன்றின் தலையீடு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

ஆனால் எரித்திரியா மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து வருகிறது.

ஏற்கனவே அமெரிக்காவும் ருவாண்டாவும் இணைந்து தீர்வுத் திட்டம் ஒன்றை முன் வைத்தன. பிரச்சினைக்குரிய பகுதிகளில் இருந்து இரு தரப்பினரும் தமது படைகளை வாபஸ் பெற வேண்டும் என்று இந்த தீர்வுத் திட்டத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டது. ஆனால் பதாம் (Badame) நகரில் இருந்து தனது படைகளை விலக்கிக் கொள்ள எரித்திரியா மறுத்து விட்டது.

இத்தாலிக்கும் எதியோப்பிய சக்கரவர்த்திகளுக்கும் இடையிலான சரித்திர கால ஒப்பந்தங்களை எரித்திரியா சான்றாக காட்டி வருகிறது.

கடந்த மே 6 ஆம் திகதி பதாம் நகருக்கு தனது படைகளை அனுப்பி அதனை எரித்திரியா பலவந்தமாகக் கைப்பற்றிக் கொண்டது. 250 சதுர மைல் கொண்ட முக்கோண பாறைப் பிரதேசத்தில் இந்த நகரம் அமைந்திருக்கிறது. இந்தப் பகுதி முழுவதுமே தகராற்றுக்குரிய பகுதிதான்.

### இத்தாலியின் காலனித்துவ நாடு

இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் இத்தாலியின் காலனித்துவ நாடாக எரித்திரியா இருந்து வந்தது.


உலக மகா யுத்தத்தில் இத்தாலி தோல்வி அடைந்தபோது எரித்திரியாவை எதியோப்பியா கைப்பற்றிக் கொண்டது.

எதியோப்பியாவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து விடுபட வேண்டும் என்ற கோரிக்கை எரித்திரியாவில் சிறிது சிறிதாக வலுப் பெற ஆரம்பித்தது. பின்பு அது போராட்டமாக உருவெடுத்தது.

1958 ஆம் ஆண்டு எரித்திரிய விடுதலை முன்னணி (Eritrean Liberation Front) அமைக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு எதியோப்பியாவில் ஜனாதிபதி மென்கிஸ்டு ஹேய்லேமாறியம் தலைமையிலான மார்க்சிய அரசு பதவி கவிழ்வதற்கும் 1993 ஆம் ஆண்டு எரித்திரியா தனி நாடு ஆவதற்கும் எரித்திரிய விடுதலை முன்னணியே பிரதான காரணமாக இருந்தது.

### 30 வருடகாலம் நடந்த உள்நாட்டு யுத்தம்

ஆபிரிக்காவில் இடம்பெற்ற நீண்ட உள்நாட்டு யுத்தங்களில் எதியோப்பிய உள்நாட்டு யுத்தமும் ஒன்றாகும்.




மார்க்சிய அரசுக்கு எதிராக 30 வருடகாலம் இந்த யுத்தம் நடந்தது.

ஐசாயாஸ் அபேவேர்கி (Isayas Afewerki) தலைமையிலான எரித்திரிய விடுதலை முன்னணியும் தற்போதைய எதியோப்பிய ஜனாதிபதி மேலெஸ் சேனாவி (Meles Zenawi) தலைமையிலான கிளர்ச்சிக்காரர்களும் இணைந்தே மார்க்சிய அரசுக்கு எதிராகயுத்தம்நடத்தினார்கள்.

ஐசாயாஸ் அபேவேர்கியின் படைகள் மார்க்சிய அரசபடைகளை எதிர்த்து எரித்திரியாவில் போரிட்டன

மேலெஸ் சேனாவியின் படைகள் ஏனைய இடங்களில் தாக்குதல்களை நடத்தின.

இந்த சண்டைகளின்போது 1980 களில் எரித்திரிய விடுதலை முன்னணி பல வெற்றிகளை ஈட்டியது. 1990 இல் எரித்திரியாவின் தலைநகர் அஸ்மாறாவும் (Asmara) எரித்திரிய விடுதலை முன்னணியிடம் வீழ்ச்சியடைந்தது.

1991 இல் எதியோப்பியாவில் மார்க்சிய அரசு கவிழ்க்கப்பட்டு மேலெஸ் சேனாவி எதியோப்பிய ஜனாதிபதி ஆனதும் மார்க்சிய அரசுக்கு எதிராக தம்முடன் இணைந்து போராடிய எரித்திரிய விடுதலை முன்னணிக்கு உதவ முன்வந்தார்.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி எரித்திரிய மக்கள் தனிநாட்டுக்கு ஆதரவாகவாக்களித்தால் எரித்திரியா தனிநாடு ஆகலாம் என்று அறிவித்தார்.

சர்வஜன வாக்கெடுப்பில் தனிநாட்டுக்கு ஆதரவாக பெரும்பாலான எரித்திரிய மக்கள் வாக்களித்தனர். எரித்திரியா தனி நாடு ஆகி 1993 இல் ஐ.நா.விலும் அங்கத்துவம் பெற்றது. ஐசாயாஸ் அபேவேர்கி எரித்திரிய ஜனாதிபதி ஆனார்.

1997 வரை எதியோப்பிய நாணயமான பிர் (Birr) நாணயத்தையே எரித்திரியாவும் பயன்படுத்தி வந்தது. எரித்திரியா கடந்த வருடம் தனி நாணயத்தை வெளியிட்டபோது முதல் தடவையாக இரு நாடுகளுக்கும் இடையில் கசப்புணர்வுகள் தோன்ற ஆரம்பித்தன.

எரித்திரியாவுடன் நடத்தி வந்த எல்லைவர்த்தகத்தை இது பாதிப்பதாக ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருந்த எதியோப்பியா கருதியது.

எரித்திரியா தனிநாடு ஆகியதும் எதியோப்பியா தனது கடல் வளத்தை முற்றாக இழந்து போனது. — இதுவும் எதியோப்பியாவின் பொருளாதார நெருக்கடி ஏற்பட காரணமாக இருந்தது.

எதியோப்பிய — எரித்திரிய எல்லைச் சண்டை சர்வதேச அரங்கில் பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது.

மார்க்சிய அரசுக்கு எதிராக இணைந்து போரிட்ட இரு தலைவர்கள் குறுகிய காலத்தில் மோதலில் ஈடுபடுவார்கள் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

மார்க்சிய அரசபடைகளுக்கு எதிரான யுத்தத்தின்போது மேலெஸ் சேனாவியின் படை அதிகாரிகளுக்கு எரித்திரிய விடுதலை முன்னணியே பயிற்சி அளித்தது.

எதியோப்பியாவுடன் ஒப்பிடும்போது எரித்திரியாவின் படைப்பலம் குறைவு. ஆனால் நீண்டகாலம் உள்நாட்டு யுத்தம் ஒன்றை நடத்தியது மூலம் சிறந்த பயிற்சி பெற்ற வீரர்களை எரித்திரியா கொண்டுள்ளது. எரித்திரிய இராணுவத்தில் 35 ஆயிரம் படையினர் உள்ளனர். தற்போது எல்லையில் ஏற்பட்ட மோதல் காரணமாக 10 ஆயிரம் ரிசேர்வ படையினரையும் எரித்திரியா சேவைக்கு அழைத்துள்ளது.

## உலக உலா

என்.பி. சிலன்

எதியோப்பிய படையில் 1 லட்சத்து 20 ஆயிரம் வீரர்கள் உள்ளனர். விமானப்படையும் உண்டு.

எதியோப்பியா விமானத்தாக்குதல் நடத்தலாம் என்று அஞ்சி எரித்திரிய தலைநகர் அஸ்மாறாவில் இருந்து மக்கள் பெரும் அளவில் வெளியேறி உள்ளனர்.

பிரச்சினைக்குரிய பாதேம் நகர் அஸ்மாறாவில் இருந்து 60 மைல் தென்மேற்கே உள்ளது.

எல்லைச் சண்டை முழு அளவிலான யுத்தமாக மாறுவதைத் தடுப்பதே அமெரிக்க—றுவாண்டா தீர்வுத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

ஏற்கனவே எதியோப்பியா தனது 9 சமஷ்டி ஆட்சிப் பிரிவுகளில் இருந்தும் அவசரமாக இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்து வருகிறது. எதியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபா தொடர்ந்து உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

எரித்திரியா சிறிய ராணுவத்தை வைத்திருந்தாலும் சிறந்த வீரர்களைக் கொண்டுள்ளதால் எதியோப்பியாவின் எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ளத் தயாராக இருந்து வருகிறது.

முழு அளவிலான யுத்தத்தைத் தவிர்ப்பது சர்வதேச அழுத்தத்திலேயே தங்கி இருக்கிறது. ★

# ஈரானில் கதாமியின் ஆட்சிக்கு சவால்கள்

கடந்த 20 ஆண்டுகளாக சீர் கெட்டுப் போய் இருந்த ஈரானிய— அமெரிக்க உறவுகளை மீண்டும் சீர் செய்யும் நடவடிக்கைகள் தற்போது இரு தரப்பிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் ஈரானிய ஜனாதிபதி மொஹமட் கதாமி அமெரிக்காவுடன் நல்லுறவுகளைச் சீர் செய்யும் தமது நடவடிக்கைகளுக்கு எதிராக உள்நாட்டில் அடிப்படை மதவாதிகளினதும் கடும் போக்காளர்களினதும் எதிர்ப்பை எதிர்கொண்டு வருகிறார்.

ஈரானிய நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் கொண்டுள்ள அடிப்படை மதவாதிகள், கதாமியின் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். கதாமியிக்கு எதிரான போராட்டத்துக்கு இவை ஆரம்ப சமிக்ஞைகள்.



கதாமி

கதாமியின் செல்வாக்கை ஒழித்துக்கட்டும் முயற்சியில் சபாநாயகரின் தலைமையில் அடிப்படை மதவாதிகள் செயற்பட்டு வருகின்றனர்.

இவர்களின் தூண்டுதலினால் கதாமியின் நெருங்கிய ஆதரவாளரான தெஹ்ரான் மேயர் ஹொசெய்ன் கபாஷி வருட முற்பகுதியில் ஊழல் குற்றச் சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டார். ஈரானிய ஆத்மீகத் தலைவர் யத்துல்லா கமேனியின் தனிப்பட்ட தலையீடு காரணமாக இவர் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த ஜூன் மாதம் கதாமியின் செல்வாக்கை ஒழித்துக் கட்டும் மற்றொரு நடவடிக்கையும் இடம் பெற்றது:

கதாமியின் மிக நெருங்கிய சகாவான உள்துறை அமைச்சர் அப்துல்லா நூரிக்கு எதிராக ஈரானிய நாடாளுமன்றத்தில் குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பதவி இழந்த நூரி கதாமியின், 8 உபஜனாதிபதிகளில் ஒருவராக பின்னர் நியமிக்கப்பட்டார். ஈரானில் உப ஜனாதிபதி பதவி, அமைச்சர் பதவியைவிட அதிகாரம் குறைந்தது. நூரி விவகாரம் கதாமிக்கு தோல்வி என்றே கருதப்படுகிறது.

1978 இல் ஈரானில் புரட்சி ஏற்படும் வரை ஈரான் அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடாக இருந்தது.

ஆயத்துல்லா கொமேனியின் தலைமையில் அப்பொழுது ஏற்பட்ட புரட்சியின் பின்னர் இடம்பெற்ற அமெரிக்க பணயக்கைதிகள் விவகாரம் அமெரிக்க—ஈரானிய உறவை மிகவும் கீழ் மட்டத்துக்கு தள்ளிவிட்டிருந்தது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா அப்பொழுது விதித்ததடை இன்னும் அமுலில் இருந்து வருகிறது.

அமெரிக்காவில் உள்ள ஈரானின் 1,100 கோடி டொலர் சொத்து இன்னமும் முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த தடைகள் அமுலில் இருக்கும் வரை அமெரிக்காவுடன் ஈரான் உறவுகளை வைத்துக் கொள்ளக் கூடாது என்று கதாமிக்கு எதிரான அடிப்படை மதவாதிகள் கருதுகின்றனர்.

சமீபத்தில் பிரான்ஸில் நடைபெற்ற உலக உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொண்ட ஈரானிய உதைபந்தாட்ட வீரர்கள் அமெரிக்க வீரர்களிடம் இருந்து அன்பளிப்பு எதனையும் பெறக்கூடாது என்று நாடாளுமன்றத்தில் உள்ள அடிப்படை மதவாதிகளால் கோரப்பட்டிருந்தது.

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் ஈரான்வெற்றி அடைந்தபோது, கர்வமுள்ள ஓர் உலக வல்லரசு மீண்டும் தோல்வி கண்டுவிட்டது என்று ஈரானிய ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லாகமேனிகருத்து வெளியிட்டார். ஆனால் ஜனாதிபதி கதாமி ஈரானிய வீரர்களைப்பாராட்டியதுடன் நின்றுவிட்டார்.

1993 ஆம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அடிப்படைமதவாதிகளைத் தோற்கடித்து பதவிக்கு வந்தவர் கதாமி. தற்பொழுது அவர் அமெரிக்காவுக்கு நேசக்கரம் நீட்டுவது ஈரானில் அவருக்கு எதிரான அடிப்படை மதவாதிகளையும் கடும்போக்காளர்களையும் மீண்டும் ஒன்றுசேர வைத்துள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org